
# முத்தமிழ் மதுரை

## புலியூர்க் கேசிகன்





மங்கை வெளியீடு

698

# முத்தமிழ் மதுரை

புலியூர்க் கேசிகன்

மங்கை வெளியீடு
சென்னை - 600 018.
☎ 9790706549 / 9790706548

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**

செயிண்ட் ஜான் சர்ச் வணிக வளாகம் 9,ராக்கின்ஸ் சாலை,
திருச்சிராப்பள்ளி-1 ☎ : 99520 34876 / 0431 2419584

விலை : ரூ. 50.00

* முதற் பதிப்பு : டிசம்பர் 2010
* © உரிமை : பதிப்பகத்திற்கே
* பதிப்பாசிரியர் : **எஸ். கௌமாரீஸ்வரி** M.A., M.L.I.S.,

* நூலின் பெயர் : முத்தமிழ் மதுரை

* பக்கங்கள் : 88

* ஒளி அச்சு : ஜெய் ஜீனா


* வெளியீடு : மங்கை வெளியீடு
B 6, திருவேணி அடுக்ககம்,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 18.

* அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ் செ - 2

CODE : **453**

**கௌரா ஏஜென்ஸீஸ்**

10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
☎ : 044-2844 3791 / 97907 06548 / 97907 06549
www.gowrabookfair.com. E-mail : gowra_09@yahoo.in / gowra09@gmail.com


அம்மாவுக்கு...



பழமுதிர்ச்சோலை கோவில்

# முன்னுரை

ஒருவர் புகழோடு விளங்க வேண்டுமானால், அந்தப் புகழுக்குரிய தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறே, ஒரு நகரம் புகழோட விளங்கவேண்டுமானாலும், அதற்கேற்ற தகுதிகள் இருக்கவேண்டும். நிலையான பெரும்புகழை இரண்டாயிரம் வருடங்கள் தொடர்ச்சியாகப் பெற்றிருந்ததுடன், இனியும் குன்றாத புகழோடு நிலவும் மதுரைப் பேரூருக்கு அத்தகைய தகுதிகள் ஏராளமாக அமைந்திருக்கின்றன. அவைகளை நினைவிற்குக் கொண்டுவந்து, மதுரையையும் மதுரத்தமிழையும் மதித்துப் போற்றுவதற்கு உதவுவதே இந்தச் சிறுநூலின் நோக்கம்.

தெய்வீக அருளும், செந்தமிழின் வளமும், தென்னவரின் மறமாண்பும், தமிழ்ச்சான்றோரின் சால்பும், மதுரையின் புகழ் மணத்தை உலகெங்கும் என்றும் பரப்பியபடியே இருக்கின்றன. சங்கம் இருந்து தமிழாய்ந்த மதுரையிலே, அண்மையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடும் நடந்து, மிகப்பெருமை பெற்றுள்ளது.

மதுரை மாநகரம், செம்மையும் சிறப்பும் கொண்ட தமிழ் மறவர் நாட்டின் கோநகராகவும், தமிழ்மொழியின் நிலைக்களனாகவும், தமிழ் நாகரிகத்தின் வாழிடமாகவும், நல்லறிவின் ஊற்றுக்களனாகவும் விளங்கிய சிறப்பெல்லாம், இந் நூலிலே தொகுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

தமிழ் மணம் நிரம்பிய இந்நூலைத் தமிழ்ப் பதிப்பகத் துறையிலேயே வியப்புமிகு சாதனைகளைப் புரிந்துள்ள வானதி வெளியிடுவது, தமிழ் வளர்ச்சிக்கு மேலும் வலிமையூட்டும். அவருக்கு என் நன்றி.


தமிழன்பர்கள் விரும்பி வரவேற்பார்கள்.

எல்லாம் தமிழன்னையின் திருவருள்.

அவள் புகழ்சால் பொன்னடிகளில் இப் புகழ்மலரைப் படைத்துப் போற்றுகின்றேன்!

சென்னை **புலியூர்க் கேசிகன்**


*30-1- 81*




கள்ளழகர் கோவில்

# பொருளடக்கம்


1. தோற்றுவாய் ..................... 1
2. நான்கு பேரூர்கள் ..................... 3
3. நிலைபெற்ற மதுரை ..................... 6
4. மதுரை எழுந்த கதை ..................... 11
5. மதுரையின் பெயர் ..................... 14
6. உலகறிந்த பேரூர் ..................... 16
7. சிவன் உவந்த மதுரை ..................... 22
8. பௌத்தர் உவந்த மதுரை ..................... 28
9. சமணர் திரண்ட மதுரை ..................... 30
10. சிலம்பு காட்டும் மதுரை ..................... 34
11. சங்க காலத்து மதுரை ..................... 43
12. நீதி சிறந்த மதுரை ..................... 47
13. பரிபாடலும் பழமதுரையும் ..................... 50
14. மதுரைக்காஞ்சியும் மதுரையும் ..................... 60
15. பாண்டியப் பேரரசர்கள் ..................... 65
16. முத்தமிழ் மதுரை ..................... 69



காந்தி மியூசியம்



மதுரை நாயக்கர் மகால்



மாரியம்மன் கோவில் தெப்பக்குளம்

# முத்தமிழ் மதுரை

## 1. தோற்றுவாய்

### வரலாற்றின் முதன்மை

நம் நாட்டின் வரலாற்றை நாம் ஆவலுடன் படிக்கின்றோம். நம் நாட்டு வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்ற அவாவும் நம்மிடம் இருக்கிறது. நம் நாட்டின்கண் முன்னாளிலே இருந்த தலைவர்களும் பெரியார்களும் நம் உள்ளத்தில் நிலையான இடம்பெற்று நிலவுகின்றனர்.

மறப்பண்பு மிகுந்த நம் நாட்டு மாவீரர்களின் வரலாறுகளை நாம் படிக்கின்றோம். நம் உள்ளமும் அதனால் வீறுகொள்ளுகின்றது.

அறப்பண்பிலே சிறந்திருந்த ஆன்றோர்களின் வரலாறுகளை நாம் கற்கின்றோம். அத்தகைய அறவாழ்விலே நம் உள்ளமும் செல்லத் தொடங்குகின்றது.

நாட்டுக்காகத் துயரங்களை ஏற்ற நல்லவர்களின் வரலாறுகள், நாட்டுப் பணியிலே ஈடுபட வேண்டுமென்ற ஆர்வத்தை நம்மிடமும் எழச் செய்கின்றன.

நீதிக்காக உயிர்துறந்த நேர்மையாளர்களின் வரலாறுகள், நன்னெறியிலே நம் உள்ளத்தைக் கொண்டு செலுத்துகின்றன.

இப்படியாகக் கடந்த காலத்தே வாழ்ந்து, செயற்கரிய செய்து சிறப்புற்ற நம் மூதாதையரின் வரலாறுகள், நம்முடைய வாழ்வின் நலனுக்கும் செம்மைக்கும் துணைபுரிகின்றன. இதனாலேதான், பெரியோர்கள், 'நம் நாட்டு வரலாற்றினை நாம் ஒவ்வொருவரும் தவறாமல் அறிந்திருக்க வேண்டும்' என்று வலியுறுத்திக் கூறுகின்றார்கள்.

### தமிழகத்தின் வரலாறு

பாரதநாடு என்ற நம் நாடானது, பல்வேறு தேசீய இனங்களையும் மொழிகளையும் தன்னுள்ளே கொண்டிருக்கும் ஒரு பரந்த பெருநாடு ஆகும். ஆகவே, பாரதநாட்டின் வரலாறு பல்வேறு தேசீய இனங்களின் தனித்த பல வரலாறுகளின்

தொகுப்பாகவே திகழ்வதாகும். அதனால், நாம் தமிழ்மக்கள் வாழும் பகுதியாகிய இத்தமிழகத்தின் வரலாற்றைப் பற்றிச் சிறப்பாக அறிந்து கொள்ள வேண்டியவர்களாகின்றோம். 'தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அதற்கொரு குணமுண்டு' என்றார், நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள். தமிழர்களாகிய நாம், நம் இனத்தின் வரலாற்றினையும், அதன் குணத்தின் சிறப்பினையும் தெளிவாக அறிந்து கொள்வது, நம்முடைய வாழ்வின் செப்பத்திற்கு உதவியாகவும், வழிகாட்டுவதாகவும் அமையும்.

## பேரூர்களின் வரலாறு

ஒரு நாட்டின் வரலாறு பெரும்பாலும் அந்த நாட்டின் அரசுகளின் தோற்றமும் மறைவும் பற்றியதாகவே அமைந்திருக்கும். அந்த அரசுகள் செய்த செயல்கள், பெற்ற வெற்றிகள், கண்ட நன்னெறிகள் ஆகியவற்றை ஒட்டியே, அவ்வந்நாட்டின் வரலாறுகளும் அமைகின்றன.

அரசுகளுக்கு அடுத்தபடியாக, அவ்வந் நாட்டிலே தோன்றிய சான்றோர்களை ஒட்டியும், அவ்வந்நாட்டு வரலாறுகள் புதுத் திருப்பத்தை அடைகின்றன. ஒரு நாட்டின் வளமும் வறட்சியும் அந்நாட்டின் வரலாற்றினை உருவாக்கிச் செல்வதும் உண்டு.

இந்த நிலையிலே, தமிழ்நாட்டின் வரலாற்றை அறிய விரும்பும்போது, தமிழ் மன்னர்களின் வரலாறுகளையும், தமிழகத்தின் வளத்தினையும் முறையே அறிந்துகொள்ள வேண்டியவர்களாகின்றோம்.

இவற்றை அறியும்போது, இவர்களின் செயல்களால் நாடு அடைந்த முன்னேற்றங்களையும் பிறவற்றையும் அறிகின்றோம். வளக்குறைவினை மாற்றுவதற்கு இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலவும் நமக்கு விளங்குகின்றன. பெற்ற வளத்தினை முறையாகப் பயன்படுத்தி இவர்கள் வாழ்ந்த அந்த வாழ்வின் செப்பமும் நமக்குப் புலனாகின்றது.

இப்படி நாம் அறியும் செய்திகள் பலவற்றுக்கும் நிலைக்களன்களாக அமைந்திருந்தவை, தமிழகத்தின் பேரூர்கள் பலவுமே யாகும். ஆகவே, பேரூர்களின் வரலாறுகளை நாம் அறியும்போது, நம் வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட சிறந்த பகுதியினை அறிந்து கொள்பவர்களாகின்றோம். இன்று பல நிலைகளிலே விளங்கும் நம் பேரூர்களின் பழைய சிறப்பினை அறிந்து கொள்ளவும், அவற்றைப் போற்றவும், இந்த

வரலாற்றறிவு உதவுகின்றது. இந்த வகையிலே, பெரும் புகழ் பெற்று அந்நாளிலே விளங்கிய மதுரைப் பேரூரின் வரலாற்றை, ஒருவாறு எடுத்துக்கூற முயல்வது இந் நூலாகும்.

## 2. நான்கு பேரூர்கள்

### மாட மதுரை

முன் காலத்தில் நம் நாட்டில் பலப்பல பேரூர்கள் விளங்கின. அவற்றுள், மூவேந்தர்களின் தலைநகரங்களாக மதுரையும், வஞ்சியும், உறையூரும் விளங்கின. பாண்டியரின் கோநகராக மதுரை விளங்கியது. வானுற உயர்ந்த மாடங்கள் விளங்க, வனப்புடன் திகழ்ந்தது அது. அந் நகரினை, 'மாடமதுரை' என்றே பலரும் புகழ்ந்து போற்றினார்கள்.

### கலிகெழு வஞ்சி

சேரர்களின் பேரூராகத் திகழ்ந்தது வஞ்சி நகரம். அங்கும் மக்கள் வளமுடன் வாழ்ந்தனர்; பற்பல தொழில்களாற்றிச் சிறந்தனர்; வசையின்றி வாழ்ந்து இசைகொண்டு திகழ்ந்தனர். மக்களின் ஆரவார ஒலி, வஞ்சிநகரத்தில் எப்போதும் எழுந்துகொண்டே இருந்தது. அதனால், 'கலிகெழு வஞ்சி' என்று சான்றோர் அதனைப் போற்றினார்கள்.

### பீடார் உறந்தை

'சோறுடைத்து சோணாடு' எனச் சோழ நாட்டினை ஆன்றோர்கள் போற்றுவார்கள். அந்தச் சோழ நாட்டின் தலைநகராக நிலவியது உறையூர். பெருமையினாலே சிறப்புற்றிருந்ததும் அதுவாகும். அதனைப் 'பீடார் உறந்தை' எனப் பெரியோர்கள் குறிப்பிடுவார்கள்.

### ஒலிபுனல் புகார்

இந்த மூன்று பேரூர்களையும் அல்லாமல், மற்றொரு பேரூரும் புலவர் போற்றும் புகழுடன் அந்நாளிலே திகழ்ந்தது. அது, காவிரியின் கழிமுகத்தே கடற்கரைப் பட்டினமாகவும் அமைந்திருந்தது. அதுவே புகார் நகரம் ஆகும். ஒலிக்கும் கடலினை ஒட்டியிருந்த அந்தப் புகார்ப் பேரூரும், ஒரு காலத்திலே சோழர்களில் ஒரு பகுதியினருடைய கோநகராக விளங்கிற்று. சிலப்பதிகாரத்தின் தலைவன் தலைவியரான

கோவலனும் கண்ணகியும், மாதவியும் பிறந்து வாழ்ந்த பெருமைக்கு உரியதும் அப்புகார் நகரமேயாகும். மாதவியின் மகளும், மாட்சி மிகுந்த சிறப்பினளுமான மணிமேகலை பிறந்து வளர்ந்ததும் அந்தப் புகார் நகரமே.

இவ்வாறு, புகழினாலே சிறந்து, புலவோர் போற்ற விளங்கிய இம்மூதூர்கள் நான்கினையும் உளமாரப் போற்றி உவந்தவர் பலராவர். அவருள், சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான இளங்கோவடிகள்,

> **நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்**
> **தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நன்னாட்டு**
> **மாட மதுரையும், பீடார் உறந்தையும்,**
> **கலி கெழு வஞ்சியும், ஒலிபுனல் புகாரும்**
> **(சிலம்பு: 8: 1-4)**

என்று உரைத்துள்ளனர். "திருமால் வீற்றிருக்கும் குன்றமாகிய வடவேங்கட மலையும், முப்புறத்தும் கடல்களுமாகத் தமிழகத்தின் எல்லைகளை வரையறுத்து ஆன்றோர் உரைத்துள்ளனர். தண்மையான நீர்வளத்தினை யுடைய, நன்மை பொருந்திய அத்தகைய தமிழ்நாட்டின் கண்ணே, மாடங்களையுடைய மதுரையும், பெருமையாற் சிறந்த உறையூரும், ஆரவாரம் நிறைந்த வஞ்சியும், ஒலிபுனலான கடலருகே விளங்கும் புகாரும்" என்பது இவ்வடிகளின் பொருளாகும்.

### கொற்கைப் பேரூர்

பாண்டியர்க்கு மதுரை கோநகராக விளங்கினாலும், கொற்கைப் பட்டினம் அவர்களுக்குரிய துறைமுகப் பட்டினமாகச் சிறந்திருந்தது. அது கடல் வாணிகத்தினை வளர்த்துப் பேணும் கவினுறு நகரமாகவும் திகழ்ந்து வந்தது.

### தொண்டிப் பட்டினம்

சேரருக்கு வஞ்சியே கோநகராக வளமுடன் திகழ்ந்தது என்றாலும், வளமையினாலே புகழ்பெற்ற 'தொண்டி' என்னும் பேரூர், பெருமைமிகு கடற்கரைப் பட்டினமாக இருந்தது.

### புகார்ப் பட்டினம்

சோழர்க்கு உறையூரே கோநகராக உயர்வுடன் அமைந்தது. ஆனாலும், அவருக்குரிய கடல் வாணிகம் பேணிய பட்டினமாகப் புகார் நகரமே பெரிதும் புகழ்பெற்று நிலவியது.

## இரண்டுபட்ட சோழர்கள்

வஞ்சியையும், தொண்டியையும் இளங்கோவடிகள் கூறவில்லை. புகாரினை மட்டுமே தனியாக எடுத்துப் போற்றுகிறார். இஃது எதனால் என்று நாம் அறிந்து கொள்வோம். அந்நாளிலே சோழர்கள் இரண்டு பிரிவினராக இருந்தனர். ஒரு பகுதியினர் உறையூரைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டின் ஒரு பகுதியைக் காத்து வந்தனர். மற்றொரு பகுதியினர் புகாரைக் கோநகராகக் கொண்டு சோணாட்டின் மற்றொரு பகுதியினை ஆண்டு வந்தனர். இதனாலேயே, புகார் நகரத்தினைத் தனியாகச் சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் குறிப்பிட்டுப் போற்றினார்.

சிலப்பதிகாரக் கதையின் தொடக்கம் புகார் நகரிலேதான் எழுதியது. அதனால், சிலப்பதிகாரக் காப்பியத்தின் ஆசிரியரான அவர், புகார்ப் பட்டினத்தை மட்டும் குறித்துப்போற்றினார் என்றும் சிலர் கூறுவார்கள். எங்ஙனமாயினும், சிலம்பினாலே நாம் அறியும் புகழ்பெற்ற பேரூர்கள் நான்கு எனலாம்.

## பற்பல பேரூர்கள்

இந்நான்கு பேரூர்களே அல்லாமலும், வேறு பலப்பல பேரூர்களும் தமிழகத்தில் அந்நாளில் சிறப்புற்றிருந்தன. அவற்றுள் ஒரு சிலவற்றைப்பற்றியும் இங்கே சிறிதளவு நாம் அறிந்துகொள்வோம்.

"நன்னன்" என்பவன் ஒரு குறுநில வேந்தன். அவனுடைய கோநகராகச் சிறப்புடன் திகழ்ந்தது பாழிப்பேரூர் ஆகும்.

'மலையமான்' எனவும், மலாடர் கோமான் எனவும் புகழுடன் விளங்கியவன் காரிவள்ளல். அவனுக்கு உரியதாகத் திகழ்ந்தது திருக்கோயிலூர்ப் பேரூர் ஆகும்.

'அதியமான் நெடுமான் அஞ்சி' என்பவன், தகடூரைத் தலைநகராகக்கொண்டு தறுகண்மையுடனும் வள்ளன்மை யுடனும் ஆட்சி நடத்தி வந்தவன். அந்தத் தகடூரும் பெரிய நகராகவே இருந்தது.

தொண்டைமான்களின் பேரூராகத் தொன்மையும் வளமையும் கொண்டு திகழ்ந்தது காஞ்சிப் பேரூர். வையாவிக் கோப்பெரும் பேகனின் வளநகராக விளங்கியது 'பொதினி' என்னும் பேரூர். பல்லோர்க்கும் வாரி வழங்கியவன் பாரிவள்ளல்; அவனுடைய பறம்பு மலைப் பேரூரும், ஓரிவள்ளல் என்பவன் வீற்றிருந்து ஒப்பற்ற ஆண்மையுடன் காத்துவந்த

கொல்லிமலைப் பேரூரும், அழுந்தூர் வேளுக்குச் சொந்தமாயிருந்த அழுந்தூரும், மோரியரை வென்று வாகை சூடிய பழையன் மாறனுக்கு உரியதான மோகூரும், மற்றும் இவர்களைப் போன்ற பிறர் வாழ்ந்திருந்த பேரூர்களும் தமிழகத்தில் பலவாகும். சேர மன்னர்களிலே ஒரு சாராரின் கோநகராகத் திகழ்ந்த கருவூரும், இரும்பொறை மரபினரால் ஏற்றமுடன் காக்கப்பெற்ற சிறப்பினை உடையதாகும்.

இவ்வாறு, பேரூர்கள் பலவாகவும், அவற்றைப் பேணிக் காத்த பெருமக்கள் பலராகவும், அவற்றின் பெருமைகள் பலவாகவும், அந்நாளிலே செழுமையும் சிறப்பும் பெற்றுச் சீர் மிகுந்த திருநாடாக விளங்கிற்று நம் தமிழகம்.

இன்று நாம் காணும் தமிழகத்து ஊர்களுள் பலவும், தம்முடன் ஒரு தொடர்ந்த வரலாற்றினைக் கொண்டிருப்பவை. அவற்றைப்பற்றிச் சிறிது ஆராய்ந்து பார்க்குங் காலத்திலே, தெளிவாக இதனை நாம் அறிந்துகொள்ளலாம். அங்ஙனம் ஆராய்ந்து அறியும்போது, கால வெள்ளத்தையும் எதிர்நீந்தி நிலைபெற்றிருக்கும் அவற்றின் சிறப்பினை நினைந்து, அவற்றைப் பேணவும் போற்றவும் வேண்டும் என்னும் அவா நம்மிடத்தே எழும். அந்த அவா, நம் நாட்டுப்பற்றினை மிகுவித்து, நம்மை நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களாக உயர்த்தும். அதனாலே நாமும் உயர்வோம்; நம் நாடும் உலகுபோற்றும் உயர்தனிச் சிறப்பினைப் பெறும்.

## 3. நிலைபெற்ற மதுரை

**தண்தமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்**
**நின்றுநிலைஇப் புகழ்பூத்தல் அல்லது**
**குன்றுதல் உண்டோ மதுரை கொடித்தேரான்**
**குன்றம்உண் டாகும் அளவு.**

மதுரை நகரினைப் பற்றிக் குறிப்பிடுகிற பரிபாடற் செய்யுள் இது. "கொடி விளங்கும் தேரினையுடையவன் பாண்டிய மன்னன் ஆவான். அவனுடைய மலையென்று உரிமையுடன் போற்றப்பெறுவது பொதியமலை ஆகும். அகத்தியனார் இருந்து தமிழ்வளர்த்த பெருமை உடையது அது. அதனால், என்றும் நிலையாக விளங்கும் ஏற்றமும் அதற்கு உண்டு. அந்தப் பொதியமலை இருக்கின்ற காலம் வரையிலும், மதுரையின் புகழும் குறையாது விளங்கும். தண்மை நிலவுகிற தமிழ்

மொழியினையே வேலியாகக் கொண்டது தமிழ்நாடு, அந்நாட்டினரின் உள்ளங்களில் எல்லாம் நிலைபெற்று வீற்றிருந்து, புகழ் மணத்துடன் மதுரை என்றென்றும் விளங்கும். அங்ஙனம் அல்லாது, அதன் சிறப்புக் குறைந்து போதலும் என்றாவது உண்டாகுமோ?” என்பது, இதன் பொருள். இதிலிருந்து, “மதுரை நகரின் பெருமை தமிழ் உள்ளவரையும் தமிழரின் நெஞ்சில் நீங்காது நிறைந்திருக்கும்” என்று நாம் அறிகிறோம். இந்த வாக்கு இன்றும் உண்மையாகவே விளங்குகிறது. அன்று போற்றியதனைப் போலவே, மதுரையின் பெருமையினை, நாமனைவரும் இன்றும் மனம் விரும்பிப் போற்றிவருகின்றோம்.

## வையையின் சிறப்பு

‘பொதியமலை உள்ளளவும் மதுரையும் தமிழர் நெஞ்சில் வாழும்’ என்றது முன் செய்யுள். இன்னொரு செய்யுள், ‘வையை நதி உள்ளளவும் வளமதுரையின் சிறப்பு வையகமெல்லாம் குன்றாது நிலவும்’ என்கிறது.

“செல்வத்தின் தெய்வம் திருமகள். வளமையைத் தருபவளும் அவளே யாவாள். அவளின் நெற்றியிலே இட்டுள்ள திலகத்தைப்போல என்றும் சிறப்புடன் விளங்குவது மதுரை. அவளுடைய திலகத்தின் சிறப்பினைப் போன்று, வையத்தே என்றும் சிறப்புற்று விளங்கிப் புகழாற் பொலிவுறுவதும் மதுரையாகும். இங்ஙனம் அல்லாது, மதுரையின் சிறப்புப் பொய்யாகிப் போதலும் உளதாகுமோ? அஃது அப்படி ஆகவே ஆகாது. அழகாக ஒப்பனை செய்யப்பெற்ற தேரினை உடையவன் பாண்டிய மன்னன். அவனுக்குச் சொந்தமான வையை நதி உண்டாகியிருக்கும் காலத்தின் அளவும், மதுரையின் சிறப்பும் மங்கிப் போதல் இல்லை.”

**செய்யாட்கு இழைத்த திலகம்போல் சீர்க்கொப்ப**
**வையம் விளங்கிப் புகழ்பூத்தல் அல்லது**
**பொய்யாதல் உண்டோ மதுரை புனைதேரான்**
**வையைஉண் டாகும் அளவு.**

இந்தப் பரிபாடற்செய்யுள் போற்றுவதும் இன்று வரை உண்மையாகவே இருக்கிறது. வையை மறையவும் இல்லை; வண்தமிழ் மதுரையின் புகழ் குறையவும் இல்லை.

## ஈவாரும் ஏற்பாரும்

"மதுரையிலே வாழும் மக்கள் செல்வச் செழுமையினாலே திளைத்தவர்கள். தமக்கு உரிமையுடைய செல்வத்தைப் பிறர்க்கும் மனமுவந்து கொடுத்து மகிழுகின்ற ஈகைக்குணமும் அவர்களிடம் உண்டு.

"செவ்வேளான முருகன், கோயில் கொண்டிருக்கின்ற சிறப்பினை உடையது திருப்பரங்குன்றம். அங்கே, மக்கள் திரள்திரளாகச் சென்று பரங்குன்றப் பெருமானைப் போற்றிவழிபடுவார்கள். தமக்குப் பேரின்பநலத்தினைத் தந்தருளுமாறு அவனை இரந்து வேண்டியும் நிற்பார்கள்.

"வானத்துத் தொலைதூரத்திற்கும் உயர்ந்திருக்கும் மாடங்களை உடையது 'கூடல்' என்னும் மதுரைப் பேரூர். அதனிடத்தே விளங்கும் கொடையாளரைத் தாமும் மனத்துட்கொண்டு, மக்கள் எல்லாருமே அவரைப்போலக் கொடுக்கும் இயல்பினராக வாழ்ந்து வருதல் வேண்டும்.

"பரங்குன்றப் பெருமானின் திருவடிகளைப் பணிந்து வேண்டி நிற்கும் அடியார்களை நினைந்து, அவர்களைப் போலவே இறைவனை இரந்துநின்று பேரின்பத்தை வேண்டுவதற்கும் அனைவரும் விரும்புதல் வேண்டும்.

"இவ்வாறு வாழ்கின்றவர் எவரோ, அவரே வாழ்வாங்கு வாழுகின்ற மக்கள் என்னும் சிறப்பிற்கு உரியவர்கள். இவர்கள், தவறாமல் புத்தேளுலகத்தை அடைந்து, அங்கே நிலைத்த இன்பத்திலே திகழ்வார்கள். இத்தகையவர்கள் அல்லாமல் புத்தேளுலகத்திற்குப் போகும் தகுதியுடையவர் தாம் பேறு யாவரோ?"

மதுரையின் பெருமையை இப்படிப் போற்றுகிறது மற்றொரு பரிபாடற் செய்யுள். 'தமிழர்கள் அனைவரும் தம் வாழ்க்கையின் முன்மாதிரியாகக் கொள்ளவேண்டிய சிறப்பினர் மதுரைவாழ் மக்கள்' என்கிறது அது.

**ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்**
**சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்**
**வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார்; மற்றையார்**
**போவாரார் புத்தேள் உலகு.**

இந்த மூன்று செய்யுட்களும் மதுரை நகரின் நிலைபெற்ற புகழைமட்டும் சொல்வதுடன் நின்றுவிடவில்லை; மக்கள் வாழ்விற் கொள்ளவேண்டிய சில உண்மைகளையும் வலியுறுத்துகின்றன.

## நினைவு நாட்கள்

'தமிழ் முனி நிலவும் பொதியம் உள்ளவரை தமிழ் மதுரையின் புகழும் குறையாது' என்ற முதற்செய்யுள் ஒரு சிறந்த உண்மையினைக் கூறுகிறது.

சில ஆண்டுகளுக்குமுன், நம் நாடும் உலக நாடுகள் பலவும், மகாகவி தாகூரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடின. நாம் பாரதி விழாவினையும், கம்பன் விழாவினையும், திருவள்ளுவர் விழாவினையும் ஆண்டு தோறும் கொண்டாடி வருகின்றோம். அவர்களுடன் தொடர்புடைய ஊர்களையும் போற்றுகின்றோம். இவற்றை எல்லாம் எதனாற் செய்கின்றோம்? எதற்காக இவர்களைப் போற்றுகின்றோம்?

## தமிழின் முதன்மை

மொழிதான் ஓர் இனத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உரிய உயிர்ப்பாற்றலாக இருக்கிறது. மொழியிலே செப்பம் இல்லையானால், அம் மொழிபேசும் மக்களுடைய வாழ்விலும் செப்பம் அமைவதில்லை. மக்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள உதவுவது மொழிதான். முன்னோரின் அறிவுச் செல்வத்தைப் பெறுவதற்கு உதவுவதும் மொழிதான். பின் வருவோருக்கு நம் கருத்துக்களை அறியச் செய்வதற்கு உதவியாயிருப்பதும் மொழிதான். இவ்வாறு, முக்காலத்தினும் விளங்கும் நிலையான ஆற்றல் மொழிக்கு உண்டு. அதுபற்றியே, மொழி வளர்த்த மூதறிஞரை, உலகம், என்றும் எங்கணும் நன்றி மறவாது போற்றிவருகின்றது.

தமிழ் மொழியின் வளர்ச்சியிலே முதற்பணி செய்தவர் அகத்தியனார். ஐந்திரத்திற்கு அடுத்தபடியாக அகத்தியமே தமிழின் முதல் இலக்கண நூலாகத் திகழ்ந்தது. மொழியின் செப்பத்திற்கும் அதுவே உதவியது. குறுமுனியாகிய அகத்தியனார் வாழ்ந்து தமிழ்வளம் பெருக்கிய இடம் பொதியமாகும். இதனால், பொதியமும் தமிழ் உள்ளவரை நீங்காத பெருமையினை உடையதாக நிலவும். அப்பொதியம் உள்ளவரையும் மதுரையின் புகழும் நிலைபெறும். இச்செய்யுள் இவ்வாறு கூறி நமக்கு உறுதியளிக்கிறது. இது, தமிழ் மொழியை நாம் பேணவேண்டிய பெருங்கடமையினை நன்கு வலியுறுத்துவதுமாகும். 'தமிழ் உள்ளவரை மதுரையின் புகழ் நிலைபெறும்' என்றதனால், தமிழ் என்றும் உளதாகுமாறு போற்றவேண்டிய கடமையும், நமக்கு எப்போதும் உளதாகின்றது.

## வளம் பெருக வேண்டும்

தமிழுக்கு அடுத்தபடியாக நம்மை வாழ்விப்பது தமிழ் நாட்டின் நீர்வளம் ஆகும். நீர்வளம் பெருக்கமாக இல்லாத போது உணவுத் தட்டுப்பாடுதான் எங்கும் நிலவும். உணவுத் தட்டுப்பாடு நேர்ந்தால் உயிர்களின் வாழ்வு சிதைந்துபோகும். வளத்தால் சிறப்புற்றிருப்பதுதான் வளரும் புகழினையும் ஒரு நாட்டிற்குக் கொண்டுதரும். இதனை உணர்த்தவே, 'வையை உண்டாகும் வரையும் மதுரையும் புகழுடன் விளங்கும்' என்றனர்.

## ஈதலும் இறையடி தொழலும்

மூன்றாவது செய்யுள் இரண்டு உண்மைகளை உணர்த்துவது. ஒன்று, ஈதலைச் செய்யவேண்டும் என்பது. மற்றொன்று, இறையடியினைத் தொழவேண்டும் என்பது. இவற்றையும் நாம் மனத்திற் கொள்ளல் வேண்டும்.

வாழ்க்கையிலே சிறப்படைய வேண்டுமானால், தமிழ் மொழியின் வளத்தினாலே நாம் சிறப்புற்றிருத்தல் வேண்டும்; நாட்டின் செழுமையிலேயும் நாம் சிறந்திருக்க வேண்டும். பிறருக்குச் செல்வத்தைக் கொடுத்து உதவும் கொடைக்குணமும் நம்மிடையே நிலைபெறவேண்டும். இவற்றுடன், இறைவனைப் பணிந்து வேண்டும் பண்பும் நம்மிடையே நிலவ வேண்டும். இவற்றிலே சிறப்புற்றிருந்தது அந்நாளைய மதுரைப் பேரூர். அதனாலேயே, அதன் புகழும் நிலைபெறுவதாயிற்று.

## அரசியலிற் செப்பம்

இந்த உயர்வுகளுடனே, அரசனின் ஆணை ஒரு நாட்டிலே நிலைபெறுதலும், அந்நாட்டினரின் நல்வாழ்விற்கு முதன்மையானதாகும். இதனைக் குறிக்கும் மற்றொரு பரிபாடற் செய்யுளையும் நாம் காணலாம்.

"கார்த்திகைப் பெண்கள் என்ற சிறப்பினை உடையவர் அறுவர்கள். முருகப் பெருமானின் தாய்மார் என்ற சிறப்பும் அவர்கட்கு உளதாகும். அவர்களுடைய காதுகளிலே பொன்னாலான மகர குண்டலங்கள் விளங்கும். அவை என்றும் சிறப்புடன் விளங்குவனவாகும். அவர்கள் கற்புநிலையிற் சிறந்தவர்களும் ஆவர். அதனால், அவர்கள் காதுகளில் விளங்கும் பொன்னாலான அம் மகர குண்டலங்களும் நாளுக்குநாள் பொலிவு பெற்றுக்கொண்டே போகும்.

அஃதல்லாமல், அவற்றிற்கு என்றும், எவ்வகையானும் குறையே நேராது. கொடியுடைய தேரோன் பாண்டியன். அவனுடைய ஆணை செங்கோன்மை யினின்றும் எள்ளளவும் தவறாதது. அந்த ஆணையானது நிலைபெற்றிருக்கும் வரையும் மதுரையின் புகழும் மங்குவதில்லை."

**கார்த்திகை காதிற் கனநகர குண்டலம்போல்**
**கீர்த்தி விளங்கித் திருப்பூத்தல் அல்லது**
**கோத்தையுண் டாமோ மதுரை- கொடித்தேரான்**
**வார்த்தையுண் டாகும் அளவு?**

'பெண்களின் கற்பும் அரசியலிற் செங்கோன்மையும் உள்ளவரை, மதுரையின் புகழும் நிலவும்" என்பது இதன் கருத்து.

இவ்வாறு, புலவோர் போற்றிப் பாராட்டும் மதுரையின் புகழினையும், அமைதியினையும், மதுரை மக்களின் வாழ்வினையும், மதுரை மன்னர்களின் மாண்பினையும், பிறவற்றையும் அடுத்துவரும் பகுதிகளிலே நாம் காண்போமாக.

## 4. மதுரை எழுந்த கதை

### தென் மதுரை

பாண்டியரின் தலைநகராக ஆதிநாளிலே விளங்கியதும் 'மதுரை' என்னும் பெயரினையுடைய பேரூரே யாகும். பின்னுள்ள மதுரை ஏற்பட்டபின், அன்றிருந்த கடலுள் மறைந்த அந்த ஆதி மதுரையினைத் 'தென்மதுரை' என்று அறிஞர்கள் குறிப்பிடுவார்கள்.

குமரி முனைக்குத் தெற்கே பரந்து விரிந்து கிடந்த பெருநிலப்பரப்பிலே, பாண்டியரின் பழந்தமிழ்ப் பேரூராக இத்தென்மதுரை திகழ்ந்தது. காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாகப் பாண்டியப் பேரரசர்கள் வழிவழியாக இதன்கண் அரசுவீற்றிருந்தனர். உலகிலேயே, முதன் முதலாக மொழியினை ஆய்ந்து செப்பமிட்டுப் பேணும் முயற்சியின் தோற்றுவாயான முதற்சங்கம் தோன்றி அமைந்திருந்ததும் இத் தென்மதுரையிலேதான்.

கடுங்கோனின் காலத்திலே, கடல் பொங்கி எழுந்தது. பாண்டிய நாட்டின் பெரும்பகுதியினைத் தன்னுள் விழுங்கிக் கொண்டது. தமிழகத்தின் பெரு நிலப்பரப்பும்,

தமிழ்ப்பாண்டியனின் தலைசிறந்த பெருநாடும் கடலுள் ஆழ்ந்து மறைந்தன. கடுங்கோன் அதைக்கண்டு கலங்கினான். வடக்கு நோக்கி வாடிய உள்ளத்துடனே வந்தான். ஒரு புதிய தலைநகரினை அமைத்துக்கொண்டு, பாண்டியப் பேரரசினை மீண்டும் நிலைநிறுத்தினான்.

### கபாடபுரம்

கடுங்கோன் புதிதாக அமைத்துக்கொண்ட, இப் பாண்டியரின் கோநகருக்குக் 'கபாடபுரம்' என்பது பெயராயிருந்தது. கபாடபுரத்திலே தமிழ்ச் சங்கம் மீண்டும் தோன்றியது. 'இடைச்சங்கம்' என்று ஆன்றோர் இதனைக் குறிப்பார்கள். வெண்தேர்ச்செழியன் முதலாக, முடத்திருமாறன் ஈறாக, நாற்பத்தொன்பது பாண்டிய அரசர்கள் இக் கபாடபுரத்திலே அரசு வீற்றிருந்தனர்.

வான்மீகி இராமாயணம் வடமொழியிலுள்ள மிகப் பழைமையான நூல்களுள் ஒன்றாகும். அதன்கண், கபாட புரத்தைப் பற்றிச் சுக்கிரீவன் தென்திசை நோக்கிச் சென்ற அங்கதன் முதலான வானரவீரருக்குச் சொல்லுவதாக ஒரு குறிப்பு வருகிறது. "தென்புலத்திலே கபாடபுரம் இருக்கிறது. அதன் கோட்டைவாயிற் கதவுகள் பொன்னாலும் முத்தாலும் இழைத்து அழகுபடுத்தப் பெற்றிருக்கும்" என்று, சுக்கிரீவன் சொல்லுகிறான். கபாடபுரத்தின் செழுமையினை இந்தச் செய்தி நன்கு விளக்குவதாகும்.

தமிழுக்கே உரிய தனித்த சிறப்பினையுடைய பெருநூல் தொல்காப்பியப் பெருநூலாகும். இந்த நூல் இடைச் சங்கத்திலே விளங்கிய சிறப்புடையது. தொல்காப்பியம் எழுந்த கபாடபுரம் என்னும்போது, தமிழ் உள்ளவரை அதன் புகழும் நினைவும் நிலைத்திருக்கும் அன்றோ!

பாண்டிய நாட்டின் பெரும்பகுதியினை விழுங்கிய கடலுக்குப் பாண்டியரோடு எழுந்த பகைமை அத்துடன் தீர்ந்துவிடவில்லை. மீண்டும் அது பொங்கி எழுந்தது. கபாடபுரத்தையும் மற்றும் பல பகுதிகளையும் அது தன்னுட் கொண்டு தன் பசி தீர்ந்தது.

### மணவூர்

அப்போது, முடத்திருமாறன் என்பவன் பாண்டிய மன்னனாக விளங்கினான். அவன் வடதிசை நோக்கி வந்து, சேர சோழர்க்குரிய சில நிலப்பகுதிகளைக் கைப்பற்றி, மீண்டும் தன்

பாண்டியப் பேரரசை நிறுவினான். இருமுறை கடல்கோளுக்கு இரையாகித் தலைநகரை இழந்ததனால், கடற்கரையைவிட்டு உள்நாட்டின் கண்ணேயே தன் தலைநகரத்தினை அமைத்துக் கொள்ளவும் அவன் எண்ணமிட்டான். முதற்கண், மணவூரிலே தன்னிருப்பிடத்தை அமைத்துக் கொண்டு, தலைநகருக்குத் தக்கவோர் இடத்தினை ஆராய்ந்து கொண்டும் இருந்தான்.

## மணவூர் வணிகன்

மணவூரிலே ஒரு வணிகன் இருந்தான். அவன் தன் வாணிகச் சாத்துடன் நாட்டின் பல பகுதிகட்கும் சென்று வாணிகஞ் செய்து வருபவன். ஒரு முறை, வாணிகத்திற்குச் சென்றுவிட்டு அவன் மணவூருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான். வழியில், ஓரிடத்திலே பொழுது சாயத் தொடங்கியது. இரவில் தங்கியிருப்பதற்கு ஏற்ற ஓர் இடத்தினை அவன் தேடினான். கடப்ப மரங்கள் செறிந்திருந்த இடமொன்று அவன் கண்ணெதிரே தோன்றிற்று. அவ்விடத்திலே அன்றிரவு தங்கியிருக்கவும் அவன் முடிவுசெய்தான். அங்கே ஒரு பெரிய பொய்கையும், அதன் கரையிலே ஒரு சிவலிங்கமும் இருந்தன. பொய்கையிலே நீராடிவிட்டுச் சிவலிங்கத்தை வணங்கிப் போற்றியவனாக அவன் உள்ளம் மகிழ்ந்தான். அங்கேயே இரவு தங்கியும் இருந்தான்.

மறுநாள் மணவூரை அடைந்ததும், தான் கண்ட கடம்ப வனத்தைப் பற்றிய செய்தியை, அரசனிடத்தே சென்று அவ் வணிகன் தெரிவித்தான். 'பொய்கையும், சிவலிங்கமும் அந்த இடத்திலே காணப்பெற்றதனால், அவ்விடத்தே பழங்காலத்திய பேரூர் ஒன்று இருந்திருக்க வேண்டும்' எனவும், அவன் சொன்னான்.

அரசனும் பெரிதும் உவகையோடு வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டான். அது தலைநகருக்குத் தகுதியான இடமாகவே அவனுக்கும் தோன்றிற்று. அங்கேயே தன் தலைநகரினை அமைக்கவும் அவன் முடிவு செய்தான்.

## மதுரை எழுந்தது

பாண்டியனின் பணியாளர்கள் இரவு பகலாக அங்கே பணி செய்தனர். சிவலிங்கத்தை நாயகமாக்கி ஒரு பெரிய கோயிலை முதலில் எழுப்பினர். அந்தக் கோயிலைச் சுற்றிலும் தெருக்களை அமைத்தனர். தெருக்களின் இருமருங்கும் பல்வகை நிலையினரும் வாழ்வதற்கேற்ற வீடுகளும் மாளிகைகளும்

எழுந்தன. அரசனின் பெருங்கோயில் நகரத்தின் வடகிழக்கு மூலையிலே கவினுடன் அமைக்கப்பெற்றது.

உயரமான மதிற்சுவர்களுடன் கூடிய கோட்டைமதில் ஒன்றும் நகரைச் சூழ்வும் எழுந்தது. கோட்டை மதிலுக்குப் புறத்தே ஆழமான அகழியினை அமைத்தனர். அகழியை அடுத்தாற்போல் அடர்த்தியான காவற்காடும் உருவாயிற்று.

இங்ஙனமாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளும், வாழ்வதற்குரிய வசதிகளும், இறைவனின் திருக்கோயிலும் எல்லாம் செவ்வையாக அமைந்தன. அதன்பின்னர், பாண்டியனும், மணவூரைவிட்டு வந்து மதுரையைத் தன் இருப்பிடமாக்கிக் கொண்டான்.

இவ்வாறு, மதுரை எழுந்த கதையினைத் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது.

## 5. மதுரையின் பெயர்

'மதுரை' என்னும் பெயர் இப் பேரூருக்கு எதனால் ஏற்பட்டது? அந்தப் பெயரின் பொருள் யாது? இதனையும் நாம் அறிந்துகொள்ளல் வேண்டும். இந்தப் பகுதியிலே அதனைப்பற்றிக் காண்போம்.

### மருதையும் மதுரையும்

வையையாற்றின் நீர்த்துறைகளுள் சிறப்பு உடையது திருமருத நீர்ப்பூந்துறை என்பதாகும். மருதமரத்து நீழலை உடையது அது. இது பெயரினாலேயே விளங்கும். இதனால், அதனையொட்டி 'மருதை' என்ற சொல்லும் எழுந்தது. 'மருதை' என்ற சொல்லே ஊரின் பெயராக ஒரு காலத்தில் இருந்திருக்கக்கூடும். இந் நாளினும் மக்களுட் பலர் 'மருதை' என்றே இதனை வழங்குகின்றனர். மருதநிலத்துப் பேரூர் இது என்னும் சிறப்பினாலும், 'மருதை' என வழங்கி இருக்கலாம். பின்னர், அது திரிந்து மதுரையாக ஆகியிருக்கலாம். மருதன் இளநாகனார், மாங்குடி மருதனார் என்னும் பெயர்கள், மருதை என்ற சொல் அன்றும் பெருவழக்காக இருந்ததைக் காட்டும். இவ்வாறு 'மருதையே காலப்போக்கில் மதுரையாயிற்று' என்பார்கள் சிலர்.

### மதுரையும் இனிமையும்

'மதுரை' என்ற சொல் 'இனிமை' என்னும் பொருளைத் தருவது, 'வாழ்வார்க்கு என்றும் இனிது' என்ற தன்மையினாலே,

இவ்வாறு ஊரின் பெயர் அமைந்திருத்தலும் பொருத்தம் உடையதேயாகும்.

"சிவபெருமான் தம் திருமுடியிலுள்ள பிறையின் அமுதமாகிய மதுரத்தை இந்நகரின் கோயில்களிலும் கோயிற் கோபுரங்களிலும் தெளித்தனர்; அதனாலேயே மதுரை என்னும் பெயர்வந்தது" என்று, தலபுராணங்கள் எடுத்துக் கூறுகின்றன.

"மதுரம்' என்பதும் இனிமை; தமிழ் என்பதும் இனிமை. தமிழ் வளர்கின்ற வளர்கின்ற நகரம் என்று குறிக்கவே 'மதுரை' என்றனர். மது+உரை= மதுரமான பேச்சு: அது தமிழ் என்பார்கள் சிலர்.

"மதுரைக்கு ஒரு தனிச்சிறப்பும் உண்டு. அங்கே கோயில் கொண்டிருக்கும் அப்பனைவிட அம்மைக்கே சீரும் சிறப்பும் மிகுதியாக இருக்கும். அதனால், 'மாது உறையும் பேரூர்' என்று முதலில் வழங்கி, அதுவே 'மதுரைப் பேரூர்' எனத் திரிந்து, பின்னர் மதுரையாகவும் நிலவுவதாயிற்று" என்றும் சிலர் சொல்வார்கள்.

எனினும், மதுரை என்னும் பெயருடனேயே இப்பேரூர் பழங்காலத்தும் வழங்கிவந்தது என்பதனை நாம் அறியலாம். சங்கத் தமிழ்ப் புலவர்களிற் சிலருடைய பெயர்கள், 'மதுரை' என்னும் சொல்லைத் தம்முடன் கொண்டிருப்பதும், சங்கநூற்கள் பலவற்றுள்ளும் 'மதுரை' என்றே பலவிடங்களில் வருவதும் இதனை வலியுறுத்தும்.

'தெற்கே தலைச்சங்கம் இருந்தது. அதுவும் மதுரை என்றே பெயர் கொண்டிருந்தது. பின் இம்மதுரை எழுந்ததும், அதன் நினைவாகவே இதனையும் மதுரை என்றனர். இப்படியும் சிலர் கூறுவார்கள்.

### நான்மாடக் கூடல்

நான்கு பெரிய மாடங்களை உடைய திருக்கோயிலைக் கொண்டது மதுரைப் பேரூர். அதனால், இதன் பெயர் 'நான்மாடக் கூடல்' எனவும் வழங்கப் பெறுகிறது. 'கூடல்' என்ற சொல்லுக்கு. 'ஒன்று சேர்தல்' என்பது பொருள். "கடல்கோளாற் சிதறுண்ட பாண்டியரின் பல்வளமும் சிறப்புக்களும் மீண்டும் ஒன்றுகூடிய இடமாதலின், 'கூடல்' என்ற பெயர் இப் பேரூருக்கு ஏற்பட்டிருக்கக் கூடும் எனவும் பெரியோர்கள் உரைப்பார்கள்.

### திரு ஆலவாய்

'திருவாலவாய்' என்றொரு பெயரும் இப் பேரூருக்கு வழங்கும். சிவபெருமானின் ஆணையினாலே, நாகத்தால்

அளந்து காட்டப்பெற்ற இடத்தே எழுந்த நகரம் இது. திருவிளையாடல் புராணத்திலே காணப்படும் செய்தி இதுவாகும். இதனையொட்டியே 'ஆலவாய்' என்ற பெயர் இப்பேரூருக்கு ஏற்பட்டது என்பார்கள்.

**கடம்ப வனம்**

கடம்ப மரங்கள் ஒரு காலத்தே இங்குச் செறிவுற்றிருந்தன. அதனையொட்டிக் 'கடம்ப வனம்' என்ற ஒரு பெயரும் இதற்கு ஏற்படலாயிற்று.

இவ்வாறு, பல பெயர்களாலே விளங்கிய பழம் பெரும் மூதூர், மதுரைப் பேரூர் என்றும் நாம் அறிதல் வேண்டும்.

## 6. உலகறிந்த பேரூர்

மதுரை நகரம் மிகவும் பழைமையானது. கடைச் சங்க காலத்திலே கவினுறத் திகழ்ந்த பேரூராக இது விளங்கியது. இதன் வளமும் சிறப்பும் கண்டவர் போற்றும் வண்ணம் அக்காலத்தே விளங்கின. இவற்றினோடு, மதுரைப் பேரூரின் காலங்கடந்த பழைமையினை அறிவதற்கு நாம் மற்றுஞ் சிலசெய்திகளையும் இப் பகுதியிற் காண்போம்.

**பரசுராமரின் காலத்தில்**

பரசுராமரின் காலம், இராமாயண காலத்திற்கும் முற்பட்டது. இவர் பாண்டிய நாட்டுச் செல்லூரிலே ஒரு யாகஞ் செய்ததாகச் சங்கநூற்களிலே ஒரு செய்தியினைக் காணுகின்றோம். 'மன் மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்' எனவும், இவர் அகநானூற்றிற் குறிப்பிடப் பெறுகின்றனர்.

இவர் தென்னகம் வந்ததனையும், இவரே மலையாள நாட்டினை வழங்கியவர் என்ற கதையினையும், வேறுபல வழக்குகளும் எடுத்துக் கூறுகின்றன.

மணிமேகலையுள் ஒரு செய்தி கூறப்பெறுகின்றது. "பரசுராமர் அரசகுலத்தினரை வேருடன் அழிக்க விரதம் பூண்டனர். அதனை அறிந்த சோழன் கலங்கினான். தன்னுடைய பரத்தைவழித் தோன்றிய மகனுக்குப் பட்டஞ் சூட்டிவிட்டுத் தான் பொதியமலைக்குத் தவம் புரியச் சென்றுவிட்டான். இது நிகழ்ந்தது காவிரிப்பூம் பட்டினத்திலேயாகும்" என்பது அச் செய்தி. இதனால், அந்நாளிலேயே பாண்டியரின் சிறப்புமிக்க ஆட்சி தென்னகத்திலே நிலவிவந்தது என நாம் அறியலாம்.

அப்பொழுது இந்த மதுரை நகரமும் சிறப்புற்றதாக விளங்கியிருக்க வேண்டும் என்று, சான்றோர் உரைப்பார்கள்.

### வியாசருக்கும் முற்பட்டது

வியாசரின் மகாபாரதமும் இராமாயணத்தைப் போன்று சிறப்புடைய நூல் ஆகும். குருச்சேத்திரப்போர் நடந்த காலத்தினைக் கி.மு. 900 அளவில் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். வியாசரின் பாரதமும் அந்தக் காலத்தையொட்டி எழுந்ததாக இருக்கலாம். அதன்கண் ஒரு குறிப்பு வருகிறது. 'பாண்டவருள் ஒருவனான அருச்சுனன், பாண்டியனின் மகளை மணந்து கொண்டான்' என்பதே அது. இதனால், பாரத காலத்திற்கும் முற்பட அமைந்தது இம் மதுரைப்பேரூர் என்று நாம் சொல்லலாம்.

### சோறு அளித்த சேரமான்

சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்பவன் சேரமான்களுக்குள்ளே புகழ்பெற்ற ஒருவனாவான். இவன் பாரதப்போரில் இருதிறத்துப் படைகளுக்கும் பெருஞ்சோறு அளித்தவன். இவ்வாறு இவனைப் பற்றிக் கூறுகிறது ஒரு வரலாறு. இவன், சேரன் செங்குட்டுவனின் தந்தையான இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தகப்பன் ஆவான். இவன் காலத்திலே, மதுரை பாண்டியரின் ஆட்சிக்கீழ்ச் சிறப்புற்றிருந்தது என்பது தெளிவாகும். இதனாலும், மதுரைப் பேரூர் பாரதப்போர்க் காலத்திலேயே புகழுடன் விளங்கிய பழம் பெரும் மூதூராகும் என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

### மகாவமிசம் கூறுவது

கி.மு. 500ஆம் ஆண்டின் அளவிலே, இலங்கையில் விசயன் என்பவன் ஒருவன் இருந்தான். இவன், மதுரைக்குப் பாண்டியனின் மகளைத் தன் மனைவியாகக் கொள்ள விரும்பித் தூதர்களை அனுப்பினான். பாண்டியனும் அந்தத் திருமணத்திற்கு இசைந்தான். பாண்டியனின் மகளை விசயன் மணந்துகொண்டு அரசனாகவும் அரியணை ஏறினான். இவனைப்போலவே, இவனுடைய தோழர்கள் பலரும், பாண்டியநாட்டுக் கன்னியர்களை மணந்து கொண்டார்கள்.

இலங்கையின் பழைய வரலாற்றைக் கூறும் நூல் மகாவமிசம் என்பது. அது மேற்கண்டவாறு கூறுகிறது. இதனால், அந்நாளிலும் பாண்டியரின் பேரூரான மதுரை மிகச்சிறப்புடன் திகழ்ந்தது எனலாம்.

இந்த விசயனின் ஆட்சிகாலம் கி.மு. 483 முதல் 445 வரை என்கிறார்கள். இவன் காலத்தில் பாரதநாட்டின் பேரரசர்களாக விளங்கியவர்கள் பிம்பிசாரனும், அவன் மகனான அசாதசத்துருவும் ஆவார்கள். இதனையும் நாம் நினைவிற்கொள்ளல் வேண்டும். அப்போது, இவர்களின் ஆட்சிகாலத்திலும் மதுரை சிறப்புற்றிருந்ததென நாம் அறியலாம்.

## புத்தரின் காலத்தில்

கௌதம புத்தர் அறநெறி பரப்பியவராக வாழ்ந்த காலத்தினைக் கி.மு. 563 முதல் 483 வரை என்கிறார்கள். முன்னர் நாம் கண்ட பல செய்திகளுடன் இந்தக் கால எல்லையையும் ஒப்பிட்டுக் கருதினால், 'புத்தரின் காலத்திலேயும், போற்றுதற்குரிய பெருநகராக மதுரை விளங்கியிருத்தல் வேண்டும்' என அறிந்து கொள்ளலாம்.

## நந்தர்களின் காலத்தில்

சங்கத் தொகைநூற்களுள் அகநானூறு ஒன்று ஆகும். அதன்கண், வடநாட்டு நந்த மன்னர்களுள் சிறந்தோனாகிய மகா பதுமநந்தன் என்பவனின் செல்வ மேம்பாட்டைப் பற்றிய செய்தி காணப்பெறுகின்றது. இதனால், மதுரைப் பேரூர்க்கு, அன்று நந்தரைப் பற்றிய அறிவும் தொடர்பும் நிலவியது எனலாம். இதனால், நந்த மன்னர்கள் வடக்கே செங்கோல் நடாத்திய அந்நாளிலும், மதுரை, வளமலிந்த பேரூராகவே இருந்தது எனலாம்.

## அலெக்சாந்தரின் காலத்தில்

அலெக்சாந்தர் கிரேக்கநாட்டிலே பிறந்த மாவீரர். இந்திய எல்லைவரையும் வந்து வெற்றி கொண்டவரும் இவர் ஆவார். இவர் கி.மு. 323-ல் இறந்தார்.

இவருக்குப் பின்னர் கிரேக்கர்களின் படைவலுச் சற்றே குறைந்தது. இவர் தளபதிகளுக்குள் ஒருவனான செலுயுகசு என்பவன் இந்தியப் பகுதிகளுக்கு உரியவனானான். இவனை வென்று, மீண்டும் வடக்கே பேரரசைக் கண்டவன் சந்திரகுப்த மௌரியன் என்னும் பேரரசன் ஆவான். இவன் காலம் கி.மு. 322-298 ஆகும். இவன் காலத்திலே இவன் அவைக்குக் கிரேக்கத் தூதராக வந்தவர் 'மெகஸ்தனிசு' என்பவர். இவர் அந்நாளைய மதுரைப் பாண்டியரைப் பற்றி அவருடைய குறிப்புக்களிலே சிறப்பாக எழுதியுள்ளார். மேலும், 'இந்தச் சந்திரகுப்த

மௌரியனே பத்திரபாகு முனிவருடன் தெற்கே வந்தவன்; கி.மு. 298-ல் வீடுபெற்றவன்' என்று, சமண சமய வரலாறுகள் கூறுகின்றன. இதனால், இந்தக் காலத்திலும் மதுரைப் பேரூர் சிறந்திருந்த செய்தியை நாம் அறிந்து கொள்ளலாம்.

மேலும், சங்கநூல்களிலே காணப்பெறுகிற மற்றொரு செய்தியும் இதனை வலியுறுத்துகிறது. 'வடுகரின் துணையுடன் தென்னாடு வந்த மோரியப் படைகளை, மதுரைப் பாண்டியரின் தளபதிகளுள் ஒருவனான மோகூர்ப்பழையன் மாறன் என்பவன் தோல்வியடையச் செய்தான்' என்பதே அது.

இதனால், மோரியரின் காலத்திலேயும் மதுரைப்பேரூர் சிறப்புற்றிருந்தது எனலாம். இந்தியாவின் பெரும்பகுதியையும் (இன்றைய மைசூர்ப்பகுதி உட்பட) வெற்றி கொண்டு பேரரசுகண்டவர் மோரியர். அம் மோரியரையும் வெற்றிகொண்ட பெருமை மதுரைப் பாண்டியரிடை நிலவியது என்பதனை இதனால் நாம் தெரிந்துகொள்ளலாம்.

## பிராமிக் கல்வெட்டுக்கள்

மதுரைப் பகுதியிலே காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள் 'கி.மு. மூன்றாம் நூற்றாண்டின்கண் எழுந்தவை' என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்தக் கல்வெட்டுச் செய்தியும் மதுரையின் பழமைக்குச் சான்று பகர்வதாகும்.

## அசோகனின் காலத்தில்

அசோகப் பேரரசனின் காலத்திலும் மதுரைப்பேரூர் புகழுடன் விளங்கியது. இதனைப் பௌத்தர் உவந்த மதுரை என்ற பகுதியிலே காணலாம்.

## வட மதுரை

தென்மதுரை தலைச்சங்கத்தின் இருப்பிடமாகத் திகழ்ந்ததனை நாம் அறிவோம். பிற்காலத்துக் கடைச்சங்கம் இருந்த மதுரையும் இதன் பெயரை ஒட்டியே எழுந்தது. ஆனால், இந்த மதுரையின் பெயரை ஒட்டி வடக்கேயும் ஒரு மதுரை எழுந்தது. பாரதக் கதையினாலே இதனை நாம் அறிகின்றோம். அந்த மதுரை கண்ணபிரானின் தாய்மாமனான கம்சனுக்கு உரியதாகும். இதனாலும், இம்மதுரையின் பழைமை நன்கு அறியப்படும். 'அருச்சுனன் பாண்டியனின் மகளை மணந்தான்' என்ற செய்தி, இக்கருத்தினை மேலும் அரண் செய்வதாகும்.

## கிரேக்கரின் தொடர்பு

பண்டைக் காலத்திய மதுரைக்கும் கிரேக்கர்களுக்கும் தொடர்பு நிலவிற்று. வாணிகத் தொடர்பு மட்டுமல்லாது, அரசியல் தொடர்புகளும் நிலவின. இதனை, முன்னரே மெகஸ்தனிசு என்பவர் எழுதிய குறிப்பினால் ஓரளவுக்கு நாம் அறிந்தோம்.

மேலும், கிரேக்கப் படைவீரர்கள் பலர் தமிழகத்துப் படையணிகளிலே பணியாற்றினார்கள் என இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றுள் சிலப்பதிகாரம்,

**'கடிமதில் வாயில் காவலிற் சிறந்த**
**அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு'**

என்று, கோவலன் மதுரைக்கோட்டை வாயிலைக் கடந்து சென்ற செய்தியைக் குறிக்கின்றது. 'கிரேக்கர்கள், அயோனியர்கள், உரோமர்கள் ஆகிய மத்தியதரைக் கடல் நாட்டினர் அனைவருமே அந்நாளில் 'யவனர்' என்ற பொதுப்பெயரால் அழைக்கப்பட்டனர்' என்பர். இங்கே குறிக்கப்பெற்ற கோட்டைக் காவலரான யவனர் 'கிரேக்கர்' என்றே அறிஞர்கள் கூறுவர்.

## உரோம நாட்டுத் தொடர்பு

பழைய மதுரைப் பாண்டியர்களுக்கும் உரோம நாட்டிற்கும் நெருங்கிய தொடர்புகள் நிலவிவந்தன. மதுரையைச் சுற்றிலுமுள்ள இடங்களில் அகழ்ந்து எடுக்கப் பெற்ற உரோமநாட்டு நாணயங்கள் இதனைக் காட்டுகின்றன. கி.மு. 27இல் உரோமப் பேரரசனாக இருந்தவன் 'அகஸ்டக சீசர்' என்பவன். இவன் அவைக்குப் பாண்டிய நாட்டு மதுரையினின்றும் தூதுவர்கள் சென்றனர். சீசரின் காலத்தைய உரோம நாணயங்கள், மதுரை மாவட்டத்திலே, பூமிக்கு அடியிற் புதையுண்டிருந்து, கிடைத்துள்ளன.

## எகிப்தின் தொடர்பு

எகிப்திய நாட்டுப் பேரழகியான கிளியோபாத்திராவிற்குத் தமிழகத்தின் முத்துக்களின்பால் மயக்கம் இருந்தது. இவ்வாறு கூறப்படும் வரலாறு, பாண்டிய நாட்டிற்கும் எகிப்திய நாட்டிற்கும் இடையே நிலவிய பழைய தொடர்புகளை நன்கு வலியுறுத்துவதாகும்.

## பாபிலோனின் தொடர்பு

'சாலமோன்' என்னும் பேரரசன் உலகப் புகழ்பெற்ற பழையகாலப் பேரரசருள் ஒருவன். இவன் பாபிலோனில் இருந்து சிறப்புடன் பேரரசு செலுத்தியவன் ஆவான். பாபிலோன் நகரத்திலே தேக்கும், மயில் தோகையும் பயன்படுத்தப்பட்டதாகவும், அவை 'ஒபிர்' என்ற இடத்திலிருந்து வந்ததாகவும் குறிப்பு ஒன்று காணப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 'ஒபிர்' தமிழகத்தின் 'உவரி'யே என்பார்கள். 'மதுரைப் பாண்டியர்க்கும் பாபிலோனியருக்கும் பழைய தொடர்புகள் பல இருந்தன' என ஆராய்ச்சியாளர்கள் இதனால் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

## தாலமியும் பிளினியும்

கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் 'பிளினி' என்பவர். கி.பி. 140இல் வாழ்ந்தவர் 'தாலமி' என்பவர். இவர்கள் எழுதியுள்ள குறிப்புக்களிலும் பாண்டியரின் மதுரைப் பேரரசினைப் பற்றிய குறிப்புக்கள் சில காணப்பெறுகின்றன.

## அராபியர் வாணிகம்

தமிழ் அரசர்களின் படையணிகளுள் குதிரைப் படை வலிமைமிக்க ஒரு பகுதியாகவே விளங்கியிருக்கிறது. அக் குதிரைகளுள் பெரும்பகுதி, அராபியப் பகுதி நாடுகளினின்றும் வந்தவை என்பார்கள். இதனால், தமிழ் நாட்டிலே, அந்நாளில் அராபியரின் வாணிகமும் பெருமளவில் நிகழ்ந்து கொண்டிருந்தது எனலாம். மதுரையும் மதுரைப் பாண்டியரும் உலகறிந்த புகழுடையவர் என்பதனை இச் செய்திகள் காட்டுவதாகும்.

இப்படியாகவும், இன்னும் பலவாறாகவும் காணப்படுகின்ற பழைய செய்திகள், பாண்டியரின் பேரூரான மதுரைப் பேரூர், பழைய நாளிலேயே உலகறிந்த புகழுடையதாகவும், 'அந்நாளைய உலகத்துப் பேரரசுகளுடன் வணிகத் தொடர்பும் அரசியல் தொடர்பும் கொண்டிருந்த பெருநகரமாகவும் விளங்கிற்று' எனச் சான்று பகர்கின்றன.

# 7. சிவன் உவந்த மதுரை

## மீனாட்சி கோயில்

மதுரைக்கண் புகழ்பெற்ற பெருங்கோயிலாக விளங்குவது, சொக்கநாதப் பெருமானின் திருக்கோயில் ஆகும். சொக்கநாதப் பெருமான், மலையத்துவச பாண்டியனின் திருமகளாகப் பிறந்திருந்த தடாதகைப் பிராட்டியாரான அம்மையை மணந்து கொண்டவர். இந்தத் திருமணத்திலே, அவர் பாண்டியனின் மருமகனும் ஆயினார். இதனால் மதுரைக்கோயிலை, 'மீனாட்சியம்மன் கோயில்' என்று உரிமையுடன் அழைத்துப் போற்றுகின்றனர். 'மீனாட்சி' என்பது, தடாதகைப் பிராட்டியாரின் பெயர்களுள் ஒன்று ஆகும்.

## சிலம்பு குறிக்கும் கோயில்

இந்தக் கோயில் மிகவும் பழைமையானது. மதுரையிலே சிவபெருமானுக்குத் திருக்கோயில் நிலைபெற்றிருந்த சிறப்பினைச் சிலப்பதிகாரமும் உரைக்கின்றது. 'அருந்தெறற் கடவுள் அகன்பெருங் கோயிலும்' (சிலம்பு 13-137) எனவும், 'நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்' (சிலம்பு 14-7) எனவும், இக்கோயில் சிலம்பிலே கூறப்பெற்றிருப்பதனைக் காணலாம்.

'அகன் பெருங் கோயில்' என்ற சொற்கள், கோயிலின் பேரளவையும் நமக்கு ஒருவாறு புலப்படுத்துவதாகும். கோயில் பரந்த நிலப்பரப்பிலே அமைந்திருந்தது என்பதனை, 'அகன்' என்ற சொல் குறிப்பிடுகின்றது. கோயில் மிகவும் உயரமுடன் திகழ்ந்த தென்பதனைப் 'பெருங்கோயில்' என்ற சொல் விளக்குகின்றது.

**அருந்தெறற் கடவுள் அகன்பெருங் கோயிலும்**
**பெரும்பெயர் மன்னவன் பேரிசைக் கோயிலும்**
**பால்கெழு சிறப்பிற் பல்லியஞ் சிறந்த**
**காலை முரசக் கனைகுரல் ஓதையும்**
**(சிலம்பு 13, 137- 140)**

என்று வருவனவற்றை நன்கு கவனித்தால், ஓர் உண்மை நமக்குத் தெளிவாகும். 'மதுரையினிடத்தே, பாண்டியனுக்கு உரித்தான பெரும் புகழ்பெற்ற அரண்மனையினைப் போலவே, மதுரைக் கடவுளாக விளங்கிய சிவபெருமானுக்கும் அங்கே பெருங்கோயில் இருந்தது' என்பதே அது. சிவபெருமானின்

கோயிலன்றிப் பிற கோயில்களும் மதுரை நகரில் இருந்தன. எனினும், இந்தப் பகுதியிற் சிலம்பு இவ் விரண்டையும் இணைத்துக் கூறுவதன் காரணம். அகற்சியாலும் பெரிதான தன்மையினாலும், இவ்விரண்டும் இணையொத்து விளங்கியதினாலேயே என்று கூறலாம்.

## நம்பியின் திருவிளையாடல்

சிவபிரான் போற்றுவதற்கு உரிய பெருங் கடவுளாக மதுரைப்பேரூரில் கோயில் கொண்டிருந்தனர் என்பது மட்டுமன்று; அவர், பாண்டியரின் இன்பதுன்ப வாழ்வியல்களிலும் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

பாண்டியனின் மகளை மணந்து பாண்டியரின் உறவுத்தெய்வமாக விளங்கியவர் சிவபெருமான் ஆவார். அந்த உறவினாலோ, அன்றித் தாம் கொண்ட கருணைப் பெருக்கினாலோ, பற்பல வியத்தகு செயல்களை மதுரையிலே அவர் நிகழ்த்தியிருக்கின்றார். இப்படிச் சிவபெருமான் நிகழ்த்திய பல்வேறு திருவிளையாடல்களையும் பற்றிக் கூறும் நூல்கள் சிலவாகும். அவற்றினைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ளுவோம்.

'திருவாலவாயுடையார் திருவிளையாடல்' என்ற பெயரோடு, செய்யுள் நடையிலே ஒரு நூல் உள்ளது. மதுரைச் சொக்கரின் திருவிளையாடல்களைக் கூறும் நூற்களுள், காலத்தாற் பழைமையானது இதுவே. 'செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர்நம்பி' என்னும் புலவர் பெருமான் இதனை இயற்றியவர். 'உத்தர மகா புராணம்' என்னும் வடமொழி நூலினை மொழிபெயர்த்துச் செய்யப்பட்டது இது என்பார்கள். 'பழைய திருவிளையாடல்' எனவும், வேம்பத் தூராரின் திருவிளையாடல்' எனவும், இதனைச் சான்றோர் போற்றுவார்கள்.

## கடம்பவன புராணம்

தொண்டை நன்னாட்டின் 'இலம்பூர்' என்னும் ஊரிலே, 'வீமநாத பண்டிதர்' என்னும் பெயருடைய புலவர் பெருமான் ஒருவர் இருந்தனர். இவர், 'கடம்பவன புராணம்' என்னும் பெயரால் செய்யுள் நடையிலே ஒரு நூலினைச் செய்தார். இதுவும், திருவிளையாடற் கதைகளைக் கூறுவதேயாகும். இதுவும், வடமொழி நூலினைத் தழுவிச் செய்யப்பட்டதே ஆகும்.

### சுந்தர பாண்டியம்

தொண்டை நாட்டின் 'வாயிற்பதி' என்னும் ஊரிலே, 'அனதாரி' என்றொரு புலவர் இருந்தார். அவர், "சுந்தர பாண்டியம்" என்றொரு நூலினை இயற்றினார். இதுவும் மதுரைச் சொக்கநாதரின் திருவிளையாடல்களை உரைப்பதே யாகும். வடமொழி நூலினைப் பின்பற்றிச் செய்யப்பட்டதே இதுவும். இதன்கண் காணப்பெறும் நகரப்படலம், மதுரையின் செழுமையினை மிக விரிவாகக் கூறுகிறது.

### பரஞ்சோதி திருவிளையாடல்

திருவிளையாடல்கள் பலவற்றினும், தமிழ் நாட்டிற் பெரிதும் பரவலாகக் கற்கப்பட்டு வருவது, பரஞ்சோதி முனிவர் செய்யுள்நடையிற் செய்த நூலோயாகும். இது, 'ஹாலாசிய மான்மியம்' என்னும் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பாகச் செய்யப்பட்டது என்பர். சொற்சுவை மலிந்த, சிறந்த இலக்கிய நூலாகவும் இது திகழ்கின்றது.

### திருவிளையாடற் பயகர மாலை

வீரபத்திரக் கம்பர், 'திருவிளையாடற் பயகர மாலை' என்றொரு செய்யுள் நூலைச் செய்துள்ளனர். இஃது ஒவ்வொரு திருவிளையாடலைப் பற்றியும் ஒவ்வொரு செய்யுளாகச் செய்யப்பெற்ற நூலாகும்.

'இலீலா சங்கிரக அத்தியாயம்' என்ற மற்றொரு நூலும், திருவிளையாடலைப்பற்றிய செய்யுள் நூல் ஆகும்.

இவ்வாறு, சிவபிரான் மதுரைநகரிலே நிகழ்த்திய திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் நூற்கள் பலவும், செய்திகளைச் சொல்லுகிற தன்மையிலே தமக்குள் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டனவாக விளங்குகின்றன. எனினும், அவற்றுள் காணப்படும் சில செய்திகள், நம் சிந்தனைக்கு உரியவைகளாகவும் விளங்குகின்றன. அவற்றை மட்டும் நாம் சிறிதளவு காண்போம்.

### திருவிளையாடலிலே நகரைப்பற்றிய குறிப்புக்கள்

முதலில் நிலத்தை, அதன் அமைப்பை ஒட்டி, நான்காகப் பிரித்தார்கள் நம் முன்னோர்கள். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பவை. பின்னர், இந்தத்தன்மைகள் கெட்டுப் பாழாகிக் கிடந்த நிலத்தை ஒரு பிரிவாக்கிப் 'பாலை' என்றனர்.

இப்படியாக அமைந்த நிலப்பகுதிகள் ஐந்தினும் பற்பல நகரங்கள் விளங்கின. எனினும், அவற்றுள் பயன்மிக்க நகரமாக விளங்கியது பாண்டியரின் மதுரை நகரமே யாகும்.

மிகவும் உயரமான அழகிய கோபுரங்கள் மதுரையில் இருக்கின்றன. சிவபிரான் திருநடனம் செய்கின்ற 'வெள்ளியம்பலம்' அங்கே இருக்கிறது. கயிலை மலையினையும் 'சக்கரவாள கிரி' யினையும் ஒப்பாகக் கூறக்கூடிய பெரியதான கோட்டை மதிலும் நகரைச் சூழ்ந்து அமைந்திருக்கிறது. அந்தக் கோட்டை மதிலைச் சூழ அமைந்து விளங்கும் அகழியோ மிகவும் ஆழமானது. 'கடல் போன்று பரந்து விளங்குவது அந்த அகழி' எனலாம்.

மதுரைமா நகரினை நான்கு தெய்வங்கள் காத்து வருகின்றன. கன்னி, கரியமால், காளி, திருவால வாய்த் தருமமூர்த்தி என்பன அவை.

## சக்தி பிறந்த நகரம்

சிவசக்தியே மலையத்துவச பாண்டியனின் திருமகளாகத் தோன்றினாள். 'தடாதகை' என்ற பெயருடன் வளர்ந்தும் வந்தாள். சிவபெருமானைத் திருமணமும் செய்துகொண்டாள்.

## பதஞ்சலி தொழுது போற்றினார்

பதஞ்சலி முனிவர் வடமொழியிற் சிறந்த பல நூற்களைச் செய்தவர். இவருடைய யோக சூத்திரத்தினை மிகவும் சிறத்த யோக தத்துவநூல் என்பார்கள். இவர், சிவபிரானின் திருநடனத்தைக் காண விரும்பினார். இவர் விருப்பப்படியே, சிவபிரான். வெள்ளியம்பலத்திலே திருக்கூத்து இயற்றினார். கண்குளிரக்கண்டு மனம் உவந்து போற்றித் துதித்தார் பதஞ்சலியார். அன்று அவர் கூறியதாக வழங்கிவரும் வடமொழிச் சுலோகத்தினை, இந் நாளினும் பலர் பாடிப் பெருமானைத் துதிக்கின்றார்கள்.

## வையையின் பிறப்பு

சொக்கர் திருமணத்திற்காக வருபவர்களுக்கு உணவு அளிக்க ஏராளமான சோற்றுக் குவியல்கள் ஆக்கப்பட்டன. திருமணம் முடிந்து, வந்தவர்கள் உண்டுபோன பின்னரும், மலைமலையாகச் சோறு எஞ்சிவிட்டது. அதனை உண்டு தீர்க்கக் குண்டோதரனை அழைத்தார் சிவபிரான்.

அவனும் அனைத்தையும் உண்டுவிட்டான். நீர் வேட்கை மிகுதியாக எழவே, அதனைப் போக்கியருளுமாறு சிவபிரானை

வேண்டினான். அப்போது அவருடைய அருளினாலே பாய்ந்தோடி வந்தது ஒரு பேராறு. அதுவே வையைப் பேராறு ஆகும். வேகவதி எனவும் இதற்குப் பெயர் உண்டு. நீர் வேட்கை தீர்ந்த குண்டோதரனுக்கு வேலை வேண்டுமல்லவா? வையை நீரைத் தேக்கிவைக்கப் பல குளங்களை வெட்டுமாறு ஈசன் அவனை ஏவினார். அவனும், அவராணைப்படி சென்று பல குளங்களை வெட்டினான்.

திருப்பரங்குன்றத்திற்கு வடக்கே இப்போதும் ஓர் ஏரி இருக்கிறது. 'தென்காற் கண்மாய்' என்று இதனை வழங்குகிறார்கள். இதன் கரையினைப் 'பூதம் கண்ட கரை' என்றும் சொல்லுகிறார்கள். 'இதன் அருகிலே ஒரு மலையும் இருக்கிறது. இதற்குக் 'கூடைதட்டிப் பறம்பு' என்று பெயர்.

அந்தக் குளம் குண்டோதரனால் வெட்டப்பட்டது எனவும், அவன் வெட்டிய மண்ணைக் கொட்டி உயர்த்தியதே அந்தக் குளத்தின் கரையெனவும், அவன் கூடையைத் தட்டிய இடமே கூடைதட்டிப் பறம்பாயிற்று எனவும் சொல்லுகின்றார்கள்.

மேலைச் சித்திரை வீதியிலே ஒரு மண்டபம் இருக்கிறது. 'அன்னக்குழி மண்டபம்' என்று அதற்குப் பெயர். குண்டோதரன் அன்னத்தை அள்ளி உண்ட காலத்திலே குழி விழுந்துபோனது அந்த இடம் என்கிறார்கள்.

## உக்கிரப் பெருவழுதி

சங்கத் தமிழ் நூல்களுள், 'பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி' என்பவனை 'ஐயூர் முடவனார்' பாடிய பாட்டொன்று உள்ளது. திருவிளையாடல்களும் ஓர் உக்கிரப் பெருவழுதியைக் குறிப்பிடுகின்றன.

மலயத்துவச பாண்டியனைப் பற்றி முன்னர்க் கூறினோம். அவனுக்கு ஒரு மகனும் பிறந்தான். அவன் பெயரே 'உக்கிரப்பெருவழுதி' என்பது. சடையுடன் பிறந்ததனால் 'கோச்சடில வர்மன்' என்றும் அவனை அழைத்தனர். அவனைப் பெற்றவள் ஆதிகுடியிற் பிறந்த 'வடிவ மங்கை' என்னும் பெயருடையவள் ஆவாள்.

மதுரைக்குத் தெற்கே 'கோச்சடை'' என்ற பெயருடன் ஓர் ஊர் இந்நாளிலும் விளங்குகின்றது. இது இவனால் அந்தணர்க்கு முற்றூட்டாக வழங்கப் பெற்றது என்கின்றனர். இவன் மனைவியின் பெயர் 'வடிவணங்கு' என்பதாகும். இவன்

'சுந்தரமாறன்' எனவும், 'முதுகுடுமிப் பெருவழுதி' எனவும் வழங்கப்படுகிறான்.

### நான்மாடக் கூடல்

ஒருசமயம், வருணன் மதுரை நகரை அழிக்கக் கருதினான். முதற்கண் கடலை ஏவினான். அப்போது, சிவபெருமான், புட்கலா வருத்தம் முதலிய நான்கு மேகங்களை அழைத்துக் கடல்நீரைக் குடித்து விடுமாறு பணித்தார். அவையும் அவ்வாறே குடித்துவிட்டன.

அதன்பின், வருணன் பெருமழையினைப் பெய்யுமாறு செய்தான். நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகி மதுரையைக் காத்தன. அதனால். 'நான்மாடக் கூடல்' என்ற பெயரும் இம் மதுரைக்கு ஏற்பட்டது.

### சங்கப் பலகை

கடைச்சங்கம் இருந்து மதுரையிலே தமிழாய்ந்த செய்தியினை இறையனாரகப்பொருள் முதலிய நூல்கள் கூறுகின்றன. ஆனால், சிவபிரானே கடைச்சங்கத்திற்கு உரிய சங்கப்பலகையினை அருளியதாகத் திருவிளையாடல் கூறுகிறது.

'அதனை மண்டபத்து நடுவே வைத்து முதற்கண் நக்கீரர் அதன்கண் இருந்தனர்; அது மீண்டும் வளரக் கபிலர் அமர்ந்தனர்; அது பின்னரும் வளரப் பரணர் அமர்ந்தனர்; இவர்கள் மூவரும் அமர்ந்து பிற புலவர்களுடன் கூடித் தமிழாய்ந்து தொகுத்தனர்' என்கிறது திருவிளையாடல்.

### இறையனார் களவியல்

இந்த அகநூலைச் சிவபெருமானே 'பேராலவாயர்' என்ற புலவராக வந்து அருளினார் என்பர். இந்நூற்கு உரைகண்டவர் பலர். அவ்வுரைகளைக் கேட்டு நக்கீரனாரின் உரையினைச் சிறப்புடையதெனக் காட்டியவர், முருகனின் அமிசமாக இருந்த உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மராவர் என்பர்.

### தருமியின் கதை

தருமிக்குப் பொற்கிழியினை உதவும் பொருட்டாகச் சிவபிரானே ஒரு செய்யுளைச் செய்து அளித்தனர். அதன் கண் பொருட்குற்றம் உள்ளதெனக் கூறி நக்கீரனார் அதனை ஏற்க மறுத்தனர். சிவபிரான் நெற்றிகண்ணைக் காட்டிய போதும், 'குற்றம் குற்றமே' என உரைத்த நக்கீரரைத் தம் குற்றத்தை

உணருமாறு சிவபிரான் செய்தனர். அந்தச் செய்யுள், 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் அருமையான குறுந்தொகைச் செய்யுளாகும்.

இவ்வாறு, மதுரைப் பேரூருக்கும் சிவபிரானுக்கும் தொடர்புகாட்டி வழங்கும் செய்திகள் பலவாகும். இதனால், 'சிவபிரான் உவந்த மதுரை' என்று இதனை நாம் கூறலாம்.

## 8. பௌத்தர் உவந்த மதுரை

### தோற்றுவாய்

பௌத்த மதம், கி.மு. ஐந்தாவது நூற்றாண்டிலே கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பெற்ற மதமாகும். அரிய கொள்கைகளையுடைய இந்த மதத்தைச் சார்ந்தோர், பழந்தமிழகத்தில் இருந்திருக்கின்றனர். 'மணிமேகலை' என்னும் நூலை இயற்றிய சான்றோரான மதுரைக் 'கூலவாணிகன் சாத்தனார்' இந்தச் சமயத்தைச் சார்ந்தவரே. இவரியற்றிய செய்யுட்கள் சங்கத் தொகை நூற்களுள்ளும் காணப் பெறுகின்றன. இதனால், கடைச்சங்க காலத்திலே, மதுரைப் பேரூரிலே, புத்தரின் கொள்கைவழிப்பட்ட மக்களும், புலவர்களும் பலர் இருந்தனர் என்று நாம் தெரிந்து கொள்ளலாம்.

### அசோகரின் சாசனம்

கி.மு. 273 முதல் கி.மு. 232 வரையில் வடநாட்டிற் பேரரசராக வீற்றிருந்தவர் அசோகர் என்பவர். இவர் மோரிய மன்னர்களுள் தலைசிறந்தவர் ஆவர். இவர் வெட்டுவித்துள்ள சாசனங்களுள், சௌராட்டிர தேசத்துக் கிர்னார் நகருக்கு அருகேயுள்ள பாறைக் கல்வெட்டு ஒன்று, இவர் பாண்டிய நாட்டிலும், மக்களுக்கும், கால்நடைகளுக்கும் மருத்துவ விடுதிகளை ஏற்படுத்திய செய்தியைக் கூறுகின்றது.

கி.மு. 258-ல் ஏற்பட்டதாகக் கருதப்படும், பெசவார் நகருக்கு அருகிலுள்ள பாறையிலே காணப்படுகின்ற மற்றொரு சாசனம், பாண்டிய நாட்டிலேயும் அசோகரின் 'தருமவிசயம்' என்னும் அறவெற்றி அடிக்கடி கைப்பற்றப் பட்டதைத் தெரிவிக்கிறது. இஃது அசோகர் பௌத்த நெறியைத் தமிழகத்திலும் பரப்பியதனைக் குறிப்பதாகும்.

### யுவாங் சுவாங்

இவர் ஒரு சீன நாட்டவர் ஆவர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்து பல ஊர்களையும் சென்று கண்டவர். கி.பி. 640இல் இவர் காஞ்சிபுரத்திற்கும் வந்தார். 'பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரைக்கு அருகே, அசோகரின் தம்பியான மகேந்திரரால் கட்டப்பெற்ற ஒரு புத்த விகாரை இருந்ததாகவும், அதற்குக் கிழக்கே அசோகரால் கட்டப்பெற்ற ஒரு தூபி இருந்ததாகவும், அவை இரண்டும் பாழடைந்து கிடந்ததாகவும்' இவர் குறிப்பிடுகின்றனர்.

### மகேந்திரர்

மகேந்திரர் அசோகரின் தம்பியாவார். இவர் தாமிரபரணி நாட்டினை அடைந்து, அதன் பின்னரே இலங்கைக்குச் சென்றனர் என்பார்கள். இந்த மகேந்திரரை அசோகரின் மகனார் எனவும் வேறு நூல்கள் கூறுகின்றன. இவருடன் இலங்கைக்குச் சென்றவர் அரிட்டர் என்பவர். இவர் பெயரால் 'அரிட்டாபட்டு' என்றோர் ஊர் உள்ளது. மதுரை மாவட்டத்தி லிருக்கும் இவ்வூர் அரிட்டரின் பெயரால் அமைந்ததே என்று ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள்.

### மதுரைக்காஞ்சி கூறுவது

'மதுரை நகரில் பௌத்தப் பள்ளிகள் பல இருந்தன' என்று, மதுரைக் காஞ்சி என்னும் நூல் கூறுகிறது. இந்நூல் "மாங்குடி மருதனார்" என்னும் புலவரால் பாடப்பெற்ற பெருமை உடையதாகும். இவர், அரசனாகிய நெடுஞ்செழியனுடன் நெருங்கிய அன்பு கொண்டிருந்தவரும் ஆவர். இதனால், இவர் கூறுவதனை உண்மையுரை என்றே நாம் கொள்ளலாம்.

'கணவரும் மனைவியரும் தம் பிள்ளைகளுடன் கூடியவராகப் பூசைக்கு வேண்டிய பொருள்களுடன் சென்று வழிபட்டனர்' என்றும் அவர் கூறுகின்றனர்.

**'பூவினர் கையினர் தொழுவனர் பழிச்சிச்**
**சிறந்து புறங்காக்கும் கடவுட் பள்ளி'**

என்ற தொடர்களும், 'பூசைக்கு வேண்டும் பூவினை யுடையவராய் வணங்கினவராய் மிகுத்துத் துதித்துப் பாதுகாத்தலை நடத்தும் பௌத்தப் பள்ளி' என அவற்றுக்கு நச்சினார்க்கினியர் கூறும் உரையும், இதனைத் தெளிவுபடுத்தும்.

### மலைய நாடு

*பாண்டிய நாட்டைச் சேர்ந்த மலைய நாட்டிலே பிறந்தவர் 'வச்சிரபோதி' என்னும் பௌத்தப் பெரியார் (கி.பி. 661- 730). இவரே சீனத்திலும் சப்பானிலும் சென்று பௌத்தக் கொள்கைகளைப் பரப்பிய பெரியார் என்பர்.*

### முடிவுரை

*இதுவரை கூறியவற்றையும், ஆசாரிய தம்மபாலர், வச்சிர போதி, தம்ம கீர்த்தி முதலிய பௌத்தப் பெரியார்கள் பாண்டிநாட்டில் (இது தாமிரபரணி நாடு என்று பாலி மொழியில் வழங்கும்) இருந்தவர்கள் என்பதனையும் அறியும்போது, மதுரைப்பேரூர், பௌத்தர்கள் சிறந்திருந்த பேரூராகவும் ஒரு காலத்திலே திகழ்ந்தது என்று நாம் அறியலாம்.*

## 9. சமணர் திரண்ட மதுரை

### சமணர்கள்

*'சமணர்கள்' என்றால் துறவிகள் என்பது பொருள். துறவு நெறியினை வற்புறுத்திக் கூறிய மதம் இது. அதனால் 'சமணம்' என்று அழைக்கப்பெற்றது. சமண சமயக் கடவுள் 'அருகதேவர்' என்பர். இந்தக் கொள்கைகளை ஆதியிலே 'விருசப தேவர்' பரப்பினார் எனவும், அவரைத் தொடர்ந்து இதுவரை 24 தீர்த்தங்கரர்கள் (பெரியார்கள்) தோன்றியுள்ளனர் எனவும், இனியும் இருபத்து நால்வர் தோன்றப்போகிறார்கள் என்பதும் இவர்கள் கருத்து. இவர்கள் மூன்று பிரிவினர்களாகப் பிற்காலத்து விளங்கினார்கள். சுவேதாம்பரர், திகம்பரர், ஸ்தான வாசியர் என்பவர் அவர். அவருள், திகம்பர சமணத் தவரே தமிழ் நாட்டில் நிறைந்து இருந்தார்கள். இவர்கள் உருவ வழிபாட்டினர்.*

### வர்த்தமானர்

*சமணரின் கடைசித் தீர்த்தங்கரர் இவர் ஆவார். இவர் கி.மு. 527 இல் தம் எழுபத்திரண்டாவது வயதிலே வீடுபேறு அடைந்தார். இவருக்குப் பின்னர் இவர் வழிவந்த மாணவர்கள் பலரும் இந்த மதக் கொள்கைகளைப் பரப்பினார்கள்.*

### பத்திரபாகு முனிவர்

இப்படிப் பரப்பியவர்களுள் பத்திரபாகு முனிவர் என்பவர் (கி.மு. 317- 297) மோரியப் பேரரசனான சந்திரகுப்தனின் (கி.மு. 322- 298) குருவாக விளங்கினார் என வரலாறுகள் உரைக்கின்றன. "மகத நாட்டில் பெரியதோர் பஞ்சம் ஏற்பட விருந்ததை முன்னரே அறிந்த இம்முனிவர், தாம் தம்முடைய சீடர்கள் பன்னீராயிர வருடனும், அரசை துறந்து தம்மைத் தொடர்ந்துவந்த சந்திரகுப்தனுடனும், தென்னாடு நோக்கி வந்தனர். இன்றைய மைசூர் நாட்டில் விளங்கும் 'சிரவண பெலகொள' என்னுமிடத்தில் இவர்கள் தங்கினார்கள். இவ்விடத்திலே சந்திரகுப்தரும் இவரும் வீடுபேறு அடைந்தனர். இங்கிருந்த காலத்திலே, இவர், விசாக முனிவர் என்னும் தம் சீடர்களில் ஒருவரை, சோழ பாண்டிய நாடுகளில் சமணத்தைப் பரப்பிவரும்படியாக அனுப்பினர். அவர்தான் பாண்டி நாட்டிற்குச் சமண சமயத்தைக் கொணர்ந்து பரப்பியவர்" என்பார்கள்.

### நேமிநாதர் காலத்தில்

'நேமிநாதர்' என்பவர் கண்ணபிரானின் காலத்திருந்த சமண தீர்த்தங்கரர் ஆவர். இவர் காலத்திலே தென்னாட்டிற்கு அகத்தியருடன் வந்த பதினெண்குடி வேளிர்களும் சமணர்களாகவே இருந்தனர். அவர்கள் அப்பொழுதே சமணத்தைப் பரப்பினார்கள் என்பார்கள் சிலர்.

### வச்சிர நந்தி

ஆதியிலே சமணசங்கம் ஒன்றாக இருந்தது. பின் நான்காகப் பிரிந்தது. அவற்றில் நந்திகணம் என்பது ஒன்று. அதனைச் சேர்ந்தவர் இவர். இவர் கி.பி. 470 இல், மதுரையிலே சமணரின் திராவிடசங்கத்தை நிறுவினார் என்று சமண நூல்கள் குறிப்பிடுகின்றன.

### திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் சைவசமய குரவர் நால்வரில் ஒருவர். இவர் காலத்திலே மதுரையிற் சமண சமயம் பெரிதும் செல்வாக்குடன் விளங்கிய செய்தியைப் பெரிய புராணத்தினாலே காணலாம்.

'சமணரின் செல்வாக்கைப் பாண்டியனிடத்திருந்தும் பாண்டிய நாட்டிலிருந்தும் அகற்றும் பொருட்டு ஞானசம்பந்தர்

மதுரைக்குச் சென்றார். பாண்டியனுக்கு வெப்புநோயை வரச்செய்தார். அத்னைச் சமணரால் தீர்க்க முடியாமற்போக, முடிவில் தாமே நீறுபூசி அதனைத் தீர்த்து, அவனைச் சைவன் ஆக்கினார்.

"பின்னர் அரசனைத் தொடர்ந்து நாட்டு மக்களும் சைவர் ஆனார்கள். இஃதல்லாமலும், சமணரை வாதிலே தோல்வியுறச் செய்து கழுவேறச் செய்தும் வெற்றி கொண்டார் ஞான சம்பந்தர். சமணரின் பாழிகளும் பள்ளிகளும் தகர்த்து அழிக்கப்பட்டன." இவ்வாறெல்லாம் சமணத்தின் செல்வாக்கினை ஞானசம்பந்தர் போக்கிய செய்தியைப் பெரிய புராணம் விரிவாகக் கூறுகிறது.

**எண்ணாயிரம் சமணர்**

மதுரையைச் சூழ எட்டு மலைகள் இருந்தன. அவற்றில் எண்ணாயிரம் சமணத் துறவியர்கள் இருந்தனர். அவர்கள் அனைவருமே கழுவேறினார்கள். இதனை, 'எண்பெருங் குன்றத்து எண்ணாயிரவரும் ஏறினார்கள்' என்று பெரிய புராணம் கூறுகின்றது.

**எட்டு மலைகள்**

சமணர் வாழ்ந்ததாகக் கூறப்படும் எட்டு மலைகள், பரங்குன்றம், யானைமலை, இருங்குன்றம் (அழகர்மலை) என்பனவும், ஒருவகம், பப்பாரம் பள்ளி, அருங்குன்றம், பேராந்தை, யானை என்பனவும் ஆகும்.

**யானை மலை**

இது மதுரைக்குக் கிழக்கே ஆறு கல் தொலைவில் உள்ளது. முன்னர்ச் சமணர் வாழிடமாக இருந்த இது, இப்போது, நரசிங்கப் பெருமாள் கோயில் கொண்டிருக்கும் இடமாக இருக்கிறது.

**நாகமலை**

இதுவும் மதுரைக்கு அருகிலே இருப்பதான ஒரு மலைதான். இங்கும் சமணர்கள் பேரளவில் இருந்திருக்கின்றனர்.

**இருங்குன்றம்**

இப்போது 'அழகர்மலை' என வழங்கும் திருமாலிருஞ் சோலைமலை இதுவே. இது, முருகன் கோயில் கொண்டிருக்கும் இடமாக இருந்து, சமணர் வாழிடமாக விளங்கி, இப்போது

அழகர் கோயில் இருக்குமிடமாகத் திகழ்கின்றது. திருவிளையாடற் கதையினையொட்டி 'இடபகிரி' எனவும் இம்மலையினை அழைக்கின்றார்கள்.

### பசுமலை

மதுரைக்கு அருகிலிருக்கிற ஒரு மலை இது. மாயப் பசுவைப் பெருமானின் ஏவலால் நந்திப் பெருமான் கொன்ற பிறகு, அந்தப் பசுவின் உடலே இப்படி மலையாகச் சமைந்தது என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது. இங்கும் சமணர்கள் பலர் இருந்தார்கள்.

### திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் இதன்கண்ணும், சமணத் துறவிகள் இருந்த பல குகைகள் இன்றும் காணப்படுகின்றன. தீர்த்தங்கரரின் உருவமும் பாறையில் செதுக்கப்பட்டுள்ளது.

### சித்தர் மலை

இந்த மலை 'மேட்டுப்பட்டி' என்ற ஊரிலே இருக்கிறது. இங்குக் காணப்படும் குகைகளும் கற்படுக்கைகளும் சமணர்களின் இருப்பிடமாயிருந்த இதன் தன்மையைக் காட்டுகின்றன.

### சமணமலைப் பாறைகள்

இவை மதுரைக்கு மேற்கே சுமார் ஐம்பது கல்தொலைவில் உள்ளன. அங்கங்கே சமண தீர்த்தங்கரர்களின் உருவங்கள் இம்மலையிற் செதுக்கப்பட்டிருப்பதனை நாம் காணலாம். இவ்வாறு, மதுரைப்பேரூரும், மதுரைச் சுற்றுப்புறங்களும் சமணர் வாழ்ந்து சிறந்திருந்த இடங்களாக விளங்கின என்று நாம் அறியலாம்.

### கவுந்தி அடிகள்

சிலப்பதிகாரத்திலே, கோவலன் கண்ணகியர்க்கு உறுதுணையாக விளங்கிய அம்மையார் இவர். இவர் சமண சமயத்துப் பெண்பால் துறவியர். சமணசமயத்து அறவுரைகளைக் கேட்கும் பொருட்டாக, இவரும் மதுரை செல்லுகின்றனர். இவர் செலவு பொருத்தமானதே என்பதனை, மதுரை நகரைச் சூழவும் சிறப்புடன் வாழ்ந்திருந்த எண்ணாயிரவர் சமணரைப்பற்றிய செய்திகள் விளக்குவனவாகும்.

இவ்வாறு, ஒருகாலத்தில் சமணர் பல்லாயிரவர் வாழ்ந்த பேரூராகவும், பாண்டியனே சமணனாக விளங்கிய சிறப்பினைக் கொண்டதாகவும் மதுரைப் பேரூர் திகழ்ந்தது.

## 10. சிலம்பு காட்டும் மதுரை

### அதிராச் சிறப்பின் மூதூர்

சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான இளங்கோவடிகள் மதுரையின் சிறப்பினை மனமுவந்து போற்றுகின்றனர். "சிறப்புடைய பேரூர்களாகச் சில ஒருகாலத்தே விளங்கினும், பின்னர் அவை அச்சிறப்பிற் குன்றிச் சீரழிந்து போதலும் நிகழ்வதேயாகும். இத்தகைய 'சிறப்பிலே குன்றிப் போகின்ற' ஒரு நிலைமை மதுரைக்கு என்றுமே வந்தடையாது" என்று, சிலப்பதிகாரப் பதிகம் போற்றுகிறது. 'அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்' என்று, மதுரையின் நிலைபெற்ற சிறப்பினையும் அது உரைக்கின்றது.

### தீதுதீர் மதுரை

'தென் தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை' என்றும் சிலம்பு மதுரையைப்பற்றிக் கூறுகின்றது. 'தென்திசைக்கண் தென்னவனாகிய பாண்டியனாலே பேணிக்காக்கப்பெறுவது; தமிழ்வளங் குன்றாது வாழுகின்ற புகழ் நிறைந்தது; நன்மை நிரம்பிய நாட்டிலுள்ளது; தீமையற்ற சிறப்பினை உடையது மதுரைப் பேரூர்' என்றெல்லாம் மதுரைப் பேரூரினை மனமுவந்து போற்றுகிறது சிலம்பு.

### தென்னவன் வாழ்க

கோவலன், கண்ணகி, கவுந்தியம்மை ஆகியோர் மதுரை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். உறையூரைக் கடந்து, ஓர் இளமரக்காவினிடத்தே இருந்த ஓர் இருக்கையிற் சென்று அமர்ந்திருக்கின்றனர். அவ்வேளை முதிய மறையவன் ஒருவன் அங்கே வருகின்றான். அவன் வாய் தென்னவனின் பெருமையைப் போற்றிக் கொண்டிருக்கிறது. அவன் வாய்மொழியாகவே மதுரையின் சிறப்பினை, மதுரை மன்னனின் உயர்வோடும், இளங்கோவடிகள் எடுத்துக் கூறுகின்றனர்.

### பொங்கிய கடல்

'தன் வலிமையின் சிறப்பினை வேற்றரசர்கள் பலருக்கும் தன் திருவடிகளாலேயே உணர்த்திய பெருமை உடையவன்

வடிம்பலம்பநின்ற பாண்டியன். அவன், தன்மீதும் வடிவேல் எறிந்த பெரும் பகையினைப் பொறுக்காது, கடலானது பொங்கி எழுந்தது. பஃறுளி யாற்றுடனே, பல மலையடுக்குகளை உடையதான குமரித்தொடரினையும், தன்னகத்தே அது விழுங்கிக் கொண்டது.

"இழந்த இடத்திற்கு ஈடாகப் புதிதாக எழுந்த வடதிசைக் கங்கையையும் இமயத்தையும் கைக்கொண்டு, தென்திசை முழுவதனையும் ஒரு குடைக்கீழ் ஆண்டவன்" அத் தென்னவன் ஆவான்.

## திங்கட் குலத்தவர்

"திங்கட் செல்வனின் திருக்குலத்தவர் பாண்டியர். அவர்களின் குடிவிளக்கம் அடையும்படியாக, ஆயிரங்கண்களை யுடைய தேவர் கோமான் பூட்டிய திறம்விளங்கும் ஆரத்தினைத் தன் ஒளிபொலிந்த மார்பிலே பூண்டவன் பாண்டியன்.

## மேகங்களை வென்றவன்

"எம் முதல்வனின் சென்னியிலேயுள்ள வளையை உடைத்தோன் இவன்' என்று, மேகங்கள் பாண்டியனுடைய நாட்டிலே மழை பெய்யாது அகன்றன. தன் நாட்டிலே தப்பாத விளைபொருள்களும், பெருவளமும் சுரக்குமாறு, அம் மேகங்களைச் சிறைப்படுத்தி, மழை பெய்விக்கச் செய்து ஆண்டவன் பாண்டியன்."

பாண்டிய மன்னனின் சிறப்பினை மாங்காட்டு மறையவனின் வாயிலாக மேற்கண்டவாறு கூறுகிறது சிலம்பு.

## பாணர் உரைத்தனர்

இதற்குப் பின்னர், மாதவியிடமிருந்து தன்பால் வந்த தூதனாகிய கோசிகனைக் கோவலன் கண்டான். தன் தாய் தந்தையரின் துன்பத்தைப் போக்குமாறு சொல்லி அவனை வழியனுப்பிவிட்டுப் பாணரோடு கூடி ஆடிப்பாடி மகிழ்ந்தான். அவர்களிடத்தே, மதுரையின் தொலைவைப் பற்றிக் கேட்கவும், அவர்கள், கோவலனுக்கு இப்படி உரைக்கின்றனர்:

## மதுரைத் தென்றல்

"வயிரம் பாய்ந்த அகில், சந்தனம், மணங்கமழும் குங்குமம், புழுகுக் குழம்பு ஆகியவற்றால் செய்த நன்மை பெருகச் செய்யும் சாந்தினையும், கத்தூரிச் சாந்தினையும் கலந்த கொழுஞ்

சேற்றிலே நீராடியும்; மகரந்தம் பொருந்திய கழுநீர் சண்பகம் ஆகியவற்றால் தொடுத்த மாலையோடு மாதவி மல்லிகை மனைவளர் முல்லை ஆகியவற்றின் விரிந்த மலர்களைத் தொடையல்போற் பரப்பியுள்ள படுக்கையிடத்தே பொருந்தியும்; சமையல் அறைகளிலிருந்து வருகின்ற தாளிதப்புகை, அகன்ற கடைவீதிகளிலே ஓயாது வாணிபம் புரிவோர் அப்பம், மோதகம் ஆகியவற்றைச் சுடுவதனின்றும் எழும் புகை, ஆடவரும் மகளிரும் உடனுறையும் இல்லத்தின் மேன்மாடத்திலே உண்டாக்கிய அகிற்புகை, அந்தணரின் ஆகுதிப்புகை ஆகிய பல்வேறு புகைகளினூடும் அளாவியும்;

"வெற்றிப் போருடையவனாக விளங்கும் பாண்டியனின் அரண்மனையிலே, அளந்து உணர்வதற்கும் அறியாத அளவிலும், ஆருயிரைப் பிணிக்கும் இயல்புடனும் விளங்கும் நறுமணக் கலவைகளின் தொகுதிகளைப் பிறரும் அறியுமாறு செய்வதற்கு, அவற்றின் மணத்தைத் தாங்கி வெளிப்பட்டும்;

"புலவர்களின் செம்மையுடைய நாவினாலே போற்றப்பட்ட சிறப்பினையுடைய பொதியத்துத் தென்றலைப் போன்றிராத மதுரைத் தென்றல் இதோ வந்து வீசுகிறதே இதனைக் காண்க. பாண்டியனின் செல்வம் மலிந்த மூதூர் மிகத் தொலைவானதன்று."

## எதிர்கொள்ளும் ஆர்ப்பு ஒலிகள்

பாணர்களின் பேச்சினாலே உள்ளம் தெளிவு பெற்றான் கோவலன். கவுந்தி அம்மையுடனும், கண்ணகியுடனும் மதுரைநோக்கிச் செல்லுகின்றான். அப்பொழுது மதுரை யினின்றும் எழுகின்ற ஆரவாரமான பேரொலி அவர்களின் காதுகளிலே விழுகின்றது. மதுரை நகரினின்றும் வரும் அந்த ஒலியைக் கேட்டு, அவர்களின் வழிநடைத் துன்பமெல்லாம் அப்போதே நீங்குகிறது.

## காலை முரசம்

அரிய அழித்தல் தொழிலுக்கு உரிய கடவுள் சிவ பெருமான்; அவனுக்கு உரியதான அகன்ற பெருங் கோயில் ஒன்று அந்நாளைய மதுரையிலே இருந்தது. பெரும்புகழ்பெற்ற மன்னவன் பாண்டியன்; அவனுடைய மிக்க புகழமைந்த அரண்மனையும் மதுரையில் இருந்தது. இவ்விரண்டு கோயில்களினின்றும், பகுதிப்பட்ட சிறப்பினை உடையவான பலவகை வாத்தியங்களாலும் சிறப்புற்ற, காலை முரசத்தின் பெரிதான ஒலிகள் எழுந்துவந்தன.

### நான்மறையும்- பாடலும்

*நான்கு வேதங்களை ஓதுபவரான அந்தணர்கள், காலையிலே வேதங்களை ஓதிக்கொண்டிருக்கின்ற ஓசையும் எழுந்தது.*

*பெருந்தவமுடையவர் பலரும், தத்தம் வழிபாட்டுப் பாடல்களை ஓத, அதனால் மிகுதியாக எழுந்த பேரொலியும் வந்தது.*

### நாளணி முழக்கம்

*மீளாத வெற்றியினையுடைய வேந்தனின் சிறப்போடு கூடியதாக, வாள்வீரர்கள் முழக்கிய நாளணி முழவுகளின் முழக்கமும் எழுந்தது. போரிலே பகைவரிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட களிறுகளின் பிளிற்றொலியும், காட்டிலே பற்றிக் கொணர்ந்த வலிய களிறுகளின் முழக்கமும், பந்தி பந்தியாக நின்ற குதிரைகளின் கனைப்பும், கிணைப் பறையினையுடைய மள்ளர்கள் எழுப்பும் வைகறைப் பாணியாகிய இசையும் எழுந்தன. இவையெல்லாம், கருங்கடலின் ஆர்ப்பொலிபோல ஒலித்தன. அதனால், கூடல்நகரிலே மகிழ்ச்சி மிகுந்தது. இந்த ஆர்ப்பொலிகள் கோவலன் ஆகியோரை எதிர்கொண்டு வரவேற்பனபோல, அவர்களை வந்து அடைந்தன. (சிலம்பு 11: 137-150.)*

### காலையிலே வையை

*அந்த ஒலிகளைக் கேட்ட அவர்கள், மகிழ்வுடன் மதுரையை நோக்கி நடக்கின்றனர். நடந்து, மதுரையின் ஒரு திசையிடத்தே அழகாக விளங்கிய வையைக் கரையினையும் அடைகின்றனர். வையையின் வனப்பிலே தங்களை மறந்து, அவர்கள் மயங்கி நின்றும் விடுகின்றனர்.*

*ஆற்றின் கரையிலே, எண்ணற்ற மலர்த்திரள்கள் எழிலுடன் பூத்திருக்கின்றன. குரவம், மகிழம், கோங்கம் , வேங்கை, வெண்கடம்பு, சுரபுன்னை, மஞ்சாடி, மருதம், சேடல், செருந்தி, சண்பகம், பாதிரி ஆகிய மரங்களின் கிளைகளில் எல்லாம் மலர்கள் நிறைந்திருக்கின்றன. குருக்கத்தியினும் முல்லையினும் பூக்கள் விளங்குகின்றன. முசுண்டை, அதிரல், கூதாளம், வெட்பாலை, மூங்கில், கொன்றை, பிடவம், மயிலை என்னுமிவற்றிலும் பூக்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து, அனைத்தும் ஒரே மலர்க்காடாகத் தோன்றுகின்றன. உயரமான ஆற்றின்கரையோ, மலர்க் கோவையான மேகலையைக்*

கட்டியிருக்கும் வையைப் பெண்ணாளின் இடையினைப் போலத் தோற்றுகின்றது.

அடிப்பக்கம் அகன்றும், மேற்பக்கம் குவிந்தும், மலர் செறிந்தும் விளங்கிய ஆற்றிடைக் குறைகள், வையைப் பெண்ணாளின் பொலிவுடைய மார்பகங்களைப் போலக் காணப்பட்டன.

கரையிடத்தே நின்ற முருக்க மரங்களினின்றும் வீழ்ந்துள்ள சிவந்த பூவிதழ்கள், அவள் வாயிதழ்களைப் போன்று செவ்விதாக இருந்தன. அருவியோடு வந்து கொண்டிருந்த முல்லை மலர்கள், அவளுடைய பல்வரிசையைப் போன்றிருந்தது. குறுக்கும் நெடுக்குமாகத் திரிந்த கயல்மீன்கள், அவளுடைய பிறழ்கின்ற நெடுங் கண்களைப் போலத் தோன்றின. மணமலர் நீங்காத வரியுடைய கருமணல், மலர்சூடிய அவளின் கூந்தலைப் போன்றிருந்தது.

உலகினைக் காத்து உணவு தந்து உதவும் பெரிய கொள்கையினை உடையவள்; புலவர் நாவிலே பொருந்தியிருக்கும் பூங்கொடியானவள்; புலவர் நாவிலே பொருந்தியிருக்கும் பூங்கொடியானவள்; வையை என்னும் வளம்பொய்யாத பாண்டியரின் குலக்கொடி. அவளே, அங்ஙனம் மிக்க பொலிவுடன் விளங்கினாள்.

கண்ணகிக்கு மேல்வரும் துயரத்தினை அவள் முன்னரே அறிந்தனள் போலும்! அதனால் புண்ணிய நறுமலர் என்னும் ஆடையினாலே தன் மேனிமுழுவதும் போர்த்துக் கொண்டவளாகத் தன் கண்களிலே நிறைந்த கண்ணீர்ப் பெருக்கைக் கண்ணகிக்குக் காட்டாதபடி மறைத்தவளாக, அடக்கிக் கொண்டும் விளங்கினாள்.*

கண்ணகிக்கு மேல்வரும் துயரத்தினை அவள் முன்னரே அறிந்தனள் போலும்! அதனால் புண்ணிய நறுமலர் என்னும் ஆடையினாலே தன் மேனிமுழுவதும் போர்த்துக் கொண்டவளாகத் தன் கண்களிலே நிறைந்த கண்ணீர்ப் பெருக்கைக் கண்ணகிக்குக் காட்டாதபடி மறைத்தவளாக, அடக்கிக் கொண்டும் விளங்கினாள்.* (சிலம்பு 11. 111- 173.)

**ஓடங்களிற் பலவிதம்**

'நீரோடும் ஆறு இதுவன்று; இது மலர் வெள்ளம் ஓடுகின்ற ஆறு' என்று கூறித் தொழுதனர் அவர்கள். குதிரை முகப்பினையுடையவும், யானை முகத்தை உடையவும், சிங்க

முகத்தினை உடையவுமாகப் பற்பல ஓடங்கள் வையைப் பெருந்துறையினிடத்தே விளங்கின. அவற்றுள் ஒன்றிலேறி அவர்கள் மதுரையை அடையவில்லை. கவுந்தி அம்மையுடன், மரத்தாலான ஒரு புணையிலே ஏறிச்சென்று, இனிய மலர் நிறைந்த நறுமணம் விளங்கும் சோலை ஒன்றின் தென்கரையினை அவர்கள் அடைந்தனர்.

## நடுங்கிய மலர்கள்

அழித்தற்கு அரியதான காவற்காடு சூழ்ந்திருக்கும் மதுரையின் அகழி தோன்றியது. அதனைச் சுற்றியபடியே அவர்கள், நகரை வலம்வந்தனர். 'தேவர்கள் வீற்றிருக்கும் மதுரை நகரம் ஆதலால், வலம் கொள்ளுவதற்கு அது பெரிதும் தகுதி உடையதாகும்' என்று அவர்கள் கருதினார்கள்.

அகழியில் குவளைமலர்களும், ஆம்பல் மலர்களும், தாமரை மலர்களும் நிறைந்திருந்தன. பண் இசைக்கும் தன்மையுடைய வண்டினம், அப்பூக்கள்பால் விருப்புற்று ஒலிசெய்து ஏங்கியவாறு, அவற்றை அடைதலை மேற்கொண்டு. கால் வைத்தன. அம் மலர்களின் காம்புகள் அப்போது நடுங்கின. அந் நடுக்கம், கோவலனும் கண்ணகியும் பின்னர் அடையப் போகும் துயரினை முன்னரே அறிந்து, அம் மலர்களும் வருந்து வதைப் போன்றிருந்தன.

## கை காட்டும் கொடிகள்

பெரிய கேட்டையின்மீது, போரைக் குறிப்பிட்டு எடுத்தள்ள நெடிதான கயற்கொடி உயரமாகப் பறந்து கொண்டிருந்தது. அது, 'நீவிர் மதுரைக்கு வாராதீர்' என்று, அவர்களின் வரவைத் தடையிட்டு மறித்துக் கைகாட்டுவது போல அசைந்துகொண்டு இருந்தது.

## புறஞ்சிறை மூதூர்

கொடியினைக் கண்டபின்னர் அவர்கள் புறஞ்சிறை மூதூரைச் சார்கின்றனர். பறவையினம் நிரை கொண்டிருக்கும் வயல்களையும் சோலைகளையும் கொண்டதாக, வெள்ளம் போன்ற நீர்ப்பெருக்கினைக்கொண்ட பண்ணையும், பரந்த நீர்கொண்ட ஏரியும், குலைகுலையாகக் காய்களையுடைய தென்னை வாழை கமுகு முதலியவையும், மூங்கில்கள் செறிவுற்றுப் பந்தரிட்டதுபோல விளங்கும் இடமும் கொண்ட இருப்பிடம் அது. அறம் புரிகின்ற மாந்தர்களை அல்லாமற், பிறர்

சென்று தங்குவதற்கு உரியதல்லாத புறஞ்சிறை மூதூர் என்பதும் அதுவாகும். அங்கே, அவர்கள் தங்கினர்.

**காலை முரசம்**

கதிரவன் மதுரை நகரைத் துயிலெழுப்பி வானத்தே எழுகின்றான். நெற்றிக்கண்ணால் நோக்குதலையுடைய சிவபெருமானின் கோயிலிலும், கருடச் சேவலைக் கொடியாக உயர்ந்த திருமாலின் கோயிலிலும், வெற்றி தரும் கலப்பை யினைப் படையாக உயர்த்த பலராமனின் கோயிலிலும், கோழிச் சேவலைக் கொடியாக உடைய முருகப் பிரானின் கோயிலிலும், அறநெறியாளரின் பள்ளிகளிலும், மறவொழுக்கம் விளக்க முறுகின்ற மன்னவனின் கோயிலிலும், வெண்சங்கின் முழக்கத்துடனே காலை முரசத்தின் பேரொலியும் எழுந்தன.

**சுருங்கை வழி**

கவுந்தி அம்மையிடம் விடைபெற்றுக் கோவலன் மதுரைப் பேரூரினைக் காணச் செல்லுகின்றான். அவனைத் தொடர்ந்து நாமும் செல்வோம்.

முதலிற் கட்டுவேலி சூழ்ந்த காவற்காடு வருகிறது. அதனைக் கடந்ததும், நகரைச் சூழ்ந்து கிடந்த அகழி தோன்று கிறது. அந்த அகழியின் ஒருபுறத்தே, யானைத்திரளின் போக்கு வரத்திற்கென அமைந்த சுருங்கைவழி ஒன்றும் இருக்கிறது. அதன் வழியாகச் செல்லுகின்றான் கோவலன்.

**கோட்டை வாயில்**

கோட்டை வாயிலிலே கடுமையான காவல் விளங்குகிறது. காத்தலிலே சிறந்தவரும் கொலைவாளினை ஏந்தியவருமான யவன வீரர்கள் அங்கே விழிப்புடன் காத்து நிற்கின்றனர். அவர்கள் ஐயமுறாதபடி புகுந்து சென்று, கோட்டையின் உட்பகுதியினை அடைகின்றான் கோவலன்.

**அருங்கலச் செப்பு**

இந்திரனின் அருங்கலன்களைப்பெய்து வைத்திருக்கும் செப்பானது வாய்திறந்து கிடப்பதுபோல, வளமுடன் தோன்றிய கோட்டையின் உட்புறப் பகுதியிலே நுழைகின்றான் அவன்.

**திருவீதிகள்**

செழுமையான குடியிலே தோன்றிய செல்வவான்களோடு, நாடுகாவல் என்னும் பணிபூண்டோரும் இன்பமுடன் வாழ்ந்திருக்கும் வீதியினைக் கண்டு இன்புறுகின்றான் கோவலன்.

அதனையடுத்துப் பண்ணும் கிளியும் பழித்த இனிய சொல்லினம், அறுபத்துநான்கு கலைஞானமும் உணர்ந்தோரு மான கணிகையர் மரபினர் வாழ்கின்ற இரு பெரிய வீதிகளையும் கண்டு மகிழ்ந்தவனாக, அவன் மேலும் செல்லுகின்றான்.

## அங்காடி வீதி

அங்காடி வீதியிலே செல்லும் கோவலன், அரசரும் பெறுவதற்கு ஆசை கொள்ளும் செல்வவளம் மிகுந்த அதனைக் கண்டு வியப்டைகின்றான். மூடு வண்டிகள், பாண்டில் என்னும் வண்டிகள், அழகிய தேர்மொட்டுகள், உடல் புகுந்து கொள்ளு மாறு அமைந்த கவசங்கள், தோட்டிகள், தோலாற் செய்த கைத்தாளங்கள், அரைப் பட்டிகைகள், வளைதடிகள், வெண்சாமரைகள், பன்றிமுகக் கடகுகள், கிடுகின் படங்கள், கானப் படங்கள், முத்துப் பதித்த குத்துக் கோல்கள் ஆகிய பலவும் அங்கே திரள்திரளாகக் குவிந்து கிடக்கின்றன.

செம்பாலும் வெண்கலத்தாலும செய்தனவும், கயிற்றாற் பின்னியனவும், மாலைபோலப் புனைந்தனவும், ஈர்வாள் கொண்டு ஈர்ந்தனவும், தந்தத்தால் கடைந்து செய்யப்பட்டனவும் ஆகிய பற்பல பொருள்களும் அங்கே விளங்குகின்றன.

புகைப்பதற்காவனவும், சாந்திற்காவனவும், பூவிற் புனைந்தனவும், இன்ன பிறவும் காணப்பெறுகின்றன. இவை எல்லாம் வகைவகையாக அங்காடி வீதியிற் குவிந்து கிடந்தன.

## இரத்தினக் கடைவீதி

அங்காடி வீதியைக் கடந்து இரத்தினக் கடைத்தெருவிலே கோவலன் நுழைகின்றான். அங்கே விளங்கிய நவமணிகளின் வகைகளையும் பிறவற்றையும் கண்டு வியப்புற்றவனாக, அவன் மேலே செல்லுகின்றான்.

## பொன்கடை வீதி

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொன்னினும் வணிகம் புரிவோர் இருந்த வீதிக்குக் கோவலன் அதன்பின் வருகின்றான். அங்கே அறிவிக்கும் சிறுசிறு கொடிகளுடனே விளங்கும் அளவற்ற பொற்குவியல் களைக் காணுகின்றான்.

## அறுவை வீதி

நூலினாலும், மயிரினாலும், நுழைநூல் பட்டினாலும் நெய்யப்பட்ட நல்ல துணிமடிகள், தம் இனவகை தெரியாதபடி

பல நூறாக அடுக்கிக்கிடக்கும் அறுவை வீதியைக் கண்டு, கோவலன் அதன்பின் மகிழ்கின்றான்.

**கூல வீதி**

நிறைகோலான துலாத்தினையுடைவர், பறையென்னும் அளவு கருவியினர், மரக்கால் என்னும் அளவு கருவியினர் ஆகிய தரகுசெய்பவர் எங்கணும் திரிந்து கொண்டிருக்க விளங்கிய, மிளகுக்கு உரிய காலம் அல்லாத போதும் கருமையான மிளகு மூட்டைகளுடனே தானியங்களும் குவிந்துக் கிடக்கும், கூலவீதியினைக் கண்டும் அவன் வியக்கின்றான்.

**நால்வேறு வீதிகள்**

அரசர், வாணிகர், அந்தணர், வேளாளர் என்ற நால்வகைக் குடியினரும் தனித்தனியாக வாழ்ந்த, நால்வகையான பல்வேறு தெருக்களையும், அதன்பின் அவன் காணுகின்றான்.

அந்தியும், சதுக்கமும், ஆவணவீதியும், மன்றமும், கவலையும், மறுகும் ஆகிய அனைத்தும் அதன்பின்னர் அவன் சுற்றித் திரிகின்றான். திரிந்த பின்பு, உச்சிவெயிலும் நுழையாதபடி நெருக்கமான பெரிய வீடுகளையுடையதாகப் பசுமையான கயற்கொடிப் பந்தரின் நிழலின் கீழாக, பாண்டியன் காத்துவரும் பேரூரைக்கண்டு மகிழ்வு எய்திய அக்கோவலன், நகரைக் கடந்து, மீண்டும் புறஞ்சிறை மூதூர்க்குத் திரும்பி வருகின்றான்.

**அவன் கண்டவை**

நிலம் வளங்கொழித்துத் தருகின்ற செல்வத்தின் செழுமையுடனே, மக்கட்கு வாய்த்த நிழல் போலப் பேணிக் காக்கும் கடமையை மேற்கொண்டு ஆட்சிச் சக்கரத்தினை நிகழ்த்தி வருபவர் பாண்டியர்கள். அவர்களுடைய செங்கோலின் செம்மையினையும் கோவலன் மதுரையிற் கண்டான். அவர்களுடைய குடைநிழலின் தண்மையினையும் அவன் அறிந்தான். அவர்களது வேலின் வெற்றிச் சிறப்பையும் பார்த்தான். இவை எல்லாம் விளங்கிய தன்மையுடனே, நகரைவிட்டு என்றும் அகன்று அறியாத பண்பினாலே மேம்பட்ட குடிகளையுமுடைய மதுரை மூதூரைக்கண்டு, அவன் பெரிதும் வியந்தான்.

இவ்வாறு, கோவலன் மதுரையைக் கண்டதனைச் சிலம்பு நயமுடன் கூறுகிறது.

**கோட்டைக் காவல்**

இதன்பின், கவுத்தியடிகள் கண்ணகியை மாதரிபால் அடைக்கலமாக ஒப்பிக்க, அவளுடன் அவர்கள் மதுரைக்குட் செல்லுகின்றனர். அந்த இடத்திலே மதுரைக் கோட்டையின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றிச் சிலம்பு கூறுகிறது.

"கண்ணகியுடன், மாலை ஞாயிறு மேற்றிசையிலே சென்று மறைகின்ற வேளையிலே, மாதரி தன் வீடுநோக்கிச் செல்லுகின்றாள். காவற்காடும் அகழியும் கடந்தபின், அவர்கள் கோட்டையை அடைகின்றனர்.

வளைவாக அமைந்த விற்பொறி அமைந்த கடமும், கருவிரல் குரங்கின் உருவிலே அமைந்த பொறியும், கல்வீசும் கவண்பொறியும், கொதிக்கும் எண்ணெயைச் சொரியும் கருவிகளும், சாணகம் கரைத்துக் கொதிக்க வைத்து ஊற்றும் மிடாக்களும், கற்களிட்ட கூடையும், தூண்டிற் பொறிகளும், தொடக்குப் பொறியும், ஆண்தலை அடுப்புப் பொறியும், கவறுபட்ட நெடுங்கொம்புகளும், கழுக்கோலும், அம்புக் கட்டுகளும், மறைய நின்று போரிடற்கான புழைகளும், தலைவாங்கும் ஐயவித் துலாமும், தொடுவார் கைகளை ஊடுருவிச் சென்று வருத்தும் ஊசிப் பொறியும், பகைவர் மேற்சென்று தாக்கும் கிச்சலிப் பொறியும், பன்றிப் பொறியும், கோட்டை கதவுகளுக்கு இட்டிருக்கும் எழுவும், சீப்பும் கணையமும், எறிகோலும், குந்தமும், வேலும், குருவித்தலைகளும் ஆகிய பலவற்றைக் கொண்ட காவல் ஏற்பாடுகள் நிரம்பியிருந்தன.

நாள் முழுவதும் கோட்டை வாயிலிற் கயற்கொடி, பறந்துகொண்டிருந்தது. இவற்றைக் கண்டபடியே மாதரி கண்ணகியுடன் தன் வீடு சென்றனள்." ( சிலம்பு 15: 203- 217)

மதுரைக் கோட்டையிலே இத்துணைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் விளங்கின. பாண்டியரின் போரியல் அறிவு எவ்வளவு உயர்வுடன் இருந்தது என்பதனை இவை எல்லாம் காட்டுகின்றன.

## 11. சங்க காலத்து மதுரை

'மதுரை' என்று குறிப்பிடுகிற போது, இன்று இருக்கிற மதுரைப்பேரூரை நாம் நம் உள்ளத்திலே கொண்டுவிடக் கூடாது. சங்ககாலத்து மதுரை இஃதன்று. இம் மதுரைக்குக்

கிழக்கே வையையாற்றின் தென்கரையிலே அஃது அமைந்திருந்தது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவில் தமிழகத்தே ஏற்பட்ட களப்பிரர்களின் படைஎழுச்சியினாலே அதுஅழிந்து போயிற்று.

திருப்பரங்குன்றத்தைக் குறிப்பிடுகின்ற புறநானூற்றின் நூற்றுநாற்பத்தொன்பதாவது பாடலுள், தாயங் கண்ணனார் என்னும் சான்றோர்,

**'கொடி நுடங்கு மறுகிற் கூடற் குடாஅது**
**பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய**
**ஒடியா விழவின் நெடியோன் குன்றம்'**

என்று கூறுகின்றனர். 'திருப்பரங்குன்றம் மதுரைப் பேரூருக்கு மேற்காக இருப்பது' என்னும் இதனால், இன்றைய பரங்குன்றத்திற்குக் கீழைத் திசைக்கண்ணேயே அந்நாளைய மதுரை இருந்தது என்பது புலனாகும்.

நக்கீரனாரின் திருமுருகாற்றுப்படையும், 'மதுரைக்கு மேற்கிற் பரங்குன்றம்' என்றுதான் கூறுகின்றது. இதனால், சங்க காலத்துப் பேரூரான மதுரை இன்று காணப்பெறுகின்ற மதுரையன்று எனலாம்.

வையையின் தெற்குக் கரையிலேதான் அந்த மதுரை இருந்தது என்பதனை,

**'மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்**
**தேமலர் நறும்பொழில் தென்கரை எய்தி'**

என்ற சிலப்பதிகார அடிகளினாலே நாம் அறியலாம்.

இன்றுள்ள மதுரைக்குச் சற்றுத் தொலைவிலே, பழமதுரை மேடு என்றொரு மேடு உள்ளது. அங்கே பழமதுரை முனியன் கோயில் என்றொரு கோயிலும் இருக்கிறது. அந்த இடத்திலே தான் மதுரைப் பேரூர் சங்ககாலத்திலே விளங்கியிருக்க வேண்டும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

## மதுரை நகரின் அமைப்பு

பழைய மதுரை நகரம் தாமரைப்பூவினைப் போன்று வட்டவடிவமாக அமைந்திருந்தது. அதனைப் பழைய பரிபாடற் செய்யுள் ஒன்று இவ்வாறு கூறுகிறது:

"சிறப்புடைய மதுரையாகிய பேரூரானது திருமாலின் தொப்புளிலே பூத்த தாமரைப் பூவினைப் போன்றதாகும்.

அப்பூவின் அகவிதழ்களைப் போன்றவை அதன் தெருக்கள். அவ்விதழ்களின் நடுவே உள்ள அரிய தாமரைக் கொட்டையினைப்போல விளங்கியது, பெருமையிற் சிறந்தவனாகிய பாண்டியனின் அரண்மனை. அந் நகரிலேயிருக்கிற குடிமக்கள் குளிர்ந்த தமிழ்மொழியினை பேசுபவர்கள். அவர்கள் அத் தாமரைமலரின் மகரந்தப் பொடியினைப் போன்றவராவர். அவர்களிடத்துப் பரிசில் பெறுவதற்காக வேற்று நாட்டிலிருந்து வரும் இரவலர்கள், அம் மகரந்தப் பொடிகளை உண்ணவரும் வண்டுகளை ஒத்தவர்கள் ஆவர்."

இந்த வருணனை, மதுரை நகரத்தின் வட்டவடிவமான அமைப்பினை நமக்கு நன்கு அறிவுறுத்துகின்றது. சிறந்த தொரு நகரமைப்புத் திட்டப்படி, சங்ககால மதுரை அன்று அமைந்து விளங்கிற்று என்பதனை, இது காட்டுவதாகும்.

## கோட்டை மதில்

இப்படி அமைந்த இந்நகரைச் சுற்றிலும் இருவகையான கோட்டை மதில்கள் இருந்தன. அவை அகமதில் எனவும் புறமதில் எனவும் விளங்கின. ஒன்று உட்புறத்தும், மற்றொன்று அதனையடுத்த இடைவெளிக்குப் பின்னர் வெளிப்புறத்துமாக விளங்கின.

## புறஞ்சேரி

இந்த இரண்டு கோட்டைகளுக்கும் இடைப்பட்ட வெளியிடம் புறஞ்சேரி என்ற பெயருடனே விளங்கிற்று. இந்தப் புறஞ்சேரியில் அறத்துறை மாக்கள் பலரும் அந்நாளிலே தங்கி வாழ்ந்தனர்.

மதுரை நகரம் வட்டவடிவினதாக அமைந்திருந்தது என்பதனை, 'இளைசூழ் மிளையொடு வளைவுடன் கிடந்த இலங்குநீர்ப் பரப்பின் வலம்புணர் அகழி' எனவரும் சிலப்பதிகார அடிகளும் காட்டும். 'வளைவுடன்' என்ற சொல், வட்டவடிவமான தன்மையைக் குறிப்பதனையும் அறிக.

மதுரை நகரின் கோட்டை வாயில்களிலே 'பந்தும் பாவையும் கட்டித் தூக்கியிருந்தனர்' என்கிறது திருமுருகாற்றுப் படை. பகைவரை மகளிராகக் குறிப்பிட்டு ஏளனஞ் செய்வதற் கான அடையாளங்கள் அவை. அவற்றருகே, செருப்புகன்று எடுத்த, மிகவுயரத்தே பறந்திருக்கும் நெடுங்கொடியும், அந்நாளிலே மதுரையிற் பறந்து கொண்டிருந்ததாம்.

இந்தக் கோட்டை வாயில்களின் காவல் ஏற்பாடுகள் மிகவும் வியப்பானவை. அவற்றின் விரிவைச் சிலப்பதிகாரம் காட்டும். புறக்கோட்டையினைச் சூழ நாற்புறமும் காவற்காடும் அகழியும் விளங்கின. வடக்குப் புறத்து அகழியாக வையைப் பேராறு ஓடிக்கொண்டிருந்தது.

கோட்டையின் நாற்புறத்துக்கும் நான்கு வாயில்கள் விளங்கின. அவை நெடிதான வாயில் நிலையினையும், பலகாலும் நெய்யிடுதலால் கருகின திண்மையான செறிவுள்ள கதவினையும் உடையன. மேகம் உலாவும் மலைபோல் உயர்ந்த மாடங்களையும் அவை தம் மேற்புறத்தே கொண்டிருந்தன.

கண்ணகி கீழ்த்திசை வாயிலின் வழியாகக் கோவலனுடன் மதுரைக்குள் சென்றதாகவும், மதுரையை விட்டு வெளியேறும்போது மேற்றிசை வாயில் வழியாகச் சென்றதாகவும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இது நாற்புறமும் இருந்த வாயில்களைப் பற்றிய செய்தியினை அறிவதற்கு உதவும்.

கோட்டைக் காவலுக்குரியவராக யவனவீரர்கள் அந்நாளில் விளங்கினர் என்கிறது சிலம்பு. இவர்கள், 'கிரேக்கர்கள் அல்லது அயோனியர்களாயிருக்க வேண்டும்' என்பார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

## தெருக்களும் பிறவும்

நகரில் இருந்த பல்வேறு தெருக்களைப் பற்றியும், கோயில்களைப் பற்றியும், 'சிலம்பு காட்டும் மதுரை' என்ற பகுதியிலே கூறியிருப்பதனைக் காண்க. கலைமகளுக்குத் தனியாகக் கோயிலொன்றும் அந்நாளிலே இருந்தது. மணிமேகலையிலே இப்படி ஒரு செய்தி காணப்பெறுகின்றது. 'சிந்தாதேவி கோயில்' என்று அதற்குப் பெயர்.

## நீதி மன்றம்

'அறங்கூறு அவையம்' என்ற பெயருடனே மதுரையின்கண் நீதிமன்றம் ஒன்றும் சிறப்புடன் விளங்கிற்று. இதனை, 'மதுரைக் காஞ்சியின் 490-2 அடிகளால் நன்கு அறியலாம்.

இவ்வாறாக, சங்ககால மதுரையின் அமைப்பினைப்பற்றி இன்னும் பற்பல செய்திகள் சங்க நூற்களுள் காணப் பெறுகின்றன. அவையெல்லாம் மதுரைப் பேரூரின் அமைப்பினை, பெரும்சிறப்பினை ஒருவாறாக நாமும் ஊகித்து அறிந்து கொள்வதற்கு உதவுவனவாம்.

# 12. நீதி சிறந்த மதுரை

மதுரை நகரம் மிகவும் சிறப்புற்றிருந்த பற்பல செய்திகளையும் நாம் கண்டோம். இனி, மதுரை நகரம் அதனைக் காத்துவந்த பாண்டியரின் அறச் செப்பத்தினாலேயும் அந்நாளிற் புகழுடைய பேரூராகத் திகழ்ந்தது. அந்தச் சிறப்பினைப்பற்றிய செய்திகளை இந்தப் பகுதியிலே காண்போம்.

## தென்னவனின் கொற்றம்

'அந்தணர் ஓதுகின்ற மறைகளின் ஒலியே அல்லாமல், ஆராய்ச்சி மணியின் ஓசையினை என்றும் கேட்டறியாதவர் பாண்டிய மன்னர்கள்' என்று சொல்லுகிறது சிலம்பு. மேலும், கட்டுரைக்காதையுள், மதுராபதித் தெய்வத்தின் வாயிலாக உணர்த்தப்படுகின்ற பாண்டியரின் பெருமைகளை எல்லாம் நாமும் காண்போம்.

## இளமை யானை

மனம் எப்பொழுதும் இச்சைகளின் வயப்பட்டுக் கட்டவிழ்ந்து செல்லும் இயல்பினது. கல்வியறிவாகிய பாகனைக் கொண்டு அதன் போக்கினைக் கட்டுப்படுத்த வேண்டும். கல்விப் பாகனின் கைக்குள் அகப்படாது, அடங்காத வெறியுடன் ஓடுவதே பெரும்பாலும் உள்ளத்தின் தன்மையா யிருக்கும். ஆனால், பாண்டியர் ஒழுக்கத்துடன் பொருந்திய தூய குடியினர். அதனால், இந்தப் பொதுவான மனவியல்பும்கூடப் பாண்டிய மன்னரைச் செப்பத்தினின்றும் அகலச் செய்து விடுவதில்லை. அவருக்குக் குறைகளைக் கொண்டு சேர்த்து விடுவதும் இல்லை.

## பொற்கைப் பாண்டியன்

கீரந்தை என்பவன் ஒருவன் இருந்தான். அவன், தன் மனைவியைப் பிரிந்து வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. தனிமையை நினைந்து அவள் கலங்கினாள். 'அரசவேலி இருக்கும்வரை நீ அஞ்சுதற்குக் காரணமில்லை' என்று அவளைத் தேற்றிவிட்டு, அவனும் வெளியூர் போய்விட்டான். அவளும் ஓரளவு அச்சமின்றி வாழ்ந்து வந்தாள்.

இவர்கள் பேசிய பேச்சை நகர் காவலாகச் சுற்றி வந்த பாண்டிய மன்னன் கேட்டான். கீரந்தையின் நம்பிக்கை அவனுள்ளத்திலே பெருமித உணர்வை எழுப்பிற்று. இரவு

வேளையில், நாள் தவறாமல், அவனே சென்று, அவ்வீட்டை விழிப்பாகக் கண் காணித்து வருவானானான்.

ஒருநாள் இரவு, கீரந்தையின் வீட்டினைக் கவனித்த பாண்டியன் திடுக்கிட்டான். உள்ளேயிருந்து ஓர் ஆண்குரல் கேட்டது. அவன் மனம் ஐயுற்றது. அக் குரலுக்கு உரியவர் யாரென்றறியும் கருத்துடனே கதவைத் தட்டினான். உள்ளேயிருந்த கீரந்தை அதனைக் கேட்டுக் கொதிப்படைந்தான்.

அவன் மனைவியோ, 'அரசனுடைய காவலல்லாது வேறு எத்தகைய காவலும் பழியற்றதாக இராது என்று கூறி, அன்று என்னைத் தனியே இருத்திச் சென்றீர்களே? அந்தக் காவல் என்பதொன்றும் இருந்தால், இன்று அஃது என்னை இவ்விடரினின்றும் காப்பாற்றாதோ?' என்றனள்.

அவளுடைய சொற்கள் பழுக்கக் காய்ச்சிய ஆணியினைச் செவியுள்ளே புகுத்தினாற்போன்ற வேதனையினைத் தரப் பாண்டியன் உள்ளம் நொந்தவனாகி நின்றான். அத்தெருவின் எல்லா வீடுகளின் கதவுகளையும் தட்டியவனாக அரண்மனைக்குத் திரும்பினான்.

மறுநாட் காலை, அத் தெருவினர் வந்து, அரசனின் அவையில் முறையிட்டனர். குற்றவாளியைத் தவறாது ஒறுக்கவேண்டும் என்றனர். அப்போது, அந்தப் பாண்டியன், அவர்கள் முன்னர்த் தன் கையினையே வெட்டினான். அது, அந்த அளவில் பொற்கையாகவும் ஆயிற்று. அவனது அறத்தின் செப்பத்தை ஆன்றோர் போற்றினர். 'பொற்கைப் பாண்டியன்' என்ற புகழ்ப் பெயரும், அன்றிலிருந்து அவனுடைய தாயிற்று.

## வார்த்திகன் கதை

திருத்தங்கால் என்ற ஊரிலே 'வார்த்திகன்' என்ற பெயருடையவன் ஒருவன் இருந்தான். அவனுடைய சிறு மகன் மிகவும் கூர்த்த அறிவுள்ளவன்.

ஒரு சமயம், 'பராசரன்' என்பவன் சேரனது கொடைச் சிறப்பைக் கேள்வியுற்றான். அவனை நாடிச் சென்று ஏராளமான பரிசில்களைப் பெற்றவனாகத் திரும்பிக் கொண்டிருந்தான். வழியிடையில் இருந்த திருத்தங்காலிலே அவன் தங்கினான்.

சிறுவர்களின் அறிவை அறியுமாறு அவன் வினவ, வார்த்திகனின் புதல்வன், அவனோடு ஒத்த முறையிலே சந்தம் பிறழாது வேதத்தை ஓதினான். பராசரன் தன் மகிழ்ச்சிக்கு

அடையாளமாக, அச் சிறுவனுக்குப் பல பரிசில்களை வழங்கிவிட்டுச் சென்றான்.

அரசனின் ஏவலாளர் அந்த அணிகளைக் கண்டு ஐயுற்றனர். 'வார்த்திகன் திருடியிருப்பான்' என்று கருதி அவனைச் சிறையிலிட்டனர். அறம் பிறழ்ந்த அச் செயலினாலே கொற்றவையின் கோயில் கதவம் தானாகவே அடைபட்டது.

பாண்டியன் அதனை அறிந்து பெரிதும் கலங்கினான். வார்த்திகனை விடுதலைசெய்து அவனிடம் மன்னிப்பும் கேட்டான். அவனுக்கு இரண்டு ஊர்களைத் தானமாகத் தந்தும் போகவிட்டான். அப்போது, கலையமர் செல்வியின் கோயிற் கதவமும் தானாகவே திறந்தது.

## கண்ணகியின் கதை

கோவலன், தன் கற்புச்செல்வியான கண்ணகியுடன் ஆய்ச்சியர் சேரியிலே வந்து அடைக்கலமாக இருக்கின்றான். தன் மனைவியான அவள், தனக்கெனச் சமைத்த உணவினை உண்டு, தன் திட்டப்படி அவன் காற்சிலம்புகளுள் ஒன்றனை விற்கக் கருதியவனாக, மதுரை வீதியினுள்ளே காலையிற் சென்று கொண்டிருக்கின்றான்.

அவனைப் பொற்கொல்லன் ஒருவன் எதிர்ப்படுகின்றான். அவனிடம், கோவலன் தன் சிலம்பினை விற்பதுபற்றி வினவ, அவனும், 'யான் களவாடிக் கொண்ட அரசியின் சிலம்புபற்றிய செய்தி இவனுக்கும் வந்து எட்டிவிடாமுன்னம், மன்னனுக்கு இவனைக் கள்வனாகக் காட்டிக் கொல்வித்து, என்னைக் காத்துக் கொள்வேன்' என்று எண்ணினான். 'அரசமாதேவிக்கு அல்லாமல் பிறருக்கு இது பொருத்தமானதன்று. முற்பட யான் சென்று அரசனிடத்தே சொல்லி வருமளவும் இவ்விடத்தே இருப்பாயாக' என்று கோவலனுக்குச் சொல்லிவிட்டு, அப்பொற்கொல்லன், அரண்மனைக்கு விரைந்தான்.

காவலனிடம், கள்வனைக் கண்டதாக உரைத்து நின்றான். காதலனும், 'என் தேவியின் சிலம்பு அந்தக் கள்வனின் கையது ஆயினால், அவனைக் கொன்று விட்டு அதனை இங்குக் கொணர்க' என்ற ஆணையுடன், தன் ஏவலரை அவனோடு அனுப்பினான்.

அவர்கள் கோவலனைக் கண்டதும், 'அவன் கள்வனாயிருக்க வியலாது' என்று ஐயுற்றனர். பொற்கொல்லன், அவனைக் கள்வனென அவர்கள் கருதுமாறு பலவும்

சொல்லிவர, அந்த ஏவலர்களுள் ஒருவன், கோவலனைக் கொன்றான். அரசனிடம் சிலம்பும் சேர்க்கப் பெற்றது. அந்தச் செயலால், வளையாத பாண்டியரின் செங்கோன்மையும் அன்று வளையலாயிற்று.

தன் கணவன் கள்வனெனக் குற்றம் சுமத்தப்பெற்றதும், காவலனாற் கொலைசெய்விக்கப் பெற்றதும் அறிந்த கண்ணகி புலம்பினாள். கொதித்து எழுந்தாள். அவள் கொதிப்பினைக் கண்ட ஊரவர் மயங்கினர். அவளோ, தன் கணவன் வெட்டுண்டு கிடந்த இடத்திலே சென்று அவனைக் கண்டபின்னர், வேந்தனிடம் நீதி கேட்பதாகச் சூளுரைத்து, அவ்வாறே சென்றனள்.

அங்கே பாண்டியன் நெடுஞ்செழியன் கண்ணகியின் தோற்றத்தைக் கண்டதும் மனம் கலங்குகின்றான். 'கள்வனைக் கொல்லுதல் அறநெறியே' என்று கூறி, அவள் கொதிப்பை ஆற்றவும் முயலுகின்றான். அவள், 'தன் சிலம்பின் உள்ளிடுபரல் மாணிக்கக் கற்கள்' என்றதும், பாண்டியன் மிகவும் பதறுகின்றான். கோவலனிடமிருந்து கொண்ட சிலம்பினைக் கொணருமாறு செய்ததுடன், 'தன் தேவியின் காற்சிலம்பு முத்துக்களை உள்ளிடு பரல்களாக உடையது' என்றும் கூறுகின்றான்.

கண்ணகியின் காற்சிலம்பு உடைக்கப்படவும், அதனின்றும் ஒரு மணி தெறித்து மன்னவனின் வாய்முன் வீழவும், அவன் நடுங்கினான். 'யானோ அரசன்? யானே கள்வன்! மன்பதை காக்கும் தென்புலம் காவல் என் முதல் பிழைத்தது. கெடுக என் ஆயுள்' என்று கதறி வீழ்ந்து, அந்நிலையே இறந்தும் போய் விடுகின்றான்.

பாண்டியரிடம் இத்தகைய அறவுணர்வு இருந்தது! அரசியலிற் சிறுகுறையும் நேராதபடியாகச் செங்கோல் செலுத்திய சிறந்த சிறப்பினர் அவர்கள்! கைகுறைத்தும், உயிர்தந்தும் பழிதுடைத்த நீதியாளர்கள் அவர்கள்! அவர்களின் செயற்கரிய செயலால், அவர்கள் வீற்றிருந்த மதுரைப்பேரூரின் புகழும், 'அறம் விளங்கிய பேரூர்' என்ற பெருமையுடன் நிலவுவதாயிற்று!

## 13. பரிபாடலும் பழமதுரையும்

பரிபாடல் கடைச்சங்கத்துத் தமிழ்ச் சான்றோர்கள் அருளிய எட்டுத்தொகை நூல்களுள் இந்நூல் ஐந்தாவது ஆகும்.

மதுரை, வையையாறு, திருமருதந்துறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ் சோலைமலை என்பவற்றின் அக் காலத்திய நிலையை அறிந்துகொள்வதற்கு மிகவும் உதவியாகவுள்ளது இந்நூல்.

இந்நூல், பரிபாடல் என்னும் பாவகை கொண்டது. பரிபாட்டு எனவும் இதனைக் கூறுவர். முதற்கண் எழுபது பாடல்களாக இருந்த இந்நூலிற், காலத்தால் மறைந்தனபோக எஞ்சியவற்றை, டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் நன்கு ஆராய்ந்து அச்சிற் பதிப்பித்துள்ளனர்.

## 1. வையைப் பேராறு

மதுரையின் சிறப்பிற்கு வையைப் பேராறு ஒரு முதன்மையான காரணம் ஆகும். அதுபற்றிய பரிபாடற் பகுதிகளுள் காணப்படும் சில செய்திகளை இப்பகுதியிற் காண்போம்.

மேகங்கள் கடல்நீரை முகந்து நிறைவுற்றுத் தம்முடைய சுமை சுழியும்படியாக மழையைப் பொழிந்தன. அதனால், நிலமெல்லாம் மறைந்து போவதுபோல எங்கும் நீர் நிறைந்தது. மலையிலுள்ள மானினங்கள் பெரிதும் கலங்கின. மயிலினங்கள் களிப்புடன் அகவின. மலையின் மாசனைத்தும் கழிந்துபோக, அருவியும்விரைந்து இழிந்தது. அவ்வருவிநீர் வருகின்றவழிகள் பலவாயிருந்த மலைச்சாரலிலே, புலவர் போற்றிய செய்யுள் பொய்யாகாத படி நிலைநாட்டி, எங்கும் பரந்தது. உழவு முதலிய தொழில்கள் பெருகும்படியாகச் சமநிலத்தும் வெள்ளம் தாவி ஓடியது.

### கரை உடைக்கும் பெருவெள்ளம்

வையையின் இருபாலும் மலைபோன்று உயரிய கரைகள் அக்காலத்தே விளங்கின. புது வெள்ளம் கரையை உடைத்தது. அதனை அடைக்கும் பொருட்டாகக் கரைகாவலர்கள் பறையொலி எழுப்பினர். பறையொலியினைக் கேட்ட ஊரிலுள்ளார் கிளர்ந்து எழுந்தனர். அவர்கள் வந்து கரையைப் பேணிக் காத்தனர்.

### வெள்ளத்தின் வரவு

நரந்தம் புல்லிற் பரந்தும், வேங்கையினின்று உதிர்ந்த பூக்களைச் சுமந்தும், மலையின் பெரிய மரங்களை அகழ்ந்தும், மேட்டிலுள்ளவற்றைப் பள்ளத்திற் பரப்பியும், புது வெள்ளம் சென்றது. முழவுகளும் பெரும்பறைகளும் முழக்கமிட, ஆடலின்

இயல்பினை அறியாத ஒரு பெண் கண்டவாறெல்லாம் சுற்றிச் சுழல்வதுபோல, வேண்டிய இடங்களிலெல்லாம் தானும் பரவிப் படர்ந்தது புதுவெள்ளம்.

ஓடையிலுள்ள நீரானது மலர்களுக்கு மேலேயும் பெருகியது. இளம் பெண்களின் மணற்பாவைகளை வெள்ளம் சிதைக்க, அவர்கள் அதனால் அழலாயினர். வயல்களுள் வெள்ளம் பாய்ந்து அரிந்த கதிர்களை எல்லாம் சிதைக்க, அங்கே துடிப்பறையின் முழக்கம் எழுந்தது. 'பாடுபவர் இருந்த பாக்கத்தைக் கொண்டது; கூத்தரிருந்த சேரியை அடைந்தது; கழனியில் வெள்ளம் வந்தது; நாற்றங்கால் வண்டலிட்டு மேடாயிற்று' என்றெல்லாம். வெள்ளத்தைப் பற்றிய பேச்சுக்களே எங்கும் எழுந்தன.

மலர்களாகிய போர்வையையும், பருமணலையும் மேலே மூடிக்கொண்டு, உலகிற் பசி முதலிய துயரங்கள் நீங்கவும், வண்டினம் ஒலிக்கவும், கரை காவலரை அழைக்கும் பறைகளின் ஒலி முழங்கவுமாக, வையையாறு பெருகி வந்தது.

### நீராடச் செல்வோர்

மகளிர், தம் மேகலையை இறுக அணிந்து கொண்டு புறப்பட்டனர். வண்ணநீரை வீசும் கருவிகளையும், பனிநீர் கலந்த சந்தனத்தையும் எடுத்துக்கொண்டு அவர்கள் எழுந்தனர். குதிரைமீதும், பிடியானைமீதும், எருது பூட்டிய வண்டியினும், கோவேறு கழுதைமீதும், குதிரை பூட்டிய வண்டியினும், சிவிகையினும் ஏறியவர்களாக அவர்கள் ஆற்றைநோக்கிப் புறப்பட்டனர்.

மலராத முகைபோன்ற சிறு பருவத்து நங்கையரும், மலர்ந்த மலர்போன்ற இளைய மாதரும், கருமயிரிடையே நரைமயிர் தோன்றியவரும், முழு நரை பெற்ற கூந்தலுடையவருமாக, எல்லாப் பெண்களுமே நீராடற்கு எழுந்து, ஆற்றின் கரையைச் சென்று சேர்ந்தனர்.

அங்கே, நீரின் அழகை வியப்புடன் கண்டு நின்றனர் சிலர். நீரணி மாடத்திலே ஏறிச் சென்றனர் சிலர். மலர் நிறைந்த ஆற்றிடைக் குறையிற் சென்றனர் சிலர்.

தாம் நினைத்த பட்டினத்தைச் சார்ந்து, ஏற்றிவிட்ட பண்டங்களைக் கொடுத்து, ஆண்டுள்ளன கொண்டு, இடையூறு ஏதுவுமின்றி வந்து கரையைச் சேரும் நாவாயை எதிர்கொள்பவரைப் போல விருப்பமுற்றவராக, வையைப் புனலை மக்கள் திரண்டு சென்று எதிர்கொண்டனர்.

அவ்விடத்தே, ஒரு களிறு மதங்கொண்டு அலையக் கட்டுக்கடங்காத அதனை அடக்கிச் செலுத்தினர் சிலர். அவர்கள் செயல், பாயும் கயிறும் பாய்மரமும் நீங்கச் சிதையும் நிலையிலே உள்ள மரக்கலத்தைத் திருத்தி, அதனுள்ளே இருந்தோரது நடுக்கத்தைப் போக்கும் ஒரு மீகாமனின் செயலைப் போன்றிருந்தது!

## நீராடலின் பின்னர்

நீராடலினாலே களைப்புற்ற மகளிர்கள் கரையில் ஏறினார்கள். அகிற் புகையினால் உடலின் ஈரத்தைப் புலர்த்தினார்கள். மார்பிலே கலவை குழம்பைப் பூசினார்கள். அதன் மணம் எங்கும் கமழ்ந்தது. சிலர் மதுவினை உண்டனர். சிலர், தம்மேலே வெண்துகிலைப் போர்த்தனர். சிலர், தம் கூந்தலிலே வெண்துகிலைச்சுற்றி ஈரம் புலர முறுக்கினர். சிலர், பொன்னாற்செய்த சங்கு, நண்டு, இறவு, வாளை என்பவற்றை நீரிலே இட்டு, 'விளைக! பொலிக' என்று வாழ்த்தினார்கள்.

சிலர், நீலமணிபோன்ற தம் கூந்தலிலே பத்துவகைத் துவர்களையும் தேய்த்து நீராடினர். சிலர், எண்ணெய் நீங்குமாறு அரைப்பினைத் தேய்த்தனர். சிலர் மாலையினையும் சந்தனத்தையும், கத்தூரியையும், மதுவையும் நீரிலே இட்டுப் போற்றினர்.

## மைந்தர்கள் ஆடல்

பெண்களின் நிலை இவ்வாறாக இருந்தது. ஆண்களின் நிலையும் இவர்கட்குச் சற்றும் குறைந்ததாயில்லை. அவர்களும் புனலிற் பாய்ந்து நீராடினார்கள். பெண்களைப்போலப் பூச்சுப் புனைவுகளிலே இவர்கள் மனஞ் செலுத்தவில்லை. மாறாக, இவர்களின் மனம் வீரவிளையாட்டுக்களிலே சென்றது.

வாழைத்தண்டைக் கையால் தழுவிக் கொண்டு நீரின் மேல் தாவித்தாவிச் சிலர் நீந்திச் சென்றனர். தாழம் பூவின் தாதை அலையிலும் நுரைமேலும் தூவித்தூவி விளையாடினர் சிலர். ஓடத்தில் ஏறி, நீரோட்டத்தோடு சென்றவராகச் சிலர் களித்தனர். புனலுக்கு எதிராக நீந்திச்சென்று சிலர் விளையாடினர்.

## பேச்சின் ஆரவாரம்

நீர்த்துறையில் பலரும் பலவாறு பேசி நின்றனர். மொழிகள் ஒன்றையொன்று ஒவ்வாமற் பற்பலவாக ஒரே காலத்தில்

எழுந்தன. அவற்றைத் தெளிவாக எவராலும் கேட்க முடியவில்லை. புல்லாங் குழலின் இசை ஒருபுறமிருந்து எழும். முழவின் ஒலி ஒருபுறமிருந்து எழும். மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுடி ஆகியவற்றின் ஓசைகளும் எழும். இவற்றின் பேரொலியினால், மக்களின் பேச்சொலிகள் எவர்க்கும் கேளாவாயின.

## புகழாற் சிறந்தது

வையை, பழையதான மதுரை நகரிலே வாழ்பவர்க்கு இன்பமும் அழகும் மிகப்பலவாக அளித்தது. அதனால், உலகம் அகற்சியை உடையதாயினும், வையையின் புகழை அடக்கிக்கொள்ள மாட்டாதபடியாகவே இருப்பதாகும்.

## ஆர்வ மயக்கம்

வையையிலே புதுவெள்ளம் வருகிறது என்றவுடன், மதுரை நகரத்தார்க்குக் களிப்பும் கரைகடந்து விளங்கலாயிற்று. தேரிலேற எண்ணிய சிலர், தேர்க்குதிரைகளைப் பள்ளியோடம் என்னும் வண்டியிற்பூட்டி அதனிடத்தே ஏறிச் சென்றனர். வங்கத்தில் ஏற எண்ணிய சிலர், அதற்குரிய எருதுகளைத் தேரிற்பூட்டி அதிலேறிச் சென்றனர். குதிரைகளுக்கு இடுகின்ற சேணம் முதலியவற்றினை யானைக்கு இட்டனர் சிலர். யானைகளுக்கு எதுவும் அணிய மறந்து ஏறி நடத்தினர் சிலர். மகளிரின் கோதைகளை மைந்தர்கள் அணிந்தவராகிச் சென்றனர். மைந்தரின் தாரினை மகளிர் புனைந்தவராகி வெளியே நடந்தனர். இவ்வாறெல்லாம், தாந்தாம் முந்திச்சென்று நீராட விரும்பியதனால் மயங்கிச், செய்வது என்னவென அறியாமலேயே செய்தவராக, வையையை நோக்கிப் பலரும் திரண்டு செல்வாராயினர்.

## பாண்டியனும் புதுவெள்ளமும்

'போர்க்களத்திலே பாண்டியன் தன் யானைப் படையினை வரிசையாக நிறுத்தி இருக்குமாறுபோல, மேகங்கள் வானத்தே அணியணியாக எழுந்தன. அவனுடைய போர்முரசு ஆரவாரிப்பதுபோல, அம்மேகங்கள் இடித்து முழக்கின. அவன் படையினர் பகைவர்மீது சொரிகின்ற அம்புக் கூட்டங்களைப் போல, மழைத்துளிகளை அம் மேகங்கள் சொரிந்தன. பாண்டியனின் வேலைப்போல, மின்னலும் ஒளிவிட்டது. அவனுடைய வள்ளன்மையைப் போல, மேகங்கள் மழையினைப்

பொழிந்தன. பாண்டியனின் படை வெள்ளத்தைப் போல, வையையின் வெள்ளமும் எங்கும் பரந்து விளங்கிற்று. இவ்வாறு, மழையின் சிறப்பினைக் கூறுகிறது ஒரு பரிபாடல்.

## திருமருத முன்துறை

வையைத் துறைகளுள், அழகாலும் சிறப்பாலும் மிக்கது இதுவே. நீராட வந்து இதன்கண் திரண்டோர் ஆடவரும் மகளிருமாகப் பலராயினர். அவர்கள் வருகின்ற களிப்பின் பேரளவினைக் கண்டலர்கள், 'இவர் செய்த தவப்பயன் பெரிது' என்றனர். 'மகளிர் வையையினால் அழகு பெற்றனரோ? வையைதான் அவர் வரவினால் அழகு பெற்றதோ?' இதனை எவராலுமே சொல்லவியலாது என்றனர்.

முழவின் ஒலிக்கு எதிராக இடிமுழக்கம் எழுந்தது. வீணை ஒலிக்க, அதற்கு எதிராக வண்டினங்களின் ஆர்ப்பொலி எழுந்தது. குழலோசைக்கு மாறாகத் தும்பிகள் மலர்த்தாதினை ஊதுகின்ற ஒலி எழுந்தது. காற்றாகிய நட்டுவன், பூங்கொடியாகிய நடனமாதை நடனமாடச் செய்து கொண்டிருந்தான். இவ்வாறாக எழிலுடன் விளங்கிற்று அந்நாளில் திருமருத முன்துறை.

மதுரைக்கு அழகுதருகின்ற வையையின் புதுப்புனல் வருகையோடு, அங்கு வருகின்ற மக்களின் களிப்பு முதலிய வற்றையும், மேற்கண்டவாறு உரைக்கிறது பரிபாடல். இஃது அக்கால மதுரையின் செழுமையான மக்கள் வாழ்வியலை நன்கு விளக்குவதாகும்.

மக்களைப்போலவே, பாண்டியனும் மனக்களிப்புடன் கூடியவனாக, வையைப் புதுப்புனலிலே ஆடி மகிழ்கின்ற வழக்கத்தை உடைவனாக இருந்தான். அவன் வந்து நீராடிய அந்தக் காணற்கு அரிய காட்சி, ஆகாய கங்கையிலே இந்திரன் சென்று நீராடியதுபோன்று இருந்ததாம்.

'இசைக்கு உரிமையுடைய பாணரும் கூத்தரும் ஒருங்கே புகழ்ந்து தொழ, வறுமையுடைய புலவர்களின் கைந்நிறையப் பொன்னைச் சொரிந்து மகிழும் பாண்டியனைப்போல, வையையும் வயலினிடத்தே பொன்மணிகளைப் பரப்பும் தன் செயலினின்று என்றும் நீங்காது இருப்பதாக!' என வாழ்த்துகிறது ஒரு பரிபாடல். அந்த வாழ்த்து, அன்று மட்டுமன்று என்றென்றைக்குமே உரியதாகும்.

### வையைக் கரை

புதுப்புனல் மிளகையும், சந்தன மரங்களையும், அகில், தந்தம் முதலியவற்றையும் அடித்துக்கொண்டு வந்து கரையிலே வீசுவது, கைவண்மையுடைய பாண்டியனின் வற்றாத ஈகைச்செயலைப் போன்றதாகத் தோன்றுமாம்.

### வையைத் துறை

நீராடுவோரின் முத்து மாலைகள், தலைக்கோலம் என்னும் அணிகள், மணி மாலைகள், குஞ்சங்கள் ஆகியவற்றை அடித்துக்கொண்டு வருகின்ற புதுப்புனல், துறையிடத்தே நீராடுவோருக்கு அவற்றை அணிவிப்பதுபோல வருமாம்.

### வையைக்கரை வயல்கள்

நீர் பாய்ந்து நிறைந்தவான வயல்கள், வெள்ளத்தோடு வந்த விடுபூக்கள் பலவற்றையும் பெற்றுவிளங்கின. அந்தக் காட்சி, நடன அரங்கத்தை நீரும் பூவும் சிதறிப் புனைந்து அமைத்து வைத்திருப்பது போன்றிருந்ததாம்.

### வையைக்கரைச் சோலை

வையைக் கரைச் சோலைகள் புதுப்புனலுக்கு விருந்தளித்து உபசரிப்பவைபோல, மலர்களையும் பூந்தாதுகளையும் உதிர்த்து விளங்கினவாம்.

இப்படியாக விளங்கிய, பழம்துரைப் பேரூரின் வையைப் புதுப்புனல் வருகையின் காட்சியினை எண்ணினால், நம் உள்ளம் அதன் சிறப்பினை ஒருபோதும் மறவாது எனலாம்.

## 2. திருப்பரங்குன்றம்

### இடை வழி

பரங்குன்றத்திற்கும் மதுரைக்கும் இடையிலுள்ள வழியின் சிறப்பும் பரிபாடலில் கூறப்படுகிறது. ஏழும் ஐந்துமான துளைகளையுடைய புல்லாங் குழலினும் யாழினும் பிறந்த இசையொலியைப் போல, வண்டும் ஞிமிறும் இன்னொலி செய்து கொண்டிருக்கும். சுனைகளிற் பூக்கள் மலர்ந்திருக்கும், கொன்றையிற் பூக்கள் மாலைமாலையாகத் தொங்கும். கொடிப்பூக்கள் நறுமணத்தோடு மலர்ந்திருக்கும். மலர்ந்த காந்தளின் மணம் எங்கும் நிறைந்திருக்கும். இத்தகைய

மணங்களுடன், தென்றலும் மெல்ல மெல்ல உலவுகின்ற சிறப்பினை யுடையதாம் அவ்வழி.

புகழ்பெற்ற மதுரைக்கும் பரங்குன்றிற்கும் இடையே உள்ள இடம் மிக்க தொலைவானதன்று. எனினும், மகளிரும் மைந்தரும் நெருங்கி விளையாடி வருதலால், கடத்தற்கு மிகவும் தொலைவானதுபோலவே தோன்றுமாம்.

தம் அறிவாலும் வீரத்தாலும் பிறரை வெற்றி கொள்ளும் சிறப்புடையவர் மதுரைப் பேரூரின் மக்கள். அவர்கள், தாம் செய்த அறச்செயல்களின் பயனை நுகர்வதற்குத் தேவலோகம் செல்லுபவரைப் போல, விடியற் காலையிலே பரங்குன்றத்தை நோக்கிச் செல்வார்களாம்.

அணிபல புனைந்தவராயும், நல்லாடை அணிந்தவராயும், நறுமணமாலை சூடியவராயும், தேரும் குதிரையும் ஊர்ந்தும், நடந்தும் அவர்கள் செல்வார்கள். அவர்களுடைய மாலை யணிந்த தலைகள் நெருக்கமுற்று விளங்கும் அவ்வழியானது, ஒத்த பூக்களை நிறைய வைத்துக் கட்டி நிலமகட்கிட்ட மாலையினைப் போலத் தோன்றுமாம்.

## பாண்டியன் வருதல்

நட்சத்திரங்கள் பலவுஞ் சூழச் சந்திரனனானவன் மேருமலையினை வலம் வருவதுபோலப் பாண்டியன் தன் மனைவியும் சுற்றமும் சூழ வந்து பரங்குன்றினை வலம் வருவான். அவர்களுடைய ஊர்திகள் வழியை அடைத்துவிடும். அதனால், யானைகளை வழியினின்றும் அகற்றிக் கட்டுவார் சிலர்; குதிரைகளை வழியினின்றும் நீக்கி ஒதுக்கி நிறுத்துவார் சிலர்; தேர்களை வழியைவிட்டு ஒதுக்கி நிறுத்துவார் சிலர்; இவ்வாறு எங்கும் நிறுத்தப்பெற்ற இவைகளால், அந்த இடமும் பாண்டியனின் போர்க்களப் பாசறையினைப் போலவே தோற்றுமாம்.

## பரங்குன்றின் சிறப்பு

திருப்பரங்குன்றத்தே மழையும் மிகுதியாகப் பெய்யும். அதனாற் சுனைகள் எல்லாம் மலர்ந்த நீர்ப் பூக்களை உடையனவாய் விளங்கும், கடம்புகள் பூத்துக் குலுங்கும். அந்தப் பூக்களை ஊதித் தேனுண்ணும் வண்டினங்களின் செவ்வழிப்பண் எங்கும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

மலைச் சாரல்களிலே மூங்கில்கள் மிகுதியாக வளர்ந்திருக்கும். அவை, மகளிருடைய தோள்களின் அழகினை

உடைத்தாயிருக்கும். வாகைப்பூவைப் போன்ற கொண்டை களுடனே விளங்கும் மயில்கள் அகவிக் கொண்டிருக்கும். கொன்றைப் பூக்கள் சரஞ்சரமாகத் தொங்கிக்கொண்டிருக்கும். 'புலி புலி' என்று கண்டோர் அஞ்சும்படியாக, வேங்கை மரங்களிலே பூக்கள் மலிந்திருக்கும். காந்தள் மலர்கள் எங்கணும் பூத்துக் கவினுற நிறைந்திருக்கும்.

மேகங்கள் பரங்குன்றிற் கவிவது, முருகப் பெருமான் ஊர்ந்துவரும், பிணிமுகம் என்னும் களிற்றைப்போலத் தோன்றும். வானத்தே எழுகின்ற மின்னல், யானையின் நெற்றிப்பட்டத்தைப் போன்று ஒளியுடன் திகழும்.

பெருமானின் கோயிலிலேயுள்ள சித்திரசாலையானது, காமவேளின் படைக்கலக் கொட்டிலைப் போன்றிருக்கும். சோலைகளும் சுனைகளும், மலர்கள் செறிந்திருக்கக் காமவேளின் அம்புப் புட்டிலைப்போல விளங்கும். காந்தட் பூவின் குலைகள், போரிலே தோற்றுக் கட்டுண்டவரின் கைகளைப்போன்று காணப்படும். வானவில், அந்தக் காமன் ஏந்தியுள்ள வில்லைப் போன்றிருக்கும். மரங்களிலே விளங்கும் மலர்கள், அவன் எய்த கணையைப்போலக் காணப்படும். அருவிகள் ஒலியுடன் வீழ்வது, சிகரங்கள் முத்தாரங்களை அணிந்தாற்போன்று தோன்றும்.

### மலர் செறிந்தன

பச்சிலையின் இளங்கொழுந்தும், ஆம்பற்பூவும், காந்தட்பூவும், பஞ்சாய்க்கோரையின் பூவும், நறவம் பூவும், கோங்க மலரும், இலவம் பூவும் ஆகிய இவையெல்லாம் ஒன்றுடன் ஒன்று கலந்தனவாகத் தோன்றும் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகும். தெற்றின மாலைகளைப்போல மலர் நிறைந்தும், கோத்த மாலைகளைப்போல இடையிட்டும், தூக்கிக் கட்டின மாலைகளைப்போல நெருங்கியும், இவை எல்லாம் எம்மருங்கும் பூத்துக் கிடந்தன.

மேகம் முழக்கமிட, மயில்கள் தோகைகளை விரித்து ஆடின. தும்பிகள் குழலிசைப்பனபோல மலர்களில் வாய் வைத்து ஊதின. வண்டினங்கள் யாழிசைப்பன போல ஒலித்தன. அருவிநீர் தாளத்தோடுகூடிய முழவொலியினைப்போல முழக்கமிட்டது. இப்படியாக, நடன அரங்கம் ஒன்றும் அங்கே நலமுடன் விளங்கிற்று.

## 3. திருமாலின் குற்றம்

### திருமால்

"நின் வெம்மையும் ஒளியும் கதிரவனிடத்திற் காணப்படுகின்றன. நின் சுரத்தலும் வண்மையும் மாரியிடத்து அமைந்துள்ளன. நின் தாங்கும் திறனும் பொறுமையும் பூமியினிடத்தே பொருந்தியுள்ளன. நின் மணமும் ஒட்பமும் காயாம்பூவிடத்துத்தோன்றுகின்றன. நின் தோற்றமும் பெருமையும் நீரினிடத்தே நிலவுகின்றன. நின் உருவமும் ஒலியும் ஆகாயத்திடத்தே அமைந்திருக்கின்றன. நின் வருகையும் ஒடுக்கமும் வாயுவினிடத்தே வாய்த்துள்ளன. ஆதலின், இவையும் உவையும் அவையும் பிறவும் ஆகியோய்! நின்னிடத்திலிருந்து தோன்றி நின்னாற்காக்கப்பெற்றனவாகிய இவையெல்லாம், பின்னரும், நின்னுடன் பொருந்துவனவே!

"ஆலமரமும், கடப்பமரமும், யாற்றிடைக் குறையும், குன்றும், பிறவுமாகிய இடங்களிற் பொருந்திய பல தெய்வங்களாக வகுத்துச் சொல்லப்படும் பல்வேறு திருநாமங் களையும் உடையவன் நீயே! எங்கும் நிறைந்திருக்கின்றவனே! நின் அன்பர்கள் மனத்திற் கொண்டனவன்றி நினக்கென வேறு திருவுருவம் உடைய அல்லை! நின் அன்பர்கள் தொழுத கைகளின் தாழ்ச்சியிடத்தே அகப்பட்டவனும் நீயே! அவ்வன்பரின் ஏவலாளனும் நீயே! அவரவர் செய்வனவற்றிற்குப் பாதுகாவலனும் நீயே!

"பகைவருயிரை நீக்குதலும், நட்டோரின் உயிரைப் பாதுகாத்தலுமாகிய தொழிலை உடையை நீ அல்லை! ஏனெனில், நினக்குப் பகைவரும் இல்லை. நட்டோரும் இல்லை! உயிர்களது இயல்பால், நினக்குப்பகையும் நட்பும் உளபோலத் தோன்றுதலும் உள; எனினும், நின் இயல்பினால் அவை இருப்பனவல்ல."

இவ்வாறு, அருமையாகத் திருமாலை வாழ்த்தி வழிபடுகிற மரபினைப் பரிபாடலுள் காணலாம்.

"சுனைகளிலெல்லாம் நீலமலர் மலர்ந்திருக்கும். அச் சுனையைச் சூழவும் அசோக மரங்கள் பூத்திருக்கும். வேங்கை மரங்களும் அங்கே பூத்துக் குலுங்கும். இதனால், இருங்குன்றென்னும் பெயர் எங்கணும் பரவிப் புகழுடையதாகத் திகழ்வது நின் மலை!

"குட்டியால் தழுவப்பட்ட மந்தி பாயவும், முல்லை மலர் கற்பு நிகழ்ச்சியைக் காட்டவும், மயில்கள் அகவவும்,

குருக்கத்தியின் இலை உதிரவும், குயிலினம் கூவவுமாக ஒரே ஆரவாரத்துடன் நின் மலை விளங்கும்.

"திருமாலே! நின் கோயிலிருக்கும் இடத்தில் ஒருசார் மணியின் நிறங்கொண்ட மலை உள்ளது. அம் மலையிலே வேங்கை, மரா, மகிழ், அசோகம் முதலியன ஓங்கி வளர்ந்துள்ளன.

"ஒரு பக்கம் பல மீன்கள் பரந்துள்ள கயம் இருக்கிறது. அது, நட்சத்திரங்களைக் கொண்ட நீலவானம் போல விளங்குகிறது.

"திருமகளும் விரும்பும் வயல்கள் ஒருசார் உள்ளன; அங்கே உழுபவர்களும் நடுபவர்களும் ஆரவாரத்துடன் கூடியிருக்கின்றனர்.

"ஒருசார் நகரம் உள்ளது. அங்கே அந்தணர்கள் உள்ளனர். உண்ணும் பொருள்கள், பூசும் பொருள்கள், பூண்பன, உடுப்பன, மண்ணுவன, மணி, பொன் மலைப் பண்டங்கள், கடற்பண்டங்கள் முதலியவற்றை விற்றற்கு உரிய வணிகரின் வீதியும் அங்கே உள்ளது. மென் புலத்திலும் வண்புலத்திலும் வேளாண்மை செய்யும் களமரும் உழவரும் உள்ள வீதியும் ஒரு பக்கத்தே விளங்கும்.

இவ்வாறாக, மதுரையின் அருகே பாய்ந்தோடும் வையைப் பேரியாற்றின் புதுப்புனல் வரவையும், மதுரையின் அருகே இருந்த திருப்பரங்குன்றின் சிறப்பையும், திருமாலிருஞ் சோலைமலையின் செழுமையினையும், பரிபாடல் விரிவாகக் கூறுகின்றது.

இதனால், அன்றைய மதுரையின் செழுமையும் தெய்வ பக்தியும், பிறவும் நன்கு புலனாகும். பரிபாடல் பழந்தமிழ் மதுரைப் பேரூரினைப் படம் பிடித்துக் காட்டும் சிறந்த ஒரு பெருநூல் ஆகும். அதனை முற்றவும் கற்றுஅறிந்து இன்புறுதல் வேண்டும்.

## 14. மதுரைக்காஞ்சியும் மதுரையும்

பழந்தமிழ் இலக்கியச் செல்வமான பத்துப்பாட்டினுள், ஆறாவது பாட்டாக விளங்குவது மதுரைக் காஞ்சியாகும். 'மாங்குடி மருதனார்' என்னும் புலவர் பெருமானால் மதுரைப் பெருவேந்தனான பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் காஞ்சித் திணையைக் கூறுமுகத்தான் செய்யப்பட்டது இந்நூல் ஆகும்.

'உலகமும், உலகத்து வாழ்வும், அவ்வாழ்விலே அடையும் இன்பநலங்களுமாகிய எல்லாமே அழியக் கூடியவை; அதனால், உயிருடனுள்ளபோது நல்ல அறநெறிகளிலே உள்ளத்தைச் செலுத்தவேண்டும்; அதுவே வாழ்வினைச் சிப்புடையதாக ஆக்குவதாகும்' என்ற உரைப்பது காஞ்சித் திணையாகும்.

இந் நூலாசிரியரான மாங்குடி மருதனார் ஒப்பற்ற தமிழ்ச் சான்றோருள் ஒருவராக அந்நாளிலே விளங்கியவர். மதுரைப் பாண்டியனான நெடுஞ்செழியன் என்னும் பேரரசனால், 'மாங்குடி மருதன் தலைவனாக உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின் புலவர்' என்று, மனமுவந்து போற்றப்பெற்ற தனிச்சிறப்பினை உடையவரும் இவராவர்.

இப்பாட்டுடைத் தலைவனான நெடுஞ்செழியன் என்பவன், அக்காலத்தே வல்லமை உடையவனாகவும், புலவர் போற்றும் புகழினாலே சிறந்தவனாகவும், தானே தண்டமிழ்ப் புலவனாகவும் விளங்கியவன் ஆவான். சேர மன்னனுடன் தலையாலங்கானம் என்னும் இடத்திலே பெரும்போர் இயற்றி, அதன்கண் அடைந்த வெற்றியினாலே, "தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்" என்ற அடைமொழியினைப் பெற்று விளங்கியவன் இவன்.

இவன் காலத்திய மதுரைப்பேரூரின் செழுமையினையும், சிறப்பினையும், மாங்குடி மருதனார் இந்தப் பாட்டிலே அருமையான முறையிலே எடுத்துக் கூறியிருக்கின்றனர். அவற்றுள் சிலவற்றை மட்டும் நாம் இந்தப் பகுதியிலே காண்போம்.

## நாட்டின் செழுமை

பாண்டியநாட்டில் அக்காலத்தில் மழை தவறாமற் பெய்தது. மக்களின் தொழில் முயற்சிகள் எல்லாம் குறைவின்றி நிகழ்ந்துவந்தன. அதனால், எத்திசையிலும் விளைபொருள்கள் பெருகின. ஒவ்வொரு வித்தும் ஒன்றுக்கு ஆயிரமாக விளைவு தந்தது. விளைநிலங்கள் எப்புறத்தும் வளமுடன் விளங்கின. மரங்கள் ஏராளமான பயனைத் தந்து கொண்டிருந்தன. மக்கள் நோயற்றவர்களாக இருந்தனர். அவர்களுடைய தோற்றத்தின் பொலிவினாலேயே, அந்நாட்டின் வளமையினை உணர்ந்து கொள்ளலாம்.

## வாணிகச் சிறப்பு

பாண்டிய நாட்டு மக்கள் வளமுடன் வாழ்ந்தனர் என்பதுடன், அவர்கள் வாணிகத்துறையிலும் சிறப்புடன்

திகழ்ந்தனர். 'கடலினின்றும் கிடைத்த ஒளியுடைய முத்துக்கள்; அரத்தினாலே பிளந்து அறுக்கப்பெற்ற கவர்ச்சியான வளையல்கள்; பரதவர்கள் கடலிற் சென்று கொணர்ந்து தருகின்ற பலவகையான கடல்படு பொருள்கள்; வெண்மையான உப்பு; இனிய புளி; மீன் வற்றல் ஆகிய பலபொருள்கள் பாண்டி நாட்டினின்றும் வெளிநாடுகட்குப் போயின. வெளி நாடுகளிலிருந்து கப்பல்களில் குதிரைகள் வந்து இறங்கின. இவ்வாறு, வெளிநாட்டவரோடு கடல் வாணிகம் செய்தும் அந் நாளைய மக்கள் சிறப்புற வாழ்ந்தனர்.

## மதுரைமா நகரம்

மதுரைமா நகரத்தைச் சுற்றிலும் ஆழமாக அகழப் பெற்ற அகழியொன்றும் விளங்கியது. நீர் அதன்கண் நிரம்பியிருந்தது. அகழியின் உட்புறமாக, வானளாவ உயர்ந்த பலவடுக்குகளான கோட்டைச் சுவர்கள் விளங்கின. கோட்டை வாயில்கள் நாற்றிசையினும் அமைந்திருந்தன. எவராலும் எளிதில் வெற்றிகொண்டு உட்புகவியலாத வலிமையுடையவை அவை. பகைவர்க்குக் காணுதற்கும் அச்சத்தை விளைவிக்கும் அத்துணைப் புகழுடையவும் அவையாகும். திண்மையாக விளங்கிய கோட்டைவாயிற் கதவுகள், நெய் பூசப்பெற்றதனால் கருநிறம் பெற்றுப் பளபளவென ஒளிவீசிக் கொண்டிருக்கும் தன்மையவா யிருந்தன. கோட்டை வாயிலின் மேற்புறத்தே, மலைபோன்று விளங்கிய உயர்ந்த மாடங்களிலே மேகங்கள் தவழ்ந்து கொண்டிருந்தன. வெள்ளம் வற்றாது சென்று கொண்டிருக்கின்ற வையைப் பேரியாற்றினைப் போல, அவ் வாயில்களினும், மக்கள் வெள்ளம்போலத் திரள்திரளாக எப்போதும் சென்று கொண்டிருப்பார்கள்.

நகரினுள்ளே ஏராளமான பெரிய பெரிய வீடுகள் இருந்தன. அகற்சி உடையனவாயும், ஆகாயத்தை அளாவும் உயரமுடையவாயும் அவை விளங்கின. நல்ல காற்றோட்டம் வீட்டினுள்ளே எப்போதும் இருப்பதற்கு வசதியான வகையிலே சாளரங்கள் பலவற்றைக் கொண்டனவாகவும் அவை இருந்தன. இருபுற வீடுகட்கும் இடையே விளங்கிய தெருக்கள், கரைகளை இருபாலும் கொண்ட பேராறுகள் போலக் காணப்பட்டன.

## கொடிகள்

இந்நாளிலே, ஒவ்வொரு நாட்டினும் அவ்வந் நாட்டின் தேசியக் கொடிக்கு இருக்கின்ற சிறப்பினைப் பற்றி நாம் நன்கு

அறிவோம். இவ்வாறே, அந்நாளில் பாண்டியனின் வெற்றிக் கொடியாக விளங்கியது கயல் பொறித்த நெடுங் கொடியாகும்.

அரசனுக்கு உரியதான கயற்கொடி அவனுக்குரிய அரண்மனையிலும், கோட்டை வாயில்களிலும் வானளாவப் பறந்துகொண்டிருந்தது. அஃதன்றியும், வேறு சிலவகையாக கொடிகள் பறந்திருந்த காட்சியினையும் மதுரைக் காஞ்சி கூறுகிறது.

விழாக்களைத் தொடங்கி நிகழ்த்தும்போது, அவ்வக் கடவுளர்க்கு உரிய கொடிகளை மக்கள் பறக்கவிட்டனர். பகைவர்மேல் படைகொண்டு சென்று வெற்றி பெறுகின்ற தானைத்தலைவர்கள் தங்கள் வெற்றிக் கொடிகளைப் பறக்க விட்டனர். மதுக்கடைகளை அறிவிக்கவும் ஒருபுறத்தே கொடி பறந்து கொண்டிருந்தது. மற்றும் பல்வேறு கொடிகளும் மதுரை நகரிலே அந்நாளிற் பறந்து கொண்டிருந்தன.

### வழிபாட்டு இடங்கள்

சிவபெருமானுக்கும், மற்றும் பல கடவுளர்களுக்கும் தனித்தனிக் கோயில்கள் அந்நாளைய மதுரையிலே இருந்தன. மக்கள் அவ்விடங்களிலெல்லாம் சென்று, தத்தம் விருப்பம்போன்று வழிபாட்டினை நிகழ்த்தி வந்தனர். சில தெய்வங்கட்கு உயிர்ப்பலியினைத் தருகின்ற ஒரு வழக்கமும் அந்நாளிலே இருந்தது.

### சான்றோர் பள்ளிகள்

அந்நாளைய மதுரைப் பேரூரிலே சமணர்கள் வாழ்ந்திருந்த செய்தியினை முன்னரே அறிந்தோம். அவர்கட்கு உரியதான பள்ளிகளும் மதுரையில் இருந்தன. அங்கே சமணச்சான்றோர்கள் வீற்றிருந்து, மக்களுக்கு அறவுரைகளை எடுத்துச்சொல்லிவந்தனர்.

சமணத் துறவிகள் வாழ்ந்த அறப்பள்ளிகளைப் போலவே, பௌத்தத் துறவிகள் வாழ்ந்திருந்து அறநெறியும் கல்வியறிவும் அறிவுறுத்திய பௌத்தப் பள்ளிகளும் மதுரை நகரிலே இருந்தன.

இவையன்றியும், மக்களிடத்தே அருள்கொண்டு தொண்டாற்றிவந்த அருளுடைச் சான்றோரான, அந்தணர் பலரும் இருந்து பணிநிகழ்த்திய பள்ளிகளும் மதுரையில் இருந்தன.

### அறங்கூறும் அவையம்

இன்று, நம் நாட்டின்கண் பல்வேறு வகையான நீதி மன்றங்கள் விளங்கக் காணுகின்றோம். இவ்வாறே, பழைய நாளைய மதுரையின் கண்ணும், அறங்கூறும் அவையங்கள் அறநெறியினைப் பேணிவந்த சிறப்பினை மதுரைக் காஞ்சி.

> **அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்**
> **செற்றமும் உவகையும் செய்யாத காத்து**
> **ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகிச்**
> **சிறந்த கொள்கை அறங்கூறு அவையமும்**
> (489-492)

என்று கூறுகின்றது.

அறத்தைச் சொல்லும் முறையிலே அவர்கள் அஞ்சாமை உடையவராக இருந்தனர். அவலமும் ஆர்வமும் நீக்கிய உள்ளத்தினராகவும் அவர்கள் விளங்கினர். சினமும் மகிழ்வும் என்றில்லாது, உள்ளத்தை நடுவுநிலையோடு பேணியவராகத் துலாக்கோல் போன்ற செம்மையினைப் பூண்டவராகச் சிறந்த கொள்கையுடன் அச் சான்றோர்கள் நீதி வழங்கினார்கள்.

### வாணிகர்கள்

வாணிகம் என்ற சொல்லோடு, இன்று ஒரு புதிய செய்தியும் கூறப்பட்டு வருகின்றது. அறநெறிக்கு மாறாக நடந்தேனும் பெரும்பொருள் ஈட்டுபவர் பெரிய வாணிகர்கள் என்ற இந்நாளில் பேசப் பெறுகின்றனர். அந்நாளைய மதுரை வணிகரோ இத்தன்மையர் அல்லர். அவர்கள் அறவழி பிழையாதவர்; முறைமையோடு நடந்து வந்தவர். அவருடைய மாளிகைகள் குன்றுகளைப் போன்றவாகச் சிறப்புடன் விளங்கின. பல்வகையான பண்டங்களோடு உணவுப்பொருட் களும் ஏராளமாகக் குவியல் குவியலாக மலைபோற் குவிந்து அங்கே கிடந்தன. மலை நாட்டுப் பொருள்களும், நிலத்தே விளைந்தனவும், கடல்படு பொருள்களும், மற்றும் பல்வேறான பொருள்களும் விளங்க, வாணிகம் முறைதவறாமல் நிகழ்ந்து வந்தது. பொருள்களுக்கு விலையாகத் தரப்படுவன பொன்னும் முத்துமாக இருந்தன.

### தொழிலாளர்கள்

வாணிகர்களைப் போலவே, பல்வேறான கைத் தொழில் வல்லுநரும் மதுரை நகரிலே அந்நாளில் சிறப்புடன் விளங்கினார்கள்.

இரத்தினங்களைத் துளையிட்டு அவைகளைக் கோத்துப் பல்வேறான அணிவகைகளாகச் செய்வோர்; பொன்னைப் புடமிட்டு ஒளிர்கின்ற பல்வேறு அணிகலன்களைச் செய்பவர்கள்; பொன்னை உரைத்துக் காண்பவர்கள்; ஆடைகளை விலைகூறி விற்கும் வணிகர்கள்; செம்பினை நிறுத்து விலைக்குக் கொள்பவர்கள்; புதுமையான சித்திர வேலைப்பாடுகளைத் துணிகளிலே செய்து தருபவர்கள்; பூவும் புகையும் ஆய்ந்து விலைப்படுத்துவோர்கள்; கண்டதைக் கண்டவாறே தீட்டிக் காட்டும் ஓவியக் காரர்கள்; இவ்வாறான பற்பலரும் திரள்திரளாகச் செறிந்திருந்ததும் அந்நாளைய மதுரைப்பேரூர் ஆகும்.

இவ்வாறு, வளத்தால் பெரிதும் பொலிவுற்று விளங்கிய மதுரைப் பேரூரின்கண், அந்நாளிலே மக்களும், மன்னரும், படைஞரும், வணிகரும், மற்றும் பல்லோரும் இன்ப நல்வாழ்வினராக ஏற்றமுடன் திகழ்ந்தனர் என்று நாம் அறிதல் வேண்டும்.

மதுரைக் காஞ்சியின்கண் நாம் காணும் மதுரைப் பேரூரினைப் பற்றிய செய்திகளுள் இவை சிலவாகும். அந்நூலினை ஆழ்ந்து கற்று அதனிடத்துக் கூறப்பெறும் பலவற்றையும் நாம் அறிந்து கொள்ளல் மேலும் பயன் தருவதாகும்.

## 15. பாண்டியப் பேரரசர்கள்

பாண்டியரின் கோநகராக விளங்கிய மதுரை மூதூரினைப் பற்றி இதுவரை கண்டோம். இந்தப் பெருமைகளுட் பலவும் மதுரையின்கண்ணிருந்து அறம் பிறழாது ஆட்சிநடாத்திய பேரரசர்களின் ஆட்சிச் சிறப்பினாலேதான் அன்று உருவாயின. ஆதலின், அவருட் சிறப்பான சிலரைப் பற்றியும் இப்பகுதியில் தெரிந்து கொள்வோம்.

### பாண்டியன் அறிவுடை நம்பி

இவன், தன் பெயரினுக்கு இணங்க அறிவு மேம்பாட்டிற் சிறந்தவனாக விளங்கியவன். தமிழ்ப் புலமையில் தலைசிறந்தவனாகவும் இவன் விளங்கினான். புதல்வர்களால் உண்டாகும் ஒப்பற்ற இன்பத்தைப்பற்றி இவன் கூறும் கருத்துக்கள் மிகவும் அருமையுடையவாகும். "மக்கட் செல்வம் இல்லாதவர்கட்குத் தாம் உயிர் வாழ்ந்ததன் பயனென்பதே இல்லை" என்று இவன் கூறியுள்ளான். இவனைப் பாடியவர், நட்பிற்கு இலக்கணமாகச் சான்றோராற் போற்றப் பெறுபவரான பிசிராந்தையார் ஆவர்.

## ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

இவன், தன் ஆட்சிக்காலத்தில் வெற்றிப் பெருமிதத்தினாலே புகழ்பெற்றுத் திகழ்ந்த பேரரசன் ஆவான். தமிழகத்துப் படையெடுத்து வந்த வடவாரியப் படையினரை வென்று வாகை சூடியவனும் இவன். இலங்கைக் கயவாகுவும், இவனும், கரிகாற்சோழனும் ஒரேகாலத்தில் இருந்தவர்கள் ஆவர். இவன் பாடிய செய்யுள் ஒன்றும் புறநானூற்றில் உள்ளது.

## இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன்

இவன், அந்நாளைய சேரசோழரினும் சிறப்புடைய பெருமன்னனாகத் திகழ்ந்தவன். காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், ஆவூர் மூலங்கிழார், வடமவண்ணக் கண் பேரிசாத்தனார், மருதனிள நாகனார், நக்கீரனார் ஆகிய புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற சிறப்பினன்.

## கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி

இவன், இன்று காளையார் கோயில் என வழங்கும் கானப்பேரெயில் என்னும் இடத்தில் நிகழ்ந்த போரிலே வெற்றிபெற்ற புகழினை உடையவன். ஐயூர் மூலங்கிழார், ஔவையார், கடுவன் இளமள்ளனார் ஆகிய புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர்.

## பாண்டியன் முடத்திருமாறன்

சங்ககாலத்திலே, இடைச்சங்கத்தின் இறுதியிலே, கபாடபுரத்திலிருந்து அரசியற்றியவன் இவன். இவன் காலத்தேதான் பாண்டிய நாட்டின் பெரும்பகுதியும் கடலாற் கொள்ளப்பட்டதாகி மறைந்தது. இவனே நாம்கண்ட, புகழாற் பொலிவுற்ற மதுரைப் பேரூரினை அமைத்தவன் என்று அறிஞர்கள் உரைப்பார்கள். கடைச் சங்கத்தை நிறுவியவனும் இவனே யாவன். தமிழ் நலம் பேணியது மட்டுமன்றித் தானே தமிழ் உணர்ந்த புலவனாகவும் விளங்கியவன் இவன்.

## பாண்டியன் மதிவாணன்

இவன், கடைச்சங்கத்தினைப் புரந்துவந்த பாண்டியர் களுள் ஒருவனாவான். தமிழ்ச் செய்யுள் இயற்றும் ஆற்றலையும் இவன் பெற்றிருந்தான். நாடகத்தமிழ்நூல் ஒன்றனை இயற்றி, அதனைச் சங்கத்தே அரங்கேற்றியும் சிறப்புற்றான். 'மதிவாணர் நாடகத் தமிழ் நூல்' என்னும் பெயருடன் வழங்கிவந்த அந்நூல், இந்நாளிற் கிடைக்கப் பெறவில்லை.

### கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி

இவன் கடலுள் சென்ற காலையில் உயிர்துறக்க நேர்ந்த காரணத்தினாலே இப் பெயர் பெற்றவன். 'கடலிற் கலஞ் செலுத்துவதினும், கடற்போர் இயற்றிப் பகைவரைப் புறங்காண்பதினும் ஆற்றலுடையவன்' என இவனைப்பற்றிக் கூறுவர். பரிபாடல், புறநானூறு ஆகியவற்றுள் இவன் பாடிய பாடல்கள் உள்ளன. இவனுடைய 'உண்டால் அம்ம' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் மிகச்சிறந்த சுவையுடையதாகும்.

### பொற்கைப் பாண்டியன்

நீதியின் செம்மைக்காகத் தன் கையைத் தானே குறைத்துக்கொண்டவன் இவன். இந்தச் செய்தியினை, 'நீதி சிறந்த மதுரை' என்ற பகுதியிற் கண்டோம்.

### கீரஞ்சாத்தன்

இவனைப் பாடியவர் ஆவூர் மூலங்கிழார் என்னும் அருந்தமிழ்ச் சான்றோர் ஆவர். போரிற் புறமுதுகு காட்டி ஓடுகின்ற வீரருக்கு முன்னே சென்று ஊக்க மூட்டித் துணை நிற்கும் சிறந்த வல்லமைகிளாசிக் பிரிண்டர்ஸ் செ - 2கிளாசிக் பிரிண்டர்ஸ் செ - 2யுடையவன் இவன் ஆவான்.

### கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி

இவனது ஆண்மையை வியந்து ஐயூர் முடவனார், மருதனிள நாகனார் என்போர் பாடிப் போற்றியுள்ளனர்.

### சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்

இவன், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்னும் சான்றோராற் பாடப்பெற்ற பெருமையினை உடையவன். பகைவரிடத்தே பெரிதான சினமும், அன்பரிடத்தே மிகுதியான அருளும் கொண்டிருந்தவன்.

### தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

பாண்டியர்களுள் மிகவும் புகழுடன் வாழ்ந்த பேரரசன் இவன் ஆவான். இடைக்குன்றூர் கிழார், கல்லாடனார், குறுங்கோழியூர் கிழார், நக்கீரர், பரணர், பொதும்பில்கிழார் மகனார், மதுரைக் கணக்காயனார், மாங்குடி மருதனார் ஆகிய சான்றோர்கள் பாடிப்போற்ற வாழ்ந்தவனும் இவன். சேரமான்

யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையை வென்று வாகை சூடியவன். மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை என்னும் ஒப்பற்ற பாட்டுக்கள் இவனைக் குறித்து எழுந்தனவே. இவனுடைய சிறப்பினை அவனை விதந்து போற்றுகின்றன.

### பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

இவன் பகைவரை அறப்போராற்றி வெற்றிகொண்டு விளங்கிய ஆற்றல் கொண்டவனாவான். காரிகிழார், நெடும்பல்லியத்தினார், நெட்டிமையார் ஆகிய சான்றோர் களாற் பாடப்பெற்றவனும் இவன் ஆவான்.

### வெள்ளியம்பலத்துத் துஞ்சிய மாறன்வழுதி

இவன், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருமா வளவனுடைய நண்பனாகத் திகழ்ந்தவன். காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவர் இவனைப் போற்றியுள்ளனர்.

### நம்பி நெடுஞ்செழியன்

இவனும் ஆற்றலுடைய பேரரசனே யாவான். இவனுடைய சிறப்புக்களைப் பாடியவர், பேரெயின் முறுவலார் என்னும் புலவர் பெருமான் ஆவார்.

### வடிம்பலம்ப நின்ற பாண்டியன்

'முந்நீர் விழவின் நெடியோன்' எனவும் இவனைக் குறிப்பார்கள். நெட்டிமையார், மாங்குடி மருதனார் ஆகியோராற் பாடப்பெற்றவன் இவன்.

### புலவராயிருந்த பாண்டியர்கள்

மேலே குறித்த பாண்டியப் பேரரசர்கள் அல்லாமல், பல்புகழ்கொண்டு வாழ்ந்திருந்த பாண்டியரும் பலராவர். பொற்கைப்பாண்டியன், பூதப்பாண்டியன், பசும்பூண் பாண்டியன் என்னும் இவர்களும் சிறப்புடன் விளங்கியவர்களே யாவர். இப்பாண்டியப் பெருமன்னர்களுள் புலமையாற் சிறப்புற்றுத் தமிழ்ச் செய்யுள் செய்து சிறந்தவர்கள் சிலர். அவர்கள், பாண்டியன் அறிவுடை நம்பி, இளம்பெரு வழுதி, உக்கிரப் பெருவழுதி, ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், நல்வழுதியார், ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், ஏனாதி நெடுங்கண்ணன், தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பாண்டியன் பன்னாடு தந்தான், பாண்டியன்

மாறன்வழுதி, முடத்திரு மாறன் ஆகியோராவர். இவரன்றிப் பூதப்பாண்டியன் தேவியின் பாடலொன்றும் சங்கத் தொகை நூல்களுள் காணப்பெறும்.

இவ்வாறு, தமிழ் அறிந்த பெருமன்னராகவும், தறுகண்மை கொண்ட சிறப்பினராகவும், தம்புகழ் நிறுவிச் சென்ற பாண்டியர்களின் புகழ்பெற்ற கோநகராக விளங்கியதும், அந்நாளைய மதுரைப் பேரூர் ஆகும்.

## 16. முத்தமிழ் மதுரை

சங்க கால மதுரைபற்றி, இலக்கியங்களாலும், பிற வழிகளாலும் அறியப்படும் செய்திகளை எல்லாம், இதுவரை மிகச்சுருக்கமாக உரைத்தோம். இவை கடைச்சங்க காலத்து மதுரை பற்றிய செய்திகள் மட்டுமே.

முதற்சங்கம் இருந்த மதுரையோ குமரிக் கண்டத்தில் இருந்தது. அது கடல்கோளால் மறைந்தது. அதுபற்றிய பிற செய்திகள் யாதும் இன்றுவரை தெரியவில்லை.

'கடைச்சங்க காலம்' என்பது, இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலம். அந்தக் காலத்து மதுரை நகரும், மதுரைவாழ் மக்களும், மதுரையிலே புகழுச்சியில் சீர்பெற்றிருந்த மதுரத் தமிழும், நம் நினைவில் நிலைத்துநின்று, என்றும் பசுமையூட்ட வேண்டும். அந்த மதுரையார் வாழ்வும், மதுரை மன்னர்களின் ஆட்சியும், மதுரைப் புலவர்களின் செறிவும், மறக்கவே முடியாதன. 'மீண்டும் அடையமுடியுமா?' என்னும் ஏக்க நினை வோட்டத்தில், நம்மை ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடுத்துவன அவை. அவற்றுள், நம் நினைவில் வைக்கவேண்டிய சில செய்திகள் மட்டும் இங்கே, இந்தப் பகுதியில் நாம் நினைவுகூர்வோம்.

### தமிழாய்ந்த பேரவை

மொழியை, எண்ணத்தை வெளிப்படுத்தும் ஒரு கருவி மட்டுமே யென்று சிலர் இந்நாளிற் சொல்வார்கள். 'மொழியே மக்கள் வாழ்வின் உயிர்நாடி' என்று போற்றியவர்கள் பழைய காலத்து மன்னரும் சான்றோரும். ஆகவேதான், புலவர்களின் செய்யுட்களைத் தொகுத்து ஆராய்ந்து, செம்மையுடன் பேணிக்காக்கும் நெறியைக் கண்டனர். இவ்வாறு கண்ட அமைப்புத்தான் 'தமிழ்ச்சங்கம்'. இதை நாம் மறந்துவிடக்

கூடாது.

சங்கத்தார் தொகுத்துத் தந்துள்ள தொகைகளின் வளமையும், சால்பும், நயமும் அன்றைய மொழிவளர்ச்சியின் சிறப்பைக் காட்டும். அத்துடன், தமிழ் இலக்கியத்தினைப் பேணிக்காப்பதில், செம்மையை நிலைப்படுத்துவதில், தழிழறிஞர்களுக்கு இருந்துவந்த மனஉறுதியையும், ஆர்வத்தை யும் தெளிவையும் காட்டும்.

பாண்டியர் கோநகரில், பாண்டியர் ஆதரவில் இயங்கிய தமிழ்ச் சங்கம், பாண்டியர் புகழ்பாடும் செய்யுட்களை மட்டுமே தேடித் தொகுக்கவில்லை. சேரர் புகழும், சோழர் புகழும், மற்றும் பலர் புகழும் பாடியுள்ள பல செய்யுட்களையும் ஒருங்கே தேடித் தொகுத்துள்ளனர். இது, அவர்களின் நடுநிலையுள்ளத்தையும், தமிழ் வளத்தை அல்லாமல், பிற அரசியல் சார்புகளைப்பற்றிக் கருதாத தாய்மொழிப்பற்றின் தூய்மையையும் காட்டுவதாகும்.

பாண்டியர் சங்கத்தைப் புரந்தாலும், பாண்டிய மன்னர்களே பெரும் புலவர்களாக இருந்தாலும், அவர்கள் தமிழையும், தமிழறிந்த சான்றோரையும் பெரிதும் மதித்துப் போற்றினார்களேயல்லாமல், அவர்கள் பணிகளில் குறுக்கிடவில்லை. தம்முடைய எண்ணங்களை அவர்கள் பாற் சுமத்த முனையவில்லை. தமக்கு வேண்டியவர்கள் செய்யுட் களைச் சங்கம் ஏற்கவேண்டும் என்று வலியுறுத்தவும் இல்லை. "மொழியின் சீர்மை" என்பது, 'தன்னலங் கடந்த பொதுமை உணர்வு' என்ற உறுதியோடு, அந்தச் செவ்வியையே பாண்டியர்கள் பேணிவந்தனர்.

தமிழறிந்த சான்றோர்க்குப் பாண்டியரும், அக்காலத்துப் பிற அரசத்தலைவர்களும் மனங்கலந்து அளித்த அந்தப் பெரிய உரிமைதான், அவர்களைத் 'தமிழ்நலம்' ஒன்றே கருதச் செய்து, என்றும் நிலைக்கும் இலக்கிய மணிகளை, காலத்தை வெல்லும் கருத்துச் செல்வங்களை, ஆராய்ந்து தொகுத்துத் தருகின்றதற்கு உதவியது.

இந்த உரிமையிலே, அரசுத் தலையீட்டை அவர்கள் சந்திக்க வேண்டியதே ஏற்படவில்லை. தெய்வத் தலையீட்டையும் அவர்கள் ஏற்கவில்லை என்பதற்கு, 'கொங்கு தேர் வாழ்க்கை' என்னும் செய்யுளும், அதுபற்றிய வாதங்களும் சிறந்த சான்றாகும். நக்கீரனார் தம் கருத்தை அழுத்தமாக வலியுறுத்திய துணிவு தமிழ்பேணும் துறையிலே பொறுப்பிலிருப்பவர்களிடம் என்றும் நிலவ வேண்டிய துணிவும் கடமையுணர்வும் ஆகும்.

இந்தத் துணிவு தொய்வடையும்போதுதான், தமிழின் பெருமையை மக்கள் மறக்க நேர்கின்றது.

இவற்றுடன், பழைய தமிழ்ச்சங்கத்தில் விளங்கிய ஒருமையுணர்வையும் நாம் காணலாம். சங்கத்துப் பொறுப்பில் இருந்தவர்கள் மட்டுமே, தாங்கள்தாம் தமிழின் உரிமை யாளர்கள் என்று எதையும் வலியுறுத்தவில்லை. நாடோடி வாழ்வினரான கபிலர், பரணர், ஔவை போன்றோர்களும் சங்கத்தின் பெருமதிப்புக்கு உரியவராயிருந்தனர். தமிழ் வளமை பாராட்டப் பெற்றதேயல்லாமல், அது வேறுவேறு தகுதியும் பதவியும் பற்றிய கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்யப் படவில்லை.

குறவர் குடியினர், பாணர் குடியினர், வேளாண் மாந்தர், வாணிகமாந்தர், கொல்லர் குடியினர், அந்தணர், நாகர், ஈழத்தார் போன்ற எல்லாக்குடியினரும் தமிழ் நிழலில் ஒருமையுணர்வு பெற்று, ஒரே சீராக மதிக்கப்பெற்று, போற்றப் பெற்றமையும் சங்ககால மதுரையின் தனிச்சிறப்பாகும்.

## ஆட்சியின் செவ்வி

நாடு காவல் பூண்ட பாண்டியர்களோ, மிகமிகச் சிறந்த ஆட்சியாளர்களாக விளங்கினார்கள். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் பொன்மொழிக்கு இலக்கணமாக வாழ்ந்தார்கள். குடிமக்களின் இன்ப துன்பங்களைத் தமதாகவே கொண்டு உயர்ந்தார்கள். மறமாண்பிலும், மனமாட்சியிலும் சிறப்புற்றார் போன்றே, தமிழ்ப்புலமையிலும் சிறப்புற்றிருந்த செவ்வியாளராக விளங்கினர். இதனால், தமிழ் அவர்கள் மூச்சாயிற்று, நாட்டின் உயிராக ஓங்கி வளர்ந்து யாண்டும் ஒலிமுழக்கிற்று.

பொற்கைப் பாண்டியன் வரலாறும், கோவலன் கொலைக்குத் தானே பொறுப்பாளன் என்று துடித்து உயிர் விட்ட பாண்டியன் நெடுஞ்செழியனும், நீதிக்கு நிலையான நினைவுச் சின்னங்களாவர். குற்றம் நேர்ந்ததுபற்றிப் பிறர்பால் பழிபோடவோ, தம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவோ அவர்கள் முயலவில்லை. தம் காவலின் பிழை யென்று கருதித் தாமே வருந்தினர்; உயிர் நீத்தனர்.

ஆட்சியின் மேலிடத்திருந்தவரின் இந்த அறமாண்பு பிறர்பாலும் ஒளிபரப்பியதால், எங்கணுமே அறம் நின்று

நிலைத்துச் செங்கோலோச்சிய சிறப்பினதாகவும் மதுரை விளங்கிற்று.

## விருந்தோம்பல்

இடைக்குல மகளான மாதரி, கோவலன் கண்ணகியரை, தான் முன்பே கண்டும் கேட்டும் அறியாத புதியவரை, விருந்தாகக் கொண்டு, சொந்த மகளையும் மருமகனையும் போலவே பேணிக்காத்த மனநெகிழ்வை மதுரையின் விருந்தோம்பற் பண்பிற்கே எடுத்துக் காட்டாகக் கூறலாம். பாற்பயன் கொண்டு வாழ்ந்த அந்த அம்மையின் செம்மையான பாசவுணர்வே, அக்காலத் தமிழ் மதுரையின் பொதுப்பண்பென்றும் போற்றலாம்.

## பிரிவற்ற ஒருமை

சங்ககால மதுரைமக்கள் பல தொழில்கள் பேணி வந்தனர். பல குடியினராக வாழ்ந்தனர். பல கடவுட் கொள்கைகளைப் பேணினர். எனினும், அனைவரும் ஒருமை யுணர்வுடன் வாழ்ந்தனர். பேதம் பாராட்டவோ, உயர்வு தாழ்வு கற்பித்தலோ, மாறுபட்டுப் பகைத்தலோ நிலவவில்லை. இதனால், மனிதவுணர்வில் மேலோங்கிய உணர்வினராகவே அவர்கள் விளங்கினர். மதுரையின் மாண்புக்கு இந்த ஒருமையுணர்வும் தனிக் காரணமாகும்.

## மக்கள் மனத்தில் அறம்

அரசன் செங்கோல் தவறிற்றென்று துடிதுடிக்கும் மதுரை மக்களைச் சிலம்பிற் காண்கிறோம். அரசனைப் போலவே மக்களும் செங்கோன்மையை மதித்துப் போற்றிய சிறப்பு இதனாற் காணப்பெறும்.

## வேற்று நாட்டார்

மேலை நாட்டாராகிய ரோமரும், கிரேக்கரும், மற்றும் பல நாட்டினரும் வாணிகம் பேணவும் கலாசாரம் பேணவும் ஆர்வத்தோடு உறவுகொண்ட சிறப்பும் பழந்தமிழ் மதுரைக்கு இருந்தது. மதுரையாட்சி உலகளாவிய புகழ் படைத்திருந்த நிலையே இதற்குக் காரணமாகும்.

ஆரிய நாட்டாரின் அரசியல் ஊடுருவல் பாண்டியர் படைமறவனான பழையன் மாறனால் முறியடிக்கப்பெற்றது. ஆனால், அவர்கள் விரும்பி வந்து தமிழ் உயர்வும் பண்பும் அறிவதையோ, தமிழ் கற்றுப் புலமை பெற்றுச் சிறப்படை

வதையோ எவரும் தடுக்கவில்லை. மாறாக, அவர்கட்கு வேண்டுவன செய்து உதவினர் என்றே காண்கின்றோம்.

வடபுலத்திலிருந்து வந்து, தமிழகத்துத் தமிழின் சிறப்புக்குப் பணியாற்றியவர்களுள் அகத்தியர், தொல்காப்பியர், வான்மீகியார், மார்க்கண்டேயர் போன்ற பலர், தமிழின் செவ்விக்கும் சிறப்புக்கும் தொண்டாற்றியமை போற்றற்கு உரியதாகும்.

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவு உணர்த்தக் கபிலர் செய்த குறிஞ்சிப் பாட்டும், பிறவும் இந்தத் தமிழ் ஆர்வத்தையும், அக்காலத்தே தமிழுயர்வு உலகெலாம் மதிக்கப்பட்டுப் பலர் மதுரையை நாடித் தமிழ்கற்க வந்து கூடியதையும், மதுரை தமிழின் தலைமையிடமாகச் சிறப்புற்றிருந்தமையும் காட்டும்.

பரிபாடலுள், திருப்பரங்குன்றத்தே நிகழ்ந்ததாகக் கற்பித்துப் பாடியுள்ள வள்ளி தேவானையர் சண்டையும், ஆரியர்க்குத் தமிழுணர்வு ஊட்டுவதற்குப் பாடியதேயாகும்.

இதனால், அந்நாளிலும் வடபுலத்தார் ஊடுருவல் தமிழகத்தில் இருந்ததென்பதையும், அவர்களுள் சிலர் தமிழார்வத்தினராக இருந்தனர் என்பதையும், சிலர் தமிழறியாது தம்முயர்வு பாராட்டவே, தமிழறிந்தார் அவர்க்கும் தமிழுணர்வு ஊட்டித் திருத்தினர் என்பதையும் காணலாம்.

இதுபற்றியே, வடமொழியில் விளங்கும் பல தத்துவ விளக்க நூல்களைச் செய்தவர்கள், திராவிடப் பேரறிஞர்களே என்று சிலர் கூறுவர்.

இவ்வாறு, சங்ககால மதுரையானது, முத்தமிழின் கோநகராகவும் விளங்கிற்று எனலாம்.

## மறமாண்பு

மறமாண்பில் பழந்தமிழ்ப் பாண்டியர்கள் ஈடும் இணையும் அற்றுச் சிறந்திருந்தனர். அவர்களுடைய போர் மறத்தைப் பற்றிப் புறநானூற்றுச் செய்யுட்களுள் பல புலவர்கள் பாடிப் போற்றியுள்ளனர்.

கோட்டைகள், அகழிகள், காவற்காடுகள், எந்திரப் பொறிகள், நால்வகைப் படையணிகள் என்றெல்லாம் காவல்துறை மிகவும் வலிமை பெற்றிருந்ததென்றும் நாம் காண்கின்றோம். மறமாண்பிற் சிறந்த பழந்தமிழ் மக்களுள் 'மறவர்' என்றொரு குடியினரே இருந்தனர் என்பது,

மறமாண்பிலே மதுரை சிறந்திருந்த செவ்விக்கு மேலும் சான்று பகர்வதாகும்.

போரும், அதற்கென அமைந்த நெறிமுறைகளுடன் ஒழுங்குற நடந்ததையும், இந்நாட்போல ஆயுதமற்றோரையும், போர்க்களம் வராத மக்களையும் படைமறவர்கள் கொல்வதும் அழிப்பதும் இல்லை என்பதையும் காணலாம்..

## தெய்வ நம்பிக்கை

மக்கள் தெய்வ வழிபாடுகளிலும் மனங்கலந்து ஈடுபட்டு வந்தனர். தம் குறைகளைச் சொல்லி அவற்றைப் போக்குமாறு பணிந்தனர். பூவும் பலிப்பொருள்களும் தந்து போற்றினர். இவ்வாறு அவர்கள் பரங்குன்றப் பெருமானையும், திருமாலையும், வையையும், கொற்றவையையும், மற்றும் பல தெய்வங்களையும் வழிபட்டு வந்த மரபினையும் நாம் காணுகின்றோம்.

சமுதாய உணர்வோடும் தமிழ் உணர்வோடும் பக்தி யுணர்வும் இணைந்துவிளங்கிய சீர்மையை மதுரை அந்நாளில் பெற்றிருந்தது. அந்த உணர்வு மக்களுக்கு மனவலுவையும், தெளிவையும், எல்லா உயிரையும் போற்றும் அருளுணர்வையும் தந்தது. பரிபாடல் இந்த வழிபாட்டு நெறிகளை விளக்கிக்கூறும் சிறந்த நூலாகும்.

## பதிகம், சதகம்

பத்துப் பாடல்களுள் ஒரு கருத்தை வலியுறுத்தும் பதிக மரபும், நூறு பாடல்களுள் ஒரு பெருங்கருத்தை வலியுறுத்தும் சதக மரபும் அந்நாளிலேயே வழங்கிய இலக்கிய நன்மரபு ஆகும். இதனைப் பதிற்றுப்பத்தும், ஐங்குறுநூறும், பிறவும் காட்டும். இவ்வாறு புதிய இலக்கிய மரபுகளின் எழுச்சிக்கும் மதுரை வழிகாட்டி வந்தது.

பற்பல சமயங்களில் புலவர்கள் பாடிய செய்யுட்களைத் தொகுத்து வகைப்படுத்தி ஒழுங்கு செய்து பேணிய நூற்களுடன், திணை விளக்கங்களாகச் செம்மையுடன் செய்யப்பெற்ற தனித்தனி நூல்களும் அக்காலத்தே எழுந்துள்ளன. இவை கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை,, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி போன்ற தனி நூல்களாகும்.

## இன்ப வாழ்வு

மறமாண்பில் சிறந்திருந்த மதுரை மக்கள் இன்ப வாழ்வை

மறந்து புறக்கணித்தவரும் அல்லர். அதன் இனிய நயத்தை அறிந்தறிந்து துய்த்துக் களித்தவர்கள் அவர்கள்.

கவின் கலைகளின் ஏற்றமும், பூச்சுப் புனைவுகளின் செழுமையும் இந்த வாழ்வுக்கு மேலும் வளமையூட்டி வந்தன.

வையையிற் புதுநீர் வரவும், மதுரை மக்கள் நீராடிக் களித்த இன்பக் காட்சிகளைப் பரிபாடற் செய்யுட்கள் அழகாக ஓவியப்படுத்தி உரைக்கின்றன. அவற்றைக் கற்கும்போது, வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் வீணாக்காது நுகர்ந்து களித்த பழந்தமிழ் மக்களின் வாழ்வியற் சிறப்பு விளங்கும்.

## கற்பற மகளிர்

மகளிர் தம்மைப் பூசியும் புனைந்தும் களிப்பதிலும், சிறப்பாக இல்லறம் நடத்தி வாழ்வதிலும் சிறந்து விளங்கினர். காதல் வாழ்விலும் கற்பு வாழ்விலும் அவர்கள் பேணிய பெருமிதமும், திண்மையும் வியந்து போற்றற்குரிய மாண்பினவாகும்.

கணவன்மாரிடம் இவர்கள் கொண்டிருந்த பேரன்புக்கு எல்லையே கிடையாது. 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று, அவன் உயிரிழந்ததும் தானும் உயிர்விட்ட பாண்டிமா தேவியும், கணவனுக்கு ஏற்பட்ட பழிதுடைக்க வழக்குரைத்து வென்ற கண்ணகியும், தன் கணவன் மாயத் தீப்பாய்ந்து உயிர்விட்ட பூதப் பாண்டியன் தேவியும், பெண்மையின் தெய்வீக வடிவங்கள் ஆவர்.

## அறவோர் பலர்

அறநெறி காக்கும் அறவோர்களுக்கும் மதுரையிற் குறைவேயில்லை. இவர்கள் வந்து தங்குவதற்கென்றே 'புறஞ்சேரி' என்றொரு தனியிடமும், அதன்கண் பல வசதிகளும் விளங்கின. இவர்கள் மக்களால் மதிக்கப்பெற்று, மக்களுக்கு ஆன்ம உயர்வுக்கான பல நெறிகளையும் காட்டி வந்தனர்.

## பாரதம்

வடமொழி இதிகாசங்களில் பாரதம் தமிழ் மக்களை மிகவும் கவர்ந்தது. இராமாயணம் இத்தகு கவர்ச்சி அடையவில்லை. சங்க காலத்திலேயே பெருந்தேவனார் பாரதத்தைத் தமிழாக்கிப் 'பாரதம் பாடிய' என்னும் அடைமொழியும் பெற்றார். சிலம்பின் ஆய்ச்சியர் குறவையும், மற்றும் பல முல்லைப்பாக்களும், பாரதக் கதை பற்றிய தமிழரின் ஈடுபாட்டை விளக்கும்.

வடபுலத்துக் கண்ணனின் மதுரைக்கும், தென்னவரின்

தீந்தமிழ் மதுரைக்கும் நெருங்கிய தொடர்பு அன்றும் இருந்தது என்பதற்குப் பல சான்றுகளை நாம் காட்டலாம்.

## புலமை வெள்ளம்

அந்தணார் கபிலரும், நக்கீர தேவரும், பரணரும், மதுரைக் காஞ்சி பாடிய மாங்குடி மருதனாரும் மற்றும் மதுரைக் கணக்காயர் போன்ற எண்ணற்ற பெரும்புலவர்களும் இருந்து தமிழ்வளம் பெருக்கிய பொற்காலமும் கடைச்சங்க காலமே ஆகும். இவர்களாலும், மதுரை பெரும் புகழ்பெற்றுத் 'தமிழ் மதுரை' யாகவே விளங்கியது.

மதுரை நகரப் பெரும்புலவர்களாகச் சங்கத்தொகை நூற்களுள் காணப்படுவோர் பெயர்களை எண்ணினால், அவர்களுட் பலர் பற்பல தொழில்களையும் செய்துகொண்டு வாழ்ந்தவர்கள் என்பதையும், தமிழ்ப் பற்றிலும் அவர்கள் சிறந்து விளங்கியவர்கள் என்பதையும் காண்கின்றோம்.

ஆசிரியர்களான கணக்காயனார், இளம்பாலாசிரியர், பாலாசிரியர் போன்றாரும், அறுவை வாணிகர், ஓலைக்கடையார், காமக் கணியர், கூத்தர், கொல்லர் போன்ற பலப்பல தொழிலோரும் தமிழ்ப்புலமைப் பெற்று விளங்கிய சிறப்பினாலே, பொதுமைநிலை பெற்றுத் தமிழ் அந்நாளிலே உயர்ந்து நின்றது. 'தமிழ் கற்பிப்பதும் எழுதுவதும் பேசுவதும் பாடுவதும் தம் தொழிலாகக் கொண்டவர் மட்டுமே தமிழைக் காக்கும் உரிமையாளர்கள்' என்று, மக்கள் பொறுப்பில்லாமல் விட்டுவிடவில்லை. அனைவரிடமும் தமிழார்வம் பரவியிருந்தது. அந்தத் தமிழார்வமே தமிழின் ஈடற்ற செவ்விக்கும் காரணம் எனலாம்.

## இசையும் கூத்தும்

முத்தமிழ் நித்தமும் முழங்கிய மதுரையிலே, பாணர் குடியினரும் மற்றும் பலரும் இசைத் தமிழைப் பரப்பியும், வளப்படுத்தியும் வாழ்ந்து வந்தனர். பண் அமைந்துள்ள பரிபாடல் செய்யுட்கள் பழந்தமிழ் இசைப்பாக்களாகவே உலவுகின்றன.

இவ்வாறே, கூத்திலும் மதுரை புகழ் பெற்றிருந்த தென்பதனை, மதுரைக் காருலாவியங் கூத்தனார், மதுரைத் தமிழக் கூத்தனார், சேந்தன் கூத்தனார் போன்ற புலவர்களின் பெயர்களே நமக்கு உணர்த்துவனவாகும். கூத்து

தனித்துறையாகப் பயிலப்பட்டும், பயிற்றப் பட்டும், பாராட்டி வளப்படுத்தப்பட்டும் வந்த சிறப்பும் பழ மதுரைக்கு இருந்தது. 'மதுரைத் தமிழ்க் கூத்தனார்' என்னும் பெயர், 'தமிழ்க் கூத்து' அன்று நிலவிய கூத்துக்களில் தனிவகை எனவும், இவ்வாறே பிறபுலக் கூத்துகளும் மதுரையில் நிலவின என்றும் காட்டுவதாகும்.

## பொற்காலம்


ஆகவே, கடைச்சங்க காலத்து, மதுரைப் பேரூரைத் தமிழின், தமிழரின் பொற்காலத்தை நினைப்பிக்கும் பேரூர் என்றே போற்றலாம்; போற்றவும் வேண்டும்.

## முடிவுரை

இவ்வாறு சங்ககால மதுரையானது எல்லாத் துறைகளிலும் ஏற்றம்பெற்று, தமிழின், தமிழரின் கோநகராக, கொடிமாடக் கூடலாக அந்நாளிலே விளங்கிற்று.

இதன் பின்னர் வந்த பிற்காலப் பாண்டியர்கள் காலத்திலும் மதுரையின் மாண்பு காப்பாற்றப் பட்டே வந்தது. எனினும், பிற்காலத்தே களப்பிரர், ஹொய்சாளர், நாயக்கர்கள், மகமதியர்கள் போன்ற பலரின் படையெடுப்புக்களால் இன்னலும் துயரமும் பெற்றுத் தன் சிறப்பில் குன்றிய தென்றாலும், மதுரை மீண்டும் மீண்டும் தன் உயர்வைப் பேணி எழுந்து புகழ்பெற்றும் வந்துள்ளது என்றும் காணலாம்.

✪ ✪ ✪



மதுரை மீனாட்சி கோவிலில்

# முத்தமிழ் மதுரை

## புலியூர்க் கேசிகன்



GO 453


நூல் கிடைக்குமிடம் :

நூலங்காடி...
www.thebookstore.in
e-mail : gowra_09@yahoo.in

கௌரா ஏஜென்ஸீஸ்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.


ரூ.50